விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஆவணி 31 வியாழக்கிழமை (17.09.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 272

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.Jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே



## போர்க்குற்றங்கள் நிரூபணம்

# சர்வதேச நீதிபதிகளின் விசாரணைகள் தேவை!

## அறிக்கையை வெளியிட்டது ஐ.நா



- போர்க்குற்றங்கள் இடம்பெற்றுள்ளன.
- படுகொலைகள் நடந்தேறின.
- பாலியல் வன்முறை மேற்கொள்ளப்பட்டன.
- சித்திரவதைகள் நடைபெற்றன.
- காணாமல் போகச் செய்யப்பட்டனர்.
- சிறுவர்கள் படைகளுக்கு சேர்க்கப்பட்டனர்.

(ஜெனிவா)

இலங்கைப் போரின் இறுதிக்கட்டத்தில் 2002 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை போரில் ஈடுபட்ட இருதரப்பினராலும், போர்க்குற்றமும், மனித குலத்துக்கு எதிரான குற்றமும் செய்யப்பட்டிருப்பதாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கை கூறுகின்றது.

சட்டத்துக்கு முரணான படுகொலைகள், பாலியல் வன்முறை மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறை, கட்டாயமாக காணாமல் போகச் செய்தல், சித்திரவதை, கட்டாயமாக சிறாரைப் படைக்குச் சேர்த்தல், பொதுமக்கள் மற்றும் பொதுச் சொத்துக்கள் மீதான தாக்குதல், மனித நேய உதவிகளை மறுத்தல், தடுத்து வைத்தலின் போதான வன்முறைகள் என இலங்கை அரசாங்கம், விடுதலைப்புலிகள், அரசோடு சேர்ந்து இயங்கிய துணை இராணுவக் குழுக்களினால் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் வன்முறைகளை வகைப்படுத்தி விளங்கியுள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு, ஆண்டுக்கணக்கில் இதற்கான நீதி மறுக்கப்பட்டு, மறைக்கப்பட்டு வந்ததாகவும் அதில் கூறியுள்ளது.

சர்வதேச நீதிபதிகள், சட்ட நடவடிக்கை அதிகாரிகள் மற்றும் சட்டத்தரணிகள் உள்ளடங்கலான சர்வதேச மற்றும் உள்நாட்டு அம்சங்கள் அடங்கிய சிறப்பு கலப்பு நீதிமன்றம் இந்தக் குற்றங்களை விசாரிக்க வேண்டும் என்றும் அது பரிந்துரைத்துள்ளது. (24ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை மீது சர்வதேச விசாரணை தமிழக சட்டசபையில் தீர்மானம்

### வடக்கு முதல்வர் நன்றி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை மீது சர்வதேச விசாரணையே வேண்டுமென தமிழக சட்ட சபையில் தீர்மானம் நிறைவேற்றியமைக்கு தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவுக்கு வட மாகாணமுதலமைச்சர்சிவிவிக்னேஸ்வரன் நன்றி தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டசபையும் வடக்கு மாகாண சபையும் இலங்கை மீது சர்வதேச விசாரணை கோரியிருப்பது ஒட்டுமொத்த தமிழர்களும் ஒன்றுசேர்ந்து கோரியிருப்பதனை எடுத்துக் 24ஆம் பக்கம் பார்க்க....

## ஐ.நாவின் அறிக்கை கூட்டமைப்பு வரவேற்பு

(கொழும்பு)

மனித உரிமை ஆணையாளரினால் கொண்டுவரப்பட்ட அறிக்கையின் உள்ளடக்கங்களை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு முழுமையாக வரவேற்பதாக கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவையின் 30 ஆவது கூட்டத்தொடர் தற்போது நடைபெற்று வரும் நிலையில் பேரவையின் ஆணையாளர் இளவரசர் செயிட் அல் ஹுசைன் இலங்கையின் இறுதி போர் குறித்தான அறிக்கை ஒன்றினை சபைக்கு நேற்று சமர்ப்பித்தார். 23ஆம் பக்கம் பார்க்க....

## அரசின் நடவடிக்கைக்கு நியூசிலாந்து ஆதரவு

(கொழும்பு)

உண்மையை கண்டறியும் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை அமைக்கப் போவதாக இலங்கை அரசாங்கம் கூறியிருப்பதை நியூசிலாந்து வரவேற்றுள்ளது.

நியூசிலாந்தின் வெளியுறவு அமைச்சர் முரே மெக்கியூலி இந்த வரவேற்பை வெளியிட்டுள்ளார். இலங்கையின் வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர, இந்த குழு அமைப்பு தொடர்பில் ஜெனிவாவில் தகவல் வெளியிட்டிருந்தார். இலங்கையின் இந்த முனைப்பை தமது நாடும் ஊக்கப்படுத்தும் என்று மெக்கி யூலி தெரிவித்துள்ளார். இந்த முனைப் புக்கள் வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் சமூகத்துககு அதிகாரத்தை பகிரும் நடவடிக்கைகளுக்கு உதவும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (எ-11)

## நாடு திரும்பினார் பிரதமர் ரணில்



(கொழும்பு)

இந்தியாவுக்கான மூன்று நாள் விஜயத்தை நிறைவு செய்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று மாலை 23ஆம் பக்கம் பார்க்க....

## ஐ.நாவின் அறிக்கை தீர்மானம் இம்மாத இறுதியில் நிறைவேறும்

(கொழும்பு)

இலங்கை குறித்த ஐ.நா மனித உரிமை ஆணைக்குழுவின் அறிக்கையின் மீதான தீர்மானம் இந்தக் கூட்டத் தொடரின் இறுதியில் விவாதிக்கப் பட்டு நிறைவேற்றப்படலாம் என்கிறார் ஆணைக்குழுவின் பேச்சாளர் ரூபர்ட் கோல்வில்.

இது குறித்து பேசிய கோல்வில், இது ஒரு பெரிய அறிக்கை. 9 ஆண்டு காலகட்டத்தில் நடந்த விஷயங்களை அது பரிசீலிக்கிறது. அது எப்படி இலங்கைக்குள்ளும் வெளிநாடுகளிலும் எப்படி பார்க்கப்படுகிறது என்பதை பார்க்கவேண்டும். பின்னர், ஐ.நா. மன்ற மனித உரிமைக் கவுன்சிலில் ஒரு தீர்மான வரைவு முன் வைக்கப்படும். அதையொட்டி ஒரு தீர்மானத்தை அவர்கள் கொண்டு வர விரும்பினால் அவர்களுக்குள் பேச்சு வார்த்தை நடத்தி, அதை அடுத்த சில நாட்களில் கொண்டுவருவார்கள் என்றார்.

இந்தத் தீர்மானம் கவுன்சில் கூட்டத்தொடரின் இறுதி நாட்களில் விவாதிக்கப்படும் என்று கூறிய கோல்வில் தீர்மான வரைவில் பிரச்சினை இருந்தால் கடுமையான விவாதங்கள் இருக்கும். அதில் விட்டுக் 24ஆம் பக்கம் பார்க்க....

## சோனியா - ராகுல் இலங்கை வருவர்?



(கொழும்பு)

இந்திய தேசிய காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி மற்றும் மகன் ராகுல் காந்தி ஆகியோர் விரைவில் இலங் 23ஆம் பக்கம் பார்க்க....

## ஐ.நா அறிக்கை பிரி.வரவேற்பு

(கொழும்பு)

இலங்கை தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் வெளியிட்டுள்ள அறிக்கையை வரவேற்றுள்ள பிரித்தானிய அரசாங்கம் அவ்வறிக்கை தொடர்பாக தாம் முழுமையான கவனத்தை செலுத்துவதாக தெரிவித்துள்ளது.

நேற்று வெளியிடப்பட்டுள்ள அறிக்கை தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள பிரித்தானியா வெளிவிவகார, பொதுநலவாய பணியக அமைச்சர் ஹியூகோ ஸ்வயர், வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையுடனும், இலங்கை அரசாங்கத்துடனும் தாம் இணைந்து பணியாற்றுவதற்கு எதிர்பார்த்திருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் இதுவரை காலமும் ஏற்பட்ட பிரச்சினைகளுக்கும், அதன் மூலம் ஏற்பட்ட பிணக்குகளுக்கும் நிலையான அமைதியான மற்றும் செழிப்பான வகையில் இலங்கையில் இனங்களுக்கிடையில் இணக்கப்பாட்டினை கொண்டுவர 23ஆம் பக்கம் பார்க்க....

# சர்வதேச விசாரணையை ஒருபோதும் ஏற்கமுடியாது

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு



(கொழும்பு)

போர்க் குற்றங்கள் குறித்து சர்வதேச விசாரணை நடத்தப்படுவதை ஏற்க முடியாது என்றும் சர்வதேச அளவில் ஒப்புக்கொள்ளக்கூடிய உள்நாட்டு விசாரணை நடத்துவது என்பதுதான் தங்களுடைய நிலைபாடு என்றும் சுகாதாரத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இலங்கைப் போரின் இறுதிக் கட்டத்தில் போரில் ஈடுபட்ட இரு தரப்பினராலும் போர்க் குற்றங்களும், மனித குலத் 23ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவுநிலை தவறாது நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## ஏல விற்பனை

யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம் 29.09.2015 காலை 10.00 மணிக்கு பாவனைக்குதவாத புத்தகங்கள் ஏலத்தில் விடப்படவுள்ளது.

(1806) - அதிபர்



## விசேட கருத்தரங்கு

வடமாகாண முகாமைத்துவ உதவியாளர் பரீட்சைக்கு சனி (19/9), ஞாயிறு (20/9), வியாழன் (24/9)
காலை 9.00 - 3.00 மணி வரை

**விரிவுரையாளர்**
**த.தவசேகர்**

யாழ்ப்பாணக் கல்லூரிப் பட்டப்படிப்புக்கள் பிரிவு
(யாழ்.ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கி அருகில்)

(1808)

இப்பரீட்சைக்கான கருத்தரங்குகள் வவுனியாவில் CBA- கதிரேசன் வீதி, கிளிநொச்சியில் எடிசன் கல்வி நிலையத்தில் நடைபெற உள்ளன. பதிவுகளை மேற்கொள்ளவும்

T.P : 0766883394



## நீங்கள் உங்கள் சமூகத்தில் மீது அக்கறை கொண்டவரா?

தற்கொலை செய்திகள் உங்களை வருத்துகின்றனவா? முன்பின் தெரியாதோருக்கு உதவத் தயாரா? எம்முடன் ஒரு தொண்டராக இணையுங்கள், வாரத்தில் ஒரு நாள் மட்டும் நான்கு மணித்தியாலங்கள் சம்பளம் இன்றி சேவையாற்ற வேண்டும். பயிற்சி வழங்கப்படும். காலை 9.00 - பி.ப 1.00 இடையில் அழையுங்கள்.

**0212228117,**
**0779008776**

(1804) (மதசார்பற்றது)

### கை கொடுக்கும் நண்பர்கள்

ஸ்ரீ லங்கா சுமித்ரயோ யாழ்ப்பாணக் கிளை
104, நான்காம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.


## இன்றைய போட்டிகள்

(யாழ்ப்பாணம்)
வல்வெட்டித்துறை ஈகிள் விளையாட்டுக் கழகம் நடத்தும் மின்னொளியிலான உதைபந்தாட்டப் போட்டியில் இன்று வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் சென் மேரிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து விண்மீன் விளையாட்டுக் கழகமும், இரவு 9 மணிக்கு நடைபெறும் போட்டியில் சென்.லூசியஸ் அணியை எதிர்த்து அந்தோனியார்புரம் சென்.அன்ரனிஸ் மோதவுள்ளது. (க)


## பாரதி நினைவு தினமும் முத்தமிழ் விழாவும் - 2015

யாழ்ப்பாணக் கல்லூரி தமிழ் மன்றத்தினரால் வருடந்தோறும் நடத்தப்படும் இவ்விழாவானது நாளை 18.09.2015 வெள்ளிக் கிழமை அன்று கல்லூரி ஒட்லி மண்டபத்தில் காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

*பிரதம விருந்தினர்*
**திரு.எஸ்.லலீசன்**
(உப அதிபர், ஆசிரியர் கலாசாலை, கோப்பாய்)

உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**தமிழ் மன்றத்தினர்,**
(1802) **யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை.**





## யாழ் நல்லூர் நாவலர் வீதி, சீரடி சாயி மந்திரின் 7-வது வருட வசந்த உற்ஷவம்

அன்பான அடியார்களே!

18.09.2015 - மாலை 4.30 மணிக்கு - கொடியேற்றம்
19.09.2015 - மாலை 4.30 மணிக்கு - மயில் வாகனம்
20.09.2015 - மாலை 4.30 மணிக்கு - பல்க்கி
21.09.2015 - மாலை 4.30 மணிக்கு அன்ன வாகனம்
22.09.2015 - மாலை 4.30 மணிக்கு - கப்பல் திருவிழா
23.09.2015 - மாலை 4.30 மணிக்கு - சர்ப்ப வாகனம்
24.09.2015 - மாலை 4.30 மணிக்கு - குதிரை வாகனம்
25.09.2015 - மாலை 6 மணிக்கு - சப்பறம்
26.09.2015 - மாலை 5 மணிக்கு - தேர்த்திருவிழா
27.09.2015 - மாலை 4 மணிக்கு - தீர்த்தம், கொடியிறக்கம்
28.09.2015 - மாலை 5 மணிக்கு - லெண்டித்தோட்ட உற்ஷவம்
29.09.2015 - மாலை 5 மணிக்கு - பைரவர் மடை (நாய் வாகனம்)

**அனைவரும் வருக! சாயிநாதன் அருள் பெறுக!**

(1663)

## சீரடி சாயி மந்திர்

314, நாவலர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே : 0777222568, 07748[illegible]



## ஏல விற்பனை

யா/ஊரெழு கணேச வித்தியாசாலை சுன்னாகம் 30.09.2015 (காலை 10 மணி) பழைய தளபாடங்கள் ஏலத்தில் விடப்படும்.

(1805) - அதிபர்



## பணியாள் தேவை

வன்னியில் உணவகம் ஒன்றுக்கு வேலையாட்கள் உடன் தேவை
**ரைஸ் தயாரிப்பவர்**
**ரொட்டி தயாரிப்பவர்**
**உணவு பரிமாறுபவர்கள்**
(சி-2187)

தொடர்புகளுக்கு :
0771711215, 0771262724


## யாழ்ப்பாணம் மாநகர சபை

### பெரிய கடை/ நவீனசந்தை மேல்மாடி/ பஸ் நிலையம்/நல்லூர் சந்தைக் கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் -2015

மாநகர சபைக்குச் சொந்தமான கீழ்வரும் இலக்கங்களைக் கொண்ட கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான விண்ணப்பங்கள் யாழ்.மாநகர சபையால் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| கேள்விப்படிவக் கட்டணம் | - ரூ.500.00 VAT+NBT |
| கேள்விப்பிணைப் பணம் | - ரூ.10,000.00 |
| கேள்விப்படிவம் விநியோகித்தல் | - 17.09.2015 |
| கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளல் | - 30.09.2015 மு.ப 10.00 மணிவரை |
| கேள்வி திறத்தல் | - 30.09.2015 மு.ப 10.30 மணிக்கு |

கேள்விப்படிவம் பெறுபவர்கள் தேசிய அடையாள அட்டையின் புகைப்படப் பிரதியைச் சமர்ப்பித்து, மாநகரசபையின் நானாவித இறைவரிப்பகுதியில் கேள்விப் படிவத்தினைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை உறையிலிட்டு ஒட்டி அரக்கு முத்திரையிட்டு உறையின் மேற்பகுதியில் தாங்கள் தெரிவு செய்யும் கடையின் இலக்கத்தைக் குறித்து **"ஆணையாளர் மாநகரசபை யாழ்ப்பாணம்"** என்ற முகவரியிட்டு அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

தபால் மூலமான விண்ணப்பங்கள் 30.09.2015 முற்பகல் 10 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். தாமதமாக கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் ஒருவர் சமுகமளிக்கலாம்.

சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை யாழ்.மாநகரசபைக்கே உரியது.

மேலதிக விபரங்கள் தேவைப்படின் மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் பெற்றுக்கொள்ளலாம்.

| கடைகள் விபரம் | ஏற்றுக்கொள்ளப்படும் ஆகக்குறைந்த கேள்வித்தொகை (தலா ஒரு கடைக்கு) |
|---|---|
| **நல்லூர் சந்தைக்கடை** | |
| இல.15/3 | 180,000.00 |
| இல.15/9 | 180,000.00 |
| **பஸ் நிலையம்** | |
| இல.11 | 1,800,000.00 |
| **மேல்மாடி** | |
| இல.04 | 2,040,000.00 |
| இல.05 | 2,040,000.00 |
| **பெரியகடை** | |
| இல.33 | 1,200,000.00 |

**குறிப்பு :**

- தங்களால் கோரப்படும் கேள்வித்தொகைக்கு மேலதிகமாக 11% வற் வரியும் 2% தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியும் சேர்த்து செலுத்துதல் வேண்டும்.
- கடைகள் யாவும் தற்போது இருக்கும் நிலையிலேயே குத்தகைக்கு விடப்படுகின்றது.
- கடை ஒப்படைக்கப்பட்டு 03 மாத காலத்துக்குள் திறந்து வர்த்தக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படல் வேண்டும். தவறுமிடத்து குறிப்பிட்ட கடைகளுக்கு மீள கேள்வி கோரப்படும்.

**பொ.வாகீசன்**
**மாநகர ஆணையாளர்,**
**மாநகரசபை, யாழ்ப்பாணம்.**

(சி-2184)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைப்புலிகள் மீதான தடையை இந்திய அரசு உடன் நீக்க வேண்டும்!

## ம.தி.மு.க.மீண்டும் வலியுறுத்து

(சென்னை)

தமிழீழ விடுதலைக்குப் போராடிய விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு இந்திய அரசு விதித்த தடையை உடன் நீக்கக்கோரி மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகம், இந்திய அரசை மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

திருப்பூர் மாவட்டம். பல்லடத்தில் அண்ணாவின் 107 ஆவது பிறந்தநாள் விழா, திராவிட இயக்க நூற்றாண்டு விழா மாநாடு ம.தி. மு.க. சார்பில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதில் 13 ஆவது தீர்மானத்தில்,


தமிழீழ விடுதலைக்குப் போராடிய விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு இந்திய அரசு விதித்த தடையை நீக்கக்கோரி 2010ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் கழகப் பொதுச் செயலாளர் வைகோ, சென்னை உயர் நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்தார்.

2010ஆம் ஆண்டில் நீதியரசர் விக்ரம்ஜித் சென் தலைமையில் அமைக்கப்பட்ட தீர்ப்பு ஆயத்தில் நடந்த விசாரணையில், புலிகள் மீதான தடையை இந்திய அரசு நீக்கக் கோரி, வாதங்களை முன் வைத்தார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதான தடையை நீடித்தது சரிதான் என்று தீர்ப்பு ஆயம் உத்தரவிட்டது.

இந்த உத்தரவை இரத்து செய்யக் கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்ததுடன், தாமே நேரில் சென்று வாதாடினர். (19ஆம் பக்கம் பார்க்க)

## மனிதவுரிமைகள் விவகாரத்தில் அமெரிக்கா பின்வாங்குகின்றது



இலங்கை மனித உரிமைகள் விவகாரத்தில் அமெரிக்கா பின்வாங்குவதாக, சனல் 4 தொலைக்காட்சியில் ஆவணப்படம் வெளியிட்ட இயக்குநர் கெலம் மக்ரே குற்றம் சாட்டியுள்ளார்.

அமெரிக்காவில் செய்தியாளர்களை சந்தித்த கெலம் மக்ரே,

### மக்ரே குற்றச்சாட்டு

அமெரிக்க மற்றும் இலங்கை அரசை குற்றம் சாட்டினார்.

மைத்திரிபால சிறிசேன அரசு மேற்கு நாடுகளுடன் கூட்டணி அமைத்ததால் அமெரிக்கா பின் வாங்குகிறது.

சீனாவுக்கு மகிந்த ராஜபக்ஷ ஆதரவளித்ததால் அவர் அரசுக்கு எதிராக செயற்பட்டது அமெரிக்கா.

உள்நாட்டு விசாரணை என்ற நிலைப்பாடு பாதிக்கப்பட்டவர்களுக்கு விரோதமானது.

தமிழர்கள் கொலைக்கு காரணமான மைத்திரிபால சிறிசேன உள்ளிட்டோர் உயர் பதவியில் உள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## கிரான்குளத்தில் உருக்குலைந்த பெண்ணின் சடலம் கண்டெடுப்பு

(கொழும்பு)

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கிரான்குளம் கடற்கரையோரத்திலிருந்து உருக்குலைந்த நிலையில் பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் மாலை கண்டெடுக்கப்பட்ட இந்த சடலத்தின் முகம் சிதைவடைந்துள்ளமையால் அடையாளம் காண முடியாதுள்ளதாக தெரியவருகிறது.

தற்போது சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

ஸ்தலத்திற்குச் சென்ற சொகோ விசேட பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## நாடாளுமன்றில் எதிர்க்கட்சியில் அமர 25 பேருக்கு ஜனாதிபதி அனுமதியளிப்பு

நாடாளுமன்றத்தினுள் எதிர்க்கட்சியின் செயற்பாடுகளை நிறைவேற்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தான் உட்பட 25 பேருக்கு அனுமதி வழங்கியுள்ளார் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியன்நாடாளுமன்ற உறுப்பினர்ரஞ்சித் டி சொய்ஸா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் எதிர்க்கட்சியில் அமர்வது தொடர்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது ஜனாதிபதியினால் இவ் அனுமதி வழங்கப்பட்டதாக அவர் தெவித்தார்.

தேசிய அரசாங்கத்தில் இணையாத ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் 25 பேர் மற்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு இடையில் நேற்று விசேட சந்திப்பொன்று கொழும்பு ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்றது.

இக் கலந்துரையாடலுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களான டலஸ் அலகபெரும, மஹிந்தானந்த அலுத்கமகே, பவித்ரா வன்னியாராச்சி மற்றும் ரோஹித அபேகுணவர்தன ஆகியோர் கலந்துகொண்டுள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் குமார் வெல்கமவின் முழுமையான பங்களிப்பின் கீழ் இக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது. அத்துடன் புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களும் இக் கலந்துரையாடலில் கலந்து கொண்டார்கள் என ரஞ்சித் டி சொய்ஸா தெரிவித்துள்ளார். (இ-7)

## 24 மணிநேரமும் முறையிட முடியும்

சிறுவர்கள் மற்றும் மகளிருக்கு எதிராக நடைபெறும் துஷ்பிரயோகம் தொடர்பாக முறைப்பாடுகளை மேற்கொள்வதற்கு 24 மணிநேர சேவை, முன்னெடுக்கப்பட்டுள்ளதாக, மகளிர் மற்றும் சிறுவர்கள் அபிவிருத்தி அமைச்சர் சந்திராணி பண்டார தெரிவித்துள்ளார்.

அதன்பிரகாரம், சிறுவர்களுக்கு எதிரான துஷ்பிரயோகம் தொடர்பான முறைப்பாடுகளை 1929 என்ற இலக்கத்துக்கும் மகளிருக்கு எதிரான துஷ்பிரயோகம் தொடர்பான முறைப்பாடுகளை 1938 என்ற இலக்கத்துக்கும் அழைப்பை ஏற்படுத்தி முறையிடலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

இதற்கு முன்னர் இந்த சேவையானது காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை மாத்திரமே செயற்பட்டதாகவும் தற்போது இந்த சேவை 24 மணித்தியாலமாக மாற்றப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)

## நாடாளுமன்ற உறுப்பினர் சேனாரத்னவுக்கு அழைப்பு

ராகம பொலிஸ் நிலையத்திற்கு சென்று பொலிஸாரின் கட்டுப்பாட்டில் இருந்தோருக்கு அச்சுறுத்தல் விடுத்ததாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் கம்பஹா மாவட்ட ஐக்கிய தேசிய கட்சி நாடாளுமன்ற உறுப்பனர் சதுர சேனாரத்னவுக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.



நாடாளுமன்ற உறுப்பினர்களான காவிந்த ஜயவர்தன மற்றும் சதுர சேனாரத்ன ஆகியோரின் ஆதரவாளர்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலில் மூவர் காயமடைந்து ராகமை வைத்தியசாலையில் அனுதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் ஐவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் நேற்று பிற்பகல் பொலிஸ் நிலையம் சென்ற சதுர சேனாரத்ன, கைது செய்யப்பட்டிருந்தோருக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவத்தை அடுத்து குறித்த விடயம் தொடர்பில் பொலிஸாரினால் நீதிமன்றில் அறிவிக்கப்பட்டதனை தொடர்ந்து சதுர சேனாரத்னவிற்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது. அதற்கமைய எதிர்வரும் ஒக்டோபர் 20ஆம் திகதி இது குறித்து விளக்கமளிக்குமாறு நீதிமன்றத்தால் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

## இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் பிரச்சினைகளை கண்டறிய விசேட குழு

(கொழும்பு)

இலங்கை பொலிஸ் திணைக்களத்தில்நிலவும்பிரச்சினைகளை கண்டறிவதற்கு ஒரு விசேட குழுவை அமைக்க உள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். கொழும்புசிரேஷ்ட அரசபொலிஸ் அலுவலர்களின் உத்தியோக பூர்வ மன்றத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் பொலிஸ் திணைக்களத்தின் உயர் அதிகாரி களுக்குமிடையே நேற்று முன்தினம் நடைபெற்றகலந்துரையாடல்ஒன்றின்போதே ஜனாதிபதி இதனைத் தெரி வித்தார்.

அரசதலைவர் ஒருவர் 20 வருடங்களுக்குப் பின்னர் சிரேஷ்ட அரசாங்க பொலிஸ் அலுவலர்களின் உத்தியோகபூர்வ மன்றத்திற்கு விஜ யம் செய்த முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும் என்பதோடு அங்கு விஜயம் செய்த ஜனாதிபதியை பொலிஸ் அதிகாரிகள் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

பொலிஸ்திணைக்களத்தில் உள்ள பிரச்சினைகள் தொடர்பாக இங்கு அதிகாரிகள் ஜனாதிபதிக்கு விளக்கிக் கூறியதுடன் ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றங்கள் தொடர்பாகவும் பல்வேறு முன்மொழிவுகளை முன்வைத்தனர். பொலிஸ் அதிகாரிகளின் பதவி உயர்வு தொர்டர்பான பிரச்சினைகள் வதிவிடப் பிரச்சினைகள் மற்றும் சம்பளப் பிரச்சினைகள் தொடர்பாகவும் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

இப்பிரச்சினைகளைமிகவும்அவதானமாக செவிமடுத்த ஜனாதிபதி இந்த எல்லா விடயங்களும் உட னடி தீர்வுகளை பெற்றுக் கொடுக்கக் கூடிய நியாயமான பிரச்சினைக ளாக தான் கருதுவதாகவும் ஒரு மாதகால குறுகிய காலத்தில் படிப் படியாக இப் பிரச்சினைகளுக்கு தீர் வுகள் பெற்றுக் கொடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

அரசியல் அழுத்தங்களின்றி தமது கடமைகளை உச்சபட்ச திருப்தியுடன் செய்வதற்கு கடந்த பாராளுமன்ற தேர்தலின் போது பொலிஸ் திணைக்களத்திற்கு சந்தர்ப்பம் கிடைத்ததாக பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோன் தெரிவித்தார். அத்தகையதொரு பின்புலத்தை ஏற்படுத்தியமை தொடர்பாக இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் நன்றிகளை ஜனாதிபதிக்கு தெரிவிப்பதாகவும் பொலிஸ்மா அதிபர் மேலும் தெரிவித்தார்.

சட்டம் சமாதானம் மற்றும் சிறைச்சாலைக்ள் மறுசீரமைப்பு அமைச்சர் திலக் மாரப்பன, இராஜாங்க அமைச்சர் பிரியங்கர ஜயரத்ன, அமைச்சின் செயலாளர் ஜெகத் விஜயவீர ஆகி யோரும் இக்கலந்துரையாடலில் பங்குப ற்றினார். (இ-7)

## படகு, கப்பலில் மோதி விபத்து

மாத்தறை கொட்டகொடின் கடலுக்கு சென்ற படகொன்று கப்பலில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. சம்பவத்தின் போது படகிலிருந்த நால்வரும் தெய்வாதீனமாக உயிர்த்தப்பினர். சம்பவத்தில் உடைந்த படகு, மொரட்டுவ, கொரலவெல்லவில் கரையொதுங்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். நேற்று புதன்கிழமை அதிகாலை வேளையில் ஏற்பட்டிருந்த காலநிலை மாற்றமே இவ்வனர்த்தத்துக்கு காரணமென தெரியவருகின்றது. (இ-7)

## வசீம் தாஜுதீனின் சடலத்தை நல்லடக்கம் செய்ய அனுமதி

ரகர் வீரர் வசீம் தாஜுதீனின் சடலத்தை நல்லடக்கம் செய்ய நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

கொழும்பு மேலதிக நீதவான் நிசாந்த பீரிஸ், புலனாய்வுப் பிரிவினருக்கு இந்த அனுமதியை வழங்கியுள்ளார். தாஜுதீனின் சடலம் குறித்த விசாரணைகள் பூர்த்தியாகியுள்ளதாகவும் நல்லடக்கம் செய்ய அனுமதிக்குமாறும் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் கோரியுள்ளனர்.

கடந்த மாதம் 10ஆம் திகதி தாஜுதீனின் சடலம் தோண்டி எடுக்கப்பட்டிருந்தது.

சடலத்தை நாளை 18 ஆம் திகதி மீளவும் நல்லடக்கம் செய்ய அவரது உறவினர்களிடம் ஒப்படைக்க புலனாய்வுப் பிரிவினர் தீர்மானித்துள்ளனர்.

தாஜுதீனின் மூத்த சகோதரி பாதிமா அயிசா தாஜுதீனிடம் சடலம் ஒப்படைக்கப்படவுள்ளது.

சடலத்தை நல்லடக்கம் செய்ய தேவையான வசதிகளை செய்து கொடுக்குமாறு பள்ளிவாசலிடம் நீதவான் கோரியுள்ளார். (இ-7)

## எக்னெலிகொட ஒரு சிங்களப்புலி

கடந்த அரசாங்கத்தின் போது கடத்தி செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளதாக சந்தேகிக்கப்படும் ஊடகவியலாளர் பிரகித் எக்னெலிகொட ஒரு சிங்கள புலி என தேசிய சுதந்திர முன்னணி தலைவர் விமல் வீரவன்ச குற்றம் சுமத்தியுள்ளார். சிங்கள ஊடகம் ஒன்றுடன் இடம்பெற்ற நேர்காணலின் போது அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன் போது ஊடகவியலாளர்களுடன் இது தொடர்பில் விமல் வீரவன்ச கருத்து மோதலை ஏற்படுத்தி கொண்டுள்ளார். எக்னெலிகொடவை இவ்வாறு அவதூறாக பேசியமையினால் விமல் வீரவன்சவுக்கு கடுமையாக எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் போர்க்குற்றங்கள் அதிகளவில் இடம்பெற்றுள்ளது

## ஐ.நாவின் அறிக்கையில் தெரிவிப்பு

ஜெனிவா (16 செப்டெம்பர் 2015) நேற்று வெளியிடப்பட்ட ஐ.நா அறிக்கை இலங்கையில் 2002 இல் இருந்து 2011-ம் ஆண்டு வரை பாரதூரமான உரிமை மீறல்களின் வடிவங்களை அடையாளம் கண்டுள்ளது. இவை இலங்கையில் போர் குற்றங்கள் மற்றும் மனிதநேயத்திற்கு எதிரான குற்றங்கள் இருதரப்பினராலும் பெரும்பாலும் இழைக்கப்பட்டிருக்கலாம் என்று வெளிப்படுத்துகின்றன. இவ்வறிக்கை, நீதியை அடைந்துகொள்வதற்கு சர்வதேச நீதிபதிகள், வழக்குத் தொடுப்பவர்கள், சட்டத்தரணிகள் மற்றும் விசாரணையாளர்களை உள்ளடக்கிய ஒருகலப்பு சிறப்பு நீதிமன்றத்தை ஸ்தாபிப்பது முக்கியமென்று பரிந்துரை செய்துள்ளது.

"எமது விசாரணை, இலங்கையில் நடைபெற்ற குரூரமான மீறல்கள் மற்றும் 'துஷ்பிரயோகங்கள், அதாவது பாகுபாடற்ற எறிகணைத்தாக்குதல் (ஷெல் தாக்குதல்), நீதிக்கு புறம்பான கொலைகள், காணமலாக்கப்படல், மனிதாபிமானமற்ற சித்திரவதைகள் மற்றும் பாலியல் வன்முறைகள், சிறுவர் ஆட்சேர்ப்பு மற்றும் வேறு பாரதூரமான குற்றங்களை வெளிக்கொணர்ந்துள்ளது" என உயர்ஸ்தானகர் சையிட் கூறியுள்ளார்.

முக்கியமாக, "இவ்வறிக்கையினூடாக வெளிக்கொணரப்பட்டுள்ள மீறல்கள் முழு சர்வதேச சமூகத்தினதும் கவனத்தை ஈர்க்கும் பாரதூர குற்றங்களாகும்."

"இவ்வறிக்கை இலங்கையில் நம்பிக்கை தரும் புதிய அரசியல் சூழலின் மத்தியில் முன்வைக்கப்படுகின்றது" என்று சையிட் கூறினார். மேலும், "நம்பகத்தன்மையான அடிப்படை மாற்றங்களைக் கொண்டு வரக்கூடிய இந்த வரலாற்றுச் சிறப்புடைய வாய்ப்பை பயன்படுத்திக் கொள்வது முக்கியம்" எனவும் கூறினார்.

இவ்வறிக்கையில் பாரதூரமான குற்றங்கள் என உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு ,

**◆ சட்டத்திற்குப் புறம்பான கொலைகள் :**

2002க்கும் 2011க்கும் இடையில் எண்ணற்ற சட்டத்திற்கு புறம்பான கொலைகள் இருதரப்பினர், மற்றும் பாதுகாப்புப் படையினருடன் தொடர்புடைய ஆயுத குழுக்களால் செய்யப்பட்டன என குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இக்கொலைகளால் பாதிப்புக்குள்ளானோர் என அடையாளம் காணப்பட்டோருள் தமிழ் அரசியல்வாதிகள், மனிதாபிமான செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் சாதாரண பொது மக்கள் உள்ளடங்குவர்.

நீதிக்கு புறம்பாக இழைக்கப்பட்ட கொலைகள இனங்காணப்படக்கூடிய வடிவங்களிலேயே நடைபெற்றுள்ளன. உதாரணமாக, இக்கொலைகள் பாதுகாப்புப் படையினரின் சோதனைச்சாவடி, மற்றும் படைத்தளங்களுக்கு அருகாமையில் நடைபெற்றுள்ளதுடன், இவ்வாறு கொலை செய்யப்பட்டவர்களில் இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டோர் இறுதி யுத்தத்தின் போது சரணடைந்தோர் மற்றும் இராணுவத்தினரால் பிடிக்கப்பட்டோர் உள்ளடங்குவர்.

தமிழீழ விடுதலைப்புலிகளும் தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள பொதுமக்களை பாரபட்சமற்ற தற்கொலைத் குண்டுத் தாக்குதல்கள், கண்ணிவெடி தாக்குதல்களுக்கு உட்படுத்தியதுடன், கல்விமான்கள் மற்றும் மாற்றுகருத்துள்ள தமிழ் அரசியல் பிரமுகர்களை குறிவைத்து கொலை செய்துள்ளனர்.

**◆ பாலியல் மற்றும் பால்நிலை சார்ந்த வன்முறை :**

பாதுகாப்புப் படைத்தரப்பினரால் தடுத்து வைக்கப்பட்டோர் மீது குரூரமான பாலியல் வனமுறைகள் மேற்கொள்ளப்பட்டன என்பதுடன், இவ்வாறான பாலியல் வன்முறைகள் அதிகளவில பிரயோகிக்கப்பட்டன எனும் அதிர்ச்சிகரமான விடயத்தை இவ்விசாரணை வெளிகொணர்ந்துள்ளது. இவ்வாறுபாதிக்கப்பட்டவர்களில் பெண்கள் மாத்திரமின்றி ஆண்களும் அடங்குவர்.

பாலியல் வன்முறையினால் பாதிக்கப்பட்ட முப்பது பேரிடம் பதிவு செய்யப்பட்ட துன்பகரமான சாட்சியங்களின் அடிப்படையில் பாலியல் வன்முறைகள் தனிப்பட்ட செயற்பாடுகளல்ல, அதற்குமாறாக அவை சித்திரவதை செய்வதனை நோக்காகக் கொண்ட கொள்கையின் அடிப்படையில் திட்டமிட்டுப் பாவிக்கப்பட்ட பொறிமுறைகளாகும் என்பது தெளிவாகின்றது. பாலியல் வன்முறைகளின் வடிவங்களை நோக்கும் போது, பாலியல் சித்திரவதைகள் விசாரணைகளின் போதும், பாலியல் வல்லுறவுகள் அனேகமாக விசாரணை இல்லாத வேறு சந்தரப்பங்களிலும் நடைபெற்றன என்பதை இவ்வறிக்கை விபரிக்கின்றது.

பாலியல் சித்திரவதைகள் வெவ்வேறு விதமான தடுப்பு நிலையங்களிலும், பலவிதமான பாதுகாப்பு தரப்பினராலும், யுத்தத்தின் போதும் அதன் பின்பும் இழைக்கப்பட்டுள்ளன. பாலியல் வன்முறைகளை இழைத்தவர்களில் ஒருவர் கூட இன்று வரை சட்டத்தினால் தண்டனைக்குட்படுத்தப்பட்டதாக அறியக்கிடைக்கவில்லை.

**◆ காணாமலாக்கப்பட்டோர் :**

காணாமலாக்கப்படல் என்பது பல்லாயிரக்கணக்கானஇலங்கையரை பல தசாப்தங்களாக பாதித்துள்ளது. இப்பாதிப்பானது பாதுகாப்புப் படைத்தரப்பினருக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையில் நடைபெற்ற 26 வருட யுத்தகாலத்தையும் உள்ளடக்கும். காணாமலாக்கப்படல் என்பது பொதுமக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பரந்த மற்றும் திட்டமிடப்பட்ட தாக்குதலாக இருக்க கூடும் என்பதனை நம்புவதற்கு காரணங்கள் உள்ளன.

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் சரணடைந்த பலர் காணாமலாக்கப்பட்டார்கள் என்பதனை நம்புவதற்கு காரணங்கள் உள்ளன. அவர்களது இருப்பு இன்று வரை கண்டறியப்படவில்லை. பலர், யுத்தத்தோடு நேரடியாக தொடர்பில்லாதவர்களும், பொதுவாக வெள்ளை வான்களில் கடத்தப்பட்டு, அதன்பின் காணாமலாக்கப்பட்டுள்ளார்கள்.

**◆ சித்திரவதைகள் மற்றும் வேறு விதமான கொடுமையான, மனிதாபிமானமற்ற அல்லது கீழ்த்தரமான நடத்துகைகள்:**

இவ்வறிக்கையில் விசாரணைக்குட்படுத்தப்பட்ட தசாப்தத்தில் இலங்கை பாதுகாப்பு படையினர் பரந்தளவில், குரூரமான சித்திரவதைகளை, முக்கியமாக யுத்தம் முடிவடைந்த காலத்தில், இழைத்துள்ளனர். குறிப்பிட்ட சில தடுப்பு முகாம்களில் சித்திரவதைக்கான உபகரணங்களைக் கொண்ட அறைகள் ஒதுக்கப்பட்டிருந்தன. இது சித்திரவதை திட்டமிடப்பட்ட முறையில் பிரயோகிக்கப்பட்டது என்பதனை வெளிப்படுத்துகின்றது.

இவ்வறைகளில் அடிப்பதற்கான இரும்புத் தடிகளும், பொல்லுகளும், நீரில் அமிழ்த்தி மூச்சுத்திணறலை ஏற்படுத்துவதற்காக தண்ணீர் பீப்பாய்களும் மற்றும் தடுப்பிலுள்ளோரை தொங்க விடுவதற்கான உழன்றிகளும் காணப்பட்டன. இவ்விசாரணையின் போது சாட்சியமளித்த, பாதிக்கப்பட்டோர் தங்களுக்கு இழைக்கப்பட்ட சித்திரவதைகளை விபரிக்கும் போது குறித்த அறைகளின் சுவர்களிலும், நில த்திலும் இரத்தக் கறைகளைக் கண்டதாகக் கூறினார்கள்.

**◆ சிறுவர் ஆட்சேர்ப்பு மற்றும் யுத்தத்தில் பாவித்தல், வயது வந்தோர் கடத்தல் மற்றும் வலுகட்டாயப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு :**

கிடைத்த தகவலின் அடிப்படையில் யுத்தத்தின் இறுதிக் காலப்பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் வயது வந்தோரைக் கடத்தி, வலுகட்டாய ஆட்சேர்ப்பிற்குட்படுத்தினர் எனும் விடயம் தெரியவந்தது. முக்கியமாக, யுத்தத்தின இறுதிப்பகுதியில் வலுகட்டாயப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு தீவிரமடைந்தது.

தமிழீழ விடுதலைப்புலிகள் 2004-ம் ஆண்டு தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இருந்து பிரிந்து, அரசுடன் செயற்பட்ட கருணா குழுவினரும், பரந்தளவில் சிறுவர்களை ஆட்சேர்ப்பு செய்து அவர்களை யுத்தத்தில் பாவித்துள்ளனர் என்பது ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. சிறுவர்கள், வீடுகள், பாடசாலைகள், கோவில்கள் மற்றும் சோதனைச்சாவடிகள் ஆகிய இடங்களில் இருந்து வலுக்கட்டாயமாகக் கொண்டு செல்லப்பட்டு, அடிமட்டப் பயிற்சி வழங்கப்பட்ட பின்னர் போர்க்களத்திற்கு அனுப்பப்பட்டனர்.

யுத்தத்தின் இறுதி மாதங்களில் தமிழீழ விடுதலைப்புலிகள் 15 வயதிற்குக் குறைந்த சிறுவர்களை ஆட்சேர்ப்பு செய்தனர் ஏன்று பல அறிக்கைகள் கூறுகின்றன. இச்செயற்பாடுகள் நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டால் அவை போர் குற்றங்களாகக் கருதப்படும்.

**◆ பொதுமக்கள் மற்றும் பொது உடைமைகள் மீதான தாக்குதல்கள் :**

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் நடத்தப்பட்ட பல தாக்குதல்கள் சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் கோட்பாடுகளுக்கு ஏற்ப, அதாவது போரை நடத்துவதற்கான விதிமுறைகளுக்கு ஏற்ப, அமையவில்லை. முக்கியமாக, இராணுவ உடைமைகளுக்கும் பொது உடைமைகளுக்கும இடையிலான வேறுபாட்டை மதிக்க வேண்டும் என்று கூறும் கோட்பாடு மீறப்பட்டது என்பதனை நம்புவதற்கு காரணங்கள் உள்ளன.

மக்கள் செறிவாக காணப்பட்ட, தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த இடங்களில், அரசாங்கம் உருவாக்கிய யுத்த சூனிய பிரதேசத்தில் அமைந்திருந்த மருத்துவமனைகள், மனிதாபிமான உதவி வழங்கும் நிலையங்கள் ஆகிய இடங்களின் மீது அரச படைகள் எறிகணைத்தாக்குதல்களை நடத்தியதை இவ்வறிக்கை ஆவணப்படுத்தியுள்ளது. பொது உடைமைகள் மற்றும் யுத்தத்தில் நேரடியாக பங்குபற்றாத பொது மக்கள் மீது நேரடி தாக்குதல்களை நடத்துவது பாரதூரமான சர்வதேச மனிதாபிமானச் சட்ட மீறலாகும். இது ஒரு போர குற்றமாக கருதப்படலாம்.

யுத்தத்தில் நேரடியாகப் பங்குபற்றும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க போராளிகள் பெரும்பாலும் பொதுமக்கள் இருக்கும் இடங்களில் இருந்து செயற்பட்டதுடன் இவ்விடங்களுக்கு அருகாமையிலிருந்து தாக்குதல்களை தொடுத்தது மற்றும் தமிழீழ விடுதலைப்புலிகள் யுத்த காலத்தில் வலுக்கட்டாயமாக பொது மக்களை தடுத்து வைத்திருந்தமையும், சர்வதேச மனிதாபிமானச சட்ட மீறலாகக் கூடும்.

ஆனாலும், தமிழீழ விடுதலைப்புலிகளின் இச்செயற்பாடுகளைக் காரணம் காட்டி, அர சாங்கம் சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் கீழ் அதன் பொறுப்புக்களை தட்டிக்கழித்திருக்க முடியாது. சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தை மதிக்கும் கடமை மற்றைய தரப்பினரின் நடத்தையிலோ, பிரதிகிர்த்தியிலோ தங்கியில்லை.

**◆ மனிதாபிமான உதவிகள் தடுக்கப்படல் :**

அரசாங்கம் மனிதாபிமான செயற்பாட்டாளர்கள், அவர்களின் செயற்பாடுகள் மற்றும் நடமாடும் சுதந்திரத்தின் மீது கணிசமான தடைகளை விதித்து, வேண்டுமென்றே வட மாகாணத்தில் வன்னி பிரதேசத்திற்கு உணவு உதவி மற்றும் மருத்துவப் பொருட்கள் சென்றடைவதை தடுத்திருக்கலாம். இச்செயலானது, பொதுமக்களை பட்டினி போடுவதை ஒரு யுத்தமுறைமையாக பிரயோகித்திருக்கலாம் என்பதை வெளிகாட்டுகின்றது. பொதுமக்களை பட்டினி போடுவது ஒரு யுத்தமுறைமையாக பிரயோகிக்கப்பட்டது என்பது நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டால் அது போர் குற்றமாகக் கருதப்படலாம்.

**◆ வெளியில் செல்வதற்கு தடைவிதிக்கப்பட்டு, நடமாடும் சுதந்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்த இடம்பெயர்ந்தோருக்கான முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் போது அவர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட மீறல்கள் :**

தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் போராளிகளை பொது மக்களில் இருந்து வேறுபடுத்தி பிரிப்பதற்காக பிரயோகிக்கப்பட்ட வழிமுறைகள் சர்வதேச விதிமுறைகளை மீறியது மட்டுமல்லாது, அம்மக்கள் துஷ்பிரயோகங்களுக்கும், துன்புறுத்தல்களுக்கும் உட்படுத்தப்படுவதற்கு வழிவகுத்தன.

ஏறத்தாழ மூன்று இலட்சம் இடம்பெயர்ந்தோரின் சுதந்திரம் சர்வதேச சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட கால எல்லைக்கு மேலாக பறிக்கப்பட்டது. மேலும், இடம்பெயர்ந்தோர் தமிழர்கள் என்பதால், அவர்கள் சந்தேகநபர்களாக நடத்தப்பட்டு தடுத்துவைக்கப்பட்டார்கள் என்று நம்புவதற்கு காரணங்கள் உள்ளன. இந்நடைமுறையானது, தமிழ் மக்கள் பாரபட்சத்துடன் நடத்தப்பட்டார்கள் என்றும், மனிதநேயத்திற்கு எதிரான குற்றமான துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டார்கள் என்றும் கருதப்பட இடமளிக்கின்றது.

இவ்வறிக்கை பல வருடங்களாக நடைபெற்ற உண்மைகளை மறுத்தல், மூடி மறைத்தல், உடனடி விசாரணைகளை நடத்தாமல் விடல், விசாரணைகளை இடைநிறுத்தல் மற்றும் பாதிக்கப்பட்டோரின் குடும்பங்களுக்கும், நீதிக்காக அழுத்தங்கள் கொடுத்து செயற்படுவோருக்கும் எதிராக விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்கள் மற்றும் இழைக்கப்பட்ட மீறல்களை ஆவணப்படுத்துகின்றது.

மேலும், இவ்வறிக்கை பாதிக்கப்பட்டோருக்கு நீதியை வழங்குவதற்கு உள்நாட்டுப் பொறிமுறைகள் தொடர்ச்சியாகக் கண்ட தோல்வியின காரணத்தால் பாதிக்கப்பட்டோர் கோபம், ஐயுறவு மற்றும் அவநம்பிக்கை கொண்டுள்ளனர் என்பதை அவதானிக்கின்றது.

காரணம், "குற்றங்களுக்கும், உரிமை மீறல்களுக்கும் காரணமான கட்டமைப்புகள் எவ்வித சீர்திருத்தங்களுக்கும் உட்படுத்தப்படாது அதே நிலையில் காணப்படுகின்றன." குற்றங்கள் இராணுவத்தினராலும், பாதுகாப்புப் படையினராலும் இழைக்கப்படும் போது அதற்கு ஏற்ற நடவடிக்கை எடுக்க இயலாமல் இருப்பது கட்டமைப்புகளின் பலவீனத்தை சுட்டிக்காட்டுகிறது. "மனித உரிமை மீறல்களை இழைக்கும் அரச அதிகாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க எத்தனிக்கும் சட்டவியலாளர்களுக்கு எதிராக விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்கள் மற்றும் இழைக்கப்பட்ட உரிமை மீறல்கள்" ஆகியவற்றை இவ்வறிக்கை விபரிக்கின்றது.

"பொறுப்புக்கூறலை ஒரு உள்நாட்டுப் பொறிமுறையின் மூலம் கையாள்வதாக இப்புதிய அரசாங்கம் அளித்துள்ள வாக்குறுதி பாராட்டத்தக்கது. ஆனாலும், துரதிர்ஷடவசமான உண்மை என்னவெனில், இலங்கையின் குற்றவியல் நீதிப் பொறிமுறை இதை செயற்படுத்துவதற்கு திறனற்றதாக உள்ளது" எனவும் இவ்வறிக்கை கூறுகின்றது.

"முதன்மையான விடயம் என்னவெனில், பாதிக்கப்பட்டவர்களுக்கும், சாட்சியங்களுக்கும் பாதுகாப்பு வழங்க, நம்பகத்தன்மையுடைய பாதுகாப்புப் பொறிமுறை இன்றுவரை ஸ்தாபிக்கப்படவில்லை. இரண்டாவது, இலங்கையின் உள்நாட்டு சட்டக்கட்டமைப்பானது பாரதூரமான சர்வதேச குற்றங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு கொள்திறன் இல்லாதுள்ளது.

மூன்றாவது சவால் என்னவெனில், பல தசாப்தங்களாக நடைமுறையில் இருந்த அவசர காலச்சட்டம், யுத்தம் மற்றும் குற்றமிழைத்தவர்கள் தண்டனையிலிருந்து தப்பியமை ஆகியவற்றால் இலங்கையின் பாதுகாப்புத் துறையும் நீதித்துறையும் சிதைவடைந்துள்ளன."

இவ்வாண்டு தை மாதம் தொடக்கம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் புதிய அரசாங்கம் முன்னெடுத்துள்ள ஆக்கபூர்வமான செயற்பாடுகளை உயர்ஸ்தானிகர் வரவேற்றுள்ள அதேநேரம், "இலங்கை முன்னோக்கி பயணிப்பதற்கு தசாப்தங்களாக நடைபெற்ற உரிமை மீறல்களின் காரணமாக ஆழமாக வேரூன்றியுள்ள அடக்குமுறை கட்டமைப்புகள் மற்றும் நிறுவன கலாசாரங்களை அகற்ற வேண்டும்" என்று கூறினார்.

23ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு எதிரான பிரசாரத்துக்காக ஐந்து மில்லியன் பவுண்ட்ஸ் செலவாம்

## சிங்கள ஊடகம் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

**இலங்கைக்கு எதிரான மனிதவுரிமை மீறல்கள் குற்றச்சாட்டு தொடர்பில் உலக நாடுகளின் கவனத்தை ஈர்க்க புலம்பெயர் அமைப்புகள் ஐந்து மில்லியன் பவுண்ட்ஸ்களை செலவிட்டுள்ளதாக திவயின சிங்களப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.**

லண்டன் நகரில் உள்ள பொதுமக்கள் தொடர்பாடல் நிறுவனமான டீடீஆர் நிறுவனத்தின் ஊடாக உலக நாடுகளின் இலங்கைக்கு எதிரான நிலைப்பாட்டை ஊக்குவிக்கும் வகையில் இந்தப் பணம் செலவழிக்கப்பட்டுள்ளது.

இதன் ஒரு கட்டமாக டீடீஆர் நிறுவனத்தின் பொதுமக்கள் தொடர்பாடல் அதிகாரி யான பெண்ணொருவர் தற்போது ஜெனீவா சென்றுள்ளார்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அமர்வுகளில் கலந்து கொண்டுள்ள நாடுகளின் வெளிநாட்டமைச்சர்களை சந்தித்து, இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை வலியுறுத்தும் செயற்பாடுகளில் அவர் ஈடுபட்டுள்ளார்.

மேலும் இலங்கைக்கு எதிரான சர்வதேச விசாரணையை வலியுறுத்தும் வகையில் தற்போது இன்டர்நெட் ஊடான கையொப்பங்கள் சேகரிக்கும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சர்வதேச தொடர்பாடல் நிறுவனம் ஒன்றின் ஊடாக இவ்வாறு இலங்கைக்கு எதிரான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது இதுவே முதல் தடவையாகும் என்றும் திவயின பத்திரிகை செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

# தந்தை எதிர்பார்த்த அமைச்சுப் பதவிதான் எனக்கு கிடைத்துள்ளது-நவீன் திஸாநாயக்க

(கொழும்பு)

தந்தை எதிர்பார்த்த அமைச்சுப் பதவி தனக்கு கிடைத்துள்ளதாக பெருந்தோட்டத்துறை அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

1977ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தன ஆட்சிக் காலத்தில் தனது தந்தை காமினி திஸாநாயக்க இந்த அமைச்சு பதவியை எதிர்பார்த்திருந்தார்.

அந்தக் காலத்தில் காணப்பட்ட மிகவும் பலம பொருந்திய அமைச்சு பெருந்தோட் டத்துறை அமைச்சாகும். எனினும் இன்று அந்த நிலைமை மாறியுள்ளது. ஏனெனில் பல தோட்டங்கள் தனியார் மயப்படுத்தப்பட் டுள்ளன. பெருந்தோட்டத்துறையில் சுமார் 10 இலட்சம் ஊழியர்கள் கடமையாற்றி வரு கின்றனர்.

பெருந்தோட்டத்துறை ஊழியர் கள் இன்று நிர்க்கதியான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். அந்த மக்கள் எம்மிடமிருந்து சேவைகளை எதிர்பார்க்கின்றனர்.

எனவே பெருந்தோட்டத் துறையை புதிய பரிமாணமொன்றுக்கு நகர்த்த வேண்டும்.

பல்வேறு காரணிகளினால் பின்னடைவை எதிர்நோக்கி வரும் பெருந்தோட்டத் துறையை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்ப டும்.

புதிய அரசாங்கத்தின் கீழ் நுவரெலியா மாவட்டத்திற்கு அபி விருத்தியின் நலன்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இளைய தலைமுறையினரின் காணி மற்றும் தொழில் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்க சகல முயற்சிகளும் எடுக்கப்படும் என நவீன் திஸாநாயக்க அண்மையில் தலவாக்கலை பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றில் தெரிவித்துள்ளார். (இ-7)

# கஜபா படையணி கொலை வழக்கில் முன்னாள் போராளிகளுக்கு மறியல்

விடுதலைப்புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் இருவரை எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் தடுத்து வைக்குமாறு அநுராதபுரம் விசேட மேல் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

கஜபா படையணியின் படை நிறைவேற்றதிகாரி கர்ணல் ஜயந்த சுரவீர உள்ளிட்ட இராணுவ உறுப்பினர்கள் மற்றும் வனவி ங்கு பாதுகாப்பு திணைக்களத்தின் 8 பேரை வில்பத்து வனாந்தரத்தில் வைத்து 2007 மார்ச் 9 ஆம் திகதி சுட்டுக்கொன்றதாக அவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் சூரியகாந்தன் ஜயசந்திரன் மற்றும் சிவப்பிரகாசன் சிவசீலன் ஆகிய இரண்டு முன்னாள் போராளிகளை அநுராதபுரம் விசேட மேல் நீதிமன்ற நீதிபதி பேமா சுவர்ணாதிபதி முன்னிலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வழக்கு விசாரணையின் போதே நீதிபதி மேற்கண்டவாறு உத்தரவைப் பிறப்பித்தார். (இ-7)




அகர முதல எழுத்தெல்லாம்
ஆதி பகவன் முதற்றே யுலகு



பாரிஸ் ஸ்ரார் சிறி அவர்களால் தயாரித்து இசையமைக்கப்பட்டு தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம கலை பண்பாட்டுப் பேரவையின் அனுசரணையுடன் வெளியிடப்படும்

**திருக்குறள் முப்பாலும் (1330) மூலமும் உரையும்**

**இறுவெட்டு வெளியீட்டு விழா**

**காலம்:** 18.09.2015 வெள்ளி முற்பகல் 10 மணி

**இடம்:** சந்நிதியான் ஆச்சிரம கலை பண்பாட்டுப் பேரவை

**மண்டபம்-** செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு.

**நிகழ்வுகள்**

இறைவணக்கம்

அறிமுகவுரை- **சந்நிதி வசந்தம்- துரை கணேசமூர்த்தி.** (ஆசிரியர், யாழ்ப்பாணக் கல்லூரி)

ஆசியுரை- **சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம்** (முன்னைநாள் பணிப்பாளர், இந்து கலாசார அமைச்சு)

வெளியீடு- **அமுதகலாயோகி செ.மோகனதாஸ் சுவாமிகள்**

வெளியீட்டுரை- **விரிவுரையாளர் அ.குமாரவேல்**

மதிப்புரை- **கோ.சத்தியன்(இயக்குநர், சப்தமி கலையகம்)**

ஏற்புரை- **ஸ்ரார் சிறி (பரிஸ்)**

**சிறப்புப் பிரதிகள் வழங்குதல்**

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

இசைத்தட்டு வெளியீட்டின்போது கிடைக்கப்பெறும் நிதி பாதிக்கப்பட்ட சிறுவர்களின் கல்வி நிதிக்கு வழங்கப்படும்.

அனுசரணை
இலட்சுமணன் ஹாட்வெயர்
கே.கே.எஸ்.வீதி,
மல்லாகம்.
TP: 077 3922317

உதயா ஸ்ரோர்ஸ்
கே.கே.எஸ்.வீதி,
மல்லாகம்.
TP:077 899 6142



கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா:10<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:Dip in computer science ஜேமன் PR<br>தொ.இ: B/4948 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 43 செவ் 7 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:BE/தனியார் தொழில்<br>தொ.இ: G/4990 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 9<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:O/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/4949 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 23 செவ் 12 இல்<br>உயரம்: 5'6'<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/4993 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 23<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:civil engineering/ அரசதொழில்<br>எதிர்பார்ப்பு: ஆண் விவாகரத்து பெற்றவர் விவாகரத்து பெற்றவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: B/4951 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 45 செவ் 2 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: G/5000 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 63<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:BSC, MSC/ முகாமையாளர்<br>தொ.இ: B/4953 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 32செவ் 12 இல்<br>உயரம்: 160cm<br>தகைமை/தொழில்:BA/அரசதொழில்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: G/3618 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றம் குறித்து

# சர்வதேச விசாரணை நடத்த வேண்டும் தமிழக சட்ட சபையில் ஒருமித்த குரல்

## தி.மு.க.,தே.மு.தி.க., காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு பாராட்டு மழை

(சென்னை) —

**இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றம் பற்றி சர்வதேச விசாரணை மேற்கொள்ள கோரி தமிழக சட்ட சபையில் இன்று முதலமைச்சர் ஜெயலலிதா கொண்டு வந்த தீர்மானத்தின் மீது அனைத்து கட்சி உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்து உரையாற்றியுள்ளனர்.**



துரைமுருகன் (தி.மு.க.) - முதலமைச்சர் கொண்டு வந்த இந்த தீர்மானத்தை வரவேற்கிறேன். இது இப்போது தேவையான ஒன்றாகும். ஆரம்பத்தில் சர்வதேச விசாரணை தேவை என கூறி வந்த அமெரிக்கா இன்று தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டுள்ளது. ஆனால் நாம் நமது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ள முடியாது.

இந்தியாவே தீர்மானம் கொண்டு வருவதுடன் அந்த சமயத்தில் அமெரிக்கா இலங்கைக்கு ஆதரவான நிலையை எடுத்தால் அதை மாற்ற இராஜதந்திர ரீதியில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இங்கு கொண்டு வரப்பட்டுள்ள தீர்மானத்தில் எந்தவித மாறுபட்ட கருத்தும் கிடையாது. தி.மு.கவும் பல மாநாடுகளில் இலங்கை தமிழர்களுக்காக பல்வேறு தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது.

பொருளாளர் மு.க.ஸ்டாலின், டி.ஆர்.பாலு ஆகியோர் ஜெனீவா சென்று மனு கொடுத்து இருக்கிறார்கள். எனவே இப்போது இந்தியாவுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் முதலமைச்சர் கொண்டு வந்த தீர்மானத்தை வரவேற்கிறேன்.

பாண்டியராஜன் (தே.மு.தி.க.) - இலங்கை தமிழர்களுக்காக முதலமைச்சர் ஜெயலலிதா தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறார். இப்போது கொண்டு வந்துள்ளது மிக முக்கிய தீர்மானம் ஆகும். இதற்காக முதலமைச்சரை பாராட்டு கிறேன்.

பிரின்ஸ் (காங்.) - இலங்கையில் நடைபெற்ற ஈழத்தமிழர் படுகொலையை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. படுகொலையை நிகழ்த்தியவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது தான் காங்கிரசின் நிலைப்பாடு. இலங்கை தீர்மானத்தை ஆதரிக்கிறோம்.

சவுந்தரராஜன் (மார்க்சிஸ்ட் கம்யூ.) - ஈழத்தமிழர் படுகொலையை நிகழ்த்திய இலங்கை. அதில் இருந்து தப்பிக்க இடம் கொடுக்காத வகையில் சர்வதேச அளவில் விசாரணை அவசியம் தேவை என்பதை தீர்மானம் வலியுறுத்துகிறது. அதை வரவேற்கிறோம்.

ஆறுமுகம் (இந்திய கம்யூ.) - இலங்கை தமிழர்களை கொன்று குவித்த இலங்கை அரசுக்கு அமெரிக்கா இப்போது ஆதரவு காட்டி தப்பிக்க வைக்க முயல்கிறது. அமெரிக்கா தனது நிலைப்பாட்டை இப்போது மாற்றி இருந்தாலும் இந்தியா ஒரு தீர்மானம் கொண்டு வர வேண்டும் என்று வற்புறுத்தி சட்ட சபையில் தீர்மானம் நிறைவேற்றி இருப்பது வரவேற்கத்தக்கது.

இதேபோல் கணேஷ்குமார் (பா.ம.க.), ஜவாஹிருல்லா (மனிதநேய மக்கள் கட்சி), டாக்டர் கிருஷ்ணசாமி (புதிய தமிழகம்), எர்[illegible]வூர் நாராயணன் (சமத்துவ மக்கள் கட்சி), கதிரவன் (பார்வர்டு பிளாக்), தனியரசு (கொங்கு இளைஞர் பேரவை), சொகு.தமிழரசன் (இந்திய குடியரசு கட்சி) ஆகியோரும் தீர்மானத்தை பாராட்டி ஆதரவு தெரிவித்து பேசினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## கரையோரங்களை தூய்மைப்படுத்தும் திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு ஜனாதிபதி தலைமையில்

இலங்கை எழில்மிகு கடற்கரைப் பிரதேசங்களைக் கொண்டிருந்த போதும் நாளுக்குநாள் அதிகரித்து செல்லும் கடற்கரை சூழல் மாசடைதல் காரணமாக அதன் எழில் படிப்படியாக மறைந்து செல்கிறது. இதற்கு உடனடி தீர்வொன்றை வழங்கும் வகையில் கடற்கரைப் பிரதேசங்களை தூய்மைப்படுத்தும் ஒரு தேசிய நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்நிகழ்ச்சித் திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நாளை மறுதினம் 19 ஆம் திகதி காலை 7 மணிக்கு கொழும்பு காலி முகத்திடலில் இடம்பெறவுள்ளது.

மேலும் இதனோடு இணைந்ததாக செப்டெம்பர் மாதம் 19 ஆம் திகதி கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களிலும் 20 ஆம் திகதி புத்தளம் மாவட்டத்திலும் 21 ஆம் திகதி யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் மன்னார் மாவட்டங்களிலும் 22 ஆம் திகதி திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களிலும் 23 ஆம் திகதி காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இச்செயற்றிட்டம் தொடர்பிலான ஒரு விசேட ஊடகவியலாளர் மாநாடு ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ.அபேகோன் தலைமையில் நேற்று முன்தினம் இலங்கை மன்றக் கல்லூரியில் இடம்பெற்றது. இம்மாநாட்டில் சுற்றாடல் அமைச்சின் செயலாளர் உதய செனவிரத்ன, கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் ரஞ்சித் மீகஹவத்த உள்ளிட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (இ-7)

## இன்று முதல் 23ம் திகதி வரை யாழில் டெங்கு ஒழிப்பு வாரம்

(கரணவாய்)

நம் வாழ்க்கையில் சேர்க்கப்பட்ட புதிய பழக்கத்தை தொடர்ந்து முன்னெடுப்போம் என்னும் தொனிப் பொருளில் தேசிய டெங்கு ஒழிப்பு வாரம் நாளை வியாழக்கிழமை முதல் எதிர்வரும் 23ஆம் திகதி புதன்கிழமை வரை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

தேசிய மட்டத்தில் கடந்த 10ஆம் திகதி முதல் 16ஆம் திகதி வரை சுகாதார ஊட்டச்சத்து மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் தேசிய டெங்கு கட்டுப்பாட்டு வாரம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

எனினும் நல்லூர் கந்தன் பெருந் திருவிழா காரணமாக யாழ்.மாவட்டத்தில் குறித்த திகதியில் டெங்கு ஒழிப்பு வாரம் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இந்நிலையில் இன்று 17ஆம் திகதி முதல் 23ஆம் திகதி வ[illegible] டெங்கு ஒழிப்பு வாரம் யாழ்.ம[illegible]டத்தில் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இக்காலப்பகுதியில் நுளம்புகள் பெருகும் இடங்களை தேடி அழித்து டெங்கு நோய் காரணிகளை கட்டுப்படுத்தும் வேலைத்திட்டத்திற்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்குவதுடன் இந்த விழிப்புணர்வு செயற்பாட்டில் ஆர்வமுடன் ஈடுபடுமாறும் ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (இ-3-60)

## ராசி பலன்

17.09.2015

(ஆவணி 31, வியாழக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு
சதுர்த்தி முன்னிரவு 7.49 மணிவரை
சுவாதி நள்ளிரவு 12.01 மணிவரை
இராகுகாலம் 1.33-3.03 மணிவரை
சுபநேரம் 7.33-9.03 மணிவரை
விநாயகர் சதுர்த்தி விரதம்
அமிர்த சித்தம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>ரேவதி<br>சமநோக்கு நாள் | | செவ்<br>சுக |
| | | | சூரி.புத.<br>குரு |
| | சனி | | ராகு |

**மீனம்:** கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், உறவினர்கள் வழியில் சுப செலவுகள் ஏற்படலாம், தேகநலனில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

**மேடம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், விருந்தினர் வருகையுண்டு, தொலைபேசி வழியில் மகிழ்ச்சிக்குரிய செய்திகள் வந்து சேரலாம், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும்.

**இடபம்:** கணபதி வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரலாம், உடல்நலம் சீராகும், கடன் சுமை குறையும்.

**மிதுனம்:** தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைப்பதற்கான வாய்ப்புண்டு, குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், சான்றோர்களின் சந்திப்புண்டு.

**கும்பம்:** பிரியமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், தொழிலில் அதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கடகம்:** நம்பிக்கைகள் நடைபெற தும்பிக்கையானை வழிபட வேண்டிய நாள், வாகன யோகமுண்டு, பெற்றோர் மீது பிரியம் கூடும், சுபகாரியச் செலவுகள் வந்து சேரலாம்.

**மகரம்:** கனவுகள் நனவாக கற்பக மூர்த்தியை வழிபட வேண்டிய நாள், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், செய்தொழில் மேன்மையுண்டு, மனதிற்கினிய தகவல்கள் வந்து சேரலாம்.

**சிம்மம்:** வெற்றிகள் வந்து சேர விநாயகரை வழிபட வேண்டிய நாள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், தொழில் மேன்மையுண்டு.

**தனுசு:** பொதுவாழ்வில் புகழ்கூடும், விலையுயர்ந்த பொருட்கள் வீடு வந்து சேரலாம், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைப்பதற்கான வாய்ப்புண்டு, அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்:** காரியங்களில் வெற்றிபெற கணபதியை வழிபட வேண்டிய நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பணத் தேவைகள் பூர்த்தியாகும், உறவினர் வருகையுண்டு.

**துலாம்:** வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், குடும்ப பெரியவர்களின் சொற்களைக் கேட்டு நடப்பீர்கள், செலவுக்கேற்ப வருமானம் வந்து சேரலாம், பயணங்கள் கைகூடும்.

**கன்னி:** மக்கள் போற்றும் வாழ்வமைய கணபதியை வழிபட வேண்டிய நாள், உடல்நலம் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், திடீர் பணவரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



யாழ்.பல்கலைக்கழகத்தின் நுண்கலைப் பீடத்தில் சர்வதேச விசாரணையை வலியுறுத்தியும் உள்ளக விசாரணைப் பொறிமுறையை நிராகரித்தும் கையெழுத்துப் போராட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இப்போராட்டத்தில் பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள் எனப்பலர் கலந்து கொண்டு கையொப்பங்களை இட்டிருந்தனர். (படங்கள்:- பொ.சோபிகா)

# தமிழரின் பண்பாட்டை பிரதிபலிக்கும் மரபுரிமைச் சின்னங்களுக்கு அவமரியாதை செய்தால் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென எச்சரிக்கை

## யாழ்.மாநகர ஆணையாளர் தெரிவிப்பு

**(யாழ்ப்பாணம்)**

**யாழ்.மாநகர சபை எல்லைக்குள் தமிழருடைய பண்பாட்டை பிரதிபலிக்கும் மரபுரிமைச் சின்னங்களை அவமரியாதை செய்பவர்களுக்கு எதிரான கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென யாழ்.மாநகர சபை ஆணையாளர் பொ.வாகீசன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

நல்லூர் முத்திரைச் சந்தியில் அமைக்கப்பட்டுள்ள சங்கிலிய மன்னன் சிலையில் உள்ள வாளில் குளிர்பான நிலையம் ஒன்றின் விளம்பரப் பதாகை கட்டப்பட்டிருந்தமை தொடர்பாக அவரை தொடர்பு கொண்டு கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது வரலாற்றை பிரதிபலிக்கின்ற கௌரவத்துக்குரிய சிலைகளில் இவ்வாறான அநாகரிக செயலில் ஈடுபட்டமை மிகவும் கண்டிக்கத்தக்க விடயம்.

அதில் கட்டப்பட்டுள்ள விளம்பரப் பதாகை மாநகரசபையால் உடனடியாக அகற்றப்பட்டுள்ளது.

குறித்த குளிர்பான நிறுவனத்தின் யாழ்.மாவட்டத்திற்குரிய முகவருக்கு எமது கண்டனத்தையும் விசனத்தையும் தெரிவித்து கடிதம் அனுப்பியுள்ளோம்.

இந்த நடவடிக்கை தொடர்பாக அவர்களது பதிலை தரும்படி கோரியுள்ளோம். அவர்களுடைய பதிலின் அடிப்படையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருக்கின்றோம்.

எமது வரலாற்றை பிரதீபலிக்கின்ற கௌரவமான சின்னங்களை நாம் பாதுகாக்க வேண்டும். அவற்றை உதாசீனம் செய்பவர்கள் எவராக இருந்தாலும் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன் இனிவரும் காலங்களில் யாழ்.மாநகர சபை எல்லைக்குள் உள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க கட்டடங்கள், தமிழர் பண்பாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் பாரம்பரிய சிலைகள், சின்னங்களை அவமரியாதை செய்யும் செயற்பாடுகளில் எவரும் ஈடுபடக்கூடாது. அதை மீறுபவர்கள் மீது உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# சங்கிலிய மன்னனின் வாளில் குளிர்பான நிறுவன விளம்பரம்



யாழ்ப்பாணம் முத்திரைச் சந்தியில் அமைக்கப்பட்டுள்ள சங்கிலியன் சிலையின் கைகளில் ஏந்தியுள்ள வாளில் குளிர்பான நிறுவனமொன்றின் விளம்பர பதாகையொன்று பொருத்தப்பட்டுள் ளது.

யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்ட இறுதி மன்னனான சங்கிலியனின் சிலையானது யாழ். மாநகர சபையால் புதுப்பொலிவுடன் அமைக்கப்பட்டு கடந்த 2011ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 4ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தின் கௌரவமிக்க மன்னரான சங்கிலியனின் சிலையானது போற்றப்படக் கூடிய வகையில் இருக்கும் நிலையில், சிலையை கேலிக்குள்ளாக்கும் வகையில் சிலையின் கைகளில் ஏந்தியுள்ள வாளில் இவ்வாறு விளம்பர பதாகை பொருத்தப்பட் டுள்ளது.

மாநகர சபை அனுமதி பெறப்பட்டு இது பொருத்தப்பட்டதா என்பது தொடர்பில் மாநகரசபை நிர்வாகத்துடன் தொடர்புகொண்டு கேட்ட பொழுது, அவ்வாறு பொருத்தப்பட்டுள்ளது தமக்கு தெரியாது எனவும் அவ்வாறான அனுமதி எதையும் கொடுக்கவில்லையெனவும் உடனடியாக அதனை அகற்றுவதாகவும் நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (செ-12)

## கட்டடத்திறப்பு விழா

கரவெட்டி துன்னாலை மத்தி கோவிற்கடவை சனசமூக நிலைய கட்டடத்திறப்பு விழா நாளை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

சனசமூக நிலைய தலைவர் ச.உருத்திரகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினராக யாழ்.இந்தியத் துணைத்தூதுவர் ஆ.நடராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஆசியுரையை கோவிற் கடவை சித்திவிநாயகர் ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ பூரண சுகாதாரக் குருக்கள் வழங்கவுள்ளார்.

அத்துடன் வாழ்த்துரைகளை வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், வடக்கு மாகாண முதலமைச்சரின் செயலாளர் இ.வரதீஸ்வரன், வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபை செயலாளர் க.கனகதுரை ஆகியோர் வழங்கவுள்ளனர்.

இந்த நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கோவிற்கடவை சனசமூகநிலைய சமூகத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (இ-9)

# இளையோர்களுக்கான ஆளுமை விருத்தி வழிகாட்டல் செயலமர்வு யாழ்ப்பாணத்தில்

வாணிபம் நிறுவன ஏற்பாட்டில் "நான் என்னவாக வேண்டும்? அதற்கு என்ன செய்ய வேண்டும்!" என்ற தலைப்பில் தொழில் / கல்வி வாய்ப்பினைத் தேடும் இளைஞர், யுவதிகளுக்கான ஆளுமை விருத்தி மற்றும் எதிர்காலத்தை திட்டமிடுவதற்கான வழிகாட்டல் செயலமர்வு எதிர்வரும் 27 (ஞாயிறு) அன்று யாழ்.நகரில் இடம்பெறவுள்ளது.

இதில், தனிமனித ஆளுமையை எவ்வாறு வளர்க்கலாம்?, எதிர்கால தொழில் துறை வாய்ப்புக்கள் என்ன?, பயனுள்ள தொழில் நிபுணத்துவக் கல்வியினை எவ்வாறு தெரிவு செய்வது? தனிப்பட்ட நிதியினை எவ்வாறு முகாமை செய்வது?, சுயதொழில் ஒன்றை எவ்வாறு உருவாக்கலாம்? ஆகிய தலைப்புக்களில் துறை சார்ந்த விரிவுரையாளர்கள் மற்றும் தொழில் அதிபரினால் வழிகாட்டல் செயலமர்வு இடம்பெறும்.

செயலமர்வில் கலந்துகொள்ளும் அனைவருக்கும் விரிவுரைக் குறிப்புக்கள், சிறப்புக் கையேடுகள், புத்தகம் மற்றும் மதிய உணவுடன் சிற்றுண்டி, பானங்களும் வழங்கப்படும்.

இதில் பங்குகொள்ள விரும்புபவர்கள் தங்களின் சுய விபரத்தினை vaanipam15@gmail.com என்ற மின் அஞ்சல் முகவரிக்கு அல்லது 076 866 1583 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு முற்பதிவு செய்து கொள்ளவும். வரையறுக்கப்பட்ட ஆசனங்களே உள்ளதனால் உங்களின் விண்ணப்பத்தினை உடன் அனுப்பி வைக்குமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது. (இ-7)




# சர்வதேச திரைப்பட விழாவின் தொடர்ச்சியாக யாழில் மூன்றிடங்களில் திரைப்படக்காட்சிகள்

யாழ்ப்பாண சர்வதேச திரைப்பட விழா யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்று முன்தினம் ஆரம்பமாகிய நிலையில் இன்றையதினம் வியாழக்கிழமை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கு யாழ்.நகர் மஜெஸ்ரிக் திரையரங்கு, யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் திரைப்படங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

அந்தவகையில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் முற்பகல் 10 மணிக்கு The Days of The Crows (France), பிற்பகல் 12.30 மணிக்கு Chair of Happiness (Italy), பிற்பகல் 3 மணிக்கு Ponmani (Sri Lanka), இரவு 7 மணிக்கு Red Dog (Australia) ஆகிய திரைப்படங்களும் யாழ்.நகர் மஜெஸ்ரிக் திரையரங்கில் பிற்பகல் 3 மணிக்கு Motor Bicycle ( Sri Lanka), இரவு 7 மணிக்கு The Night is Still Young (France) (வயது வந்தவர்களுக்கு மட்டும்) ஆகிய திரைப்படங்களும் யாழ். பொது நூலகத்தில் முற்பகல் 10 மணிக்கு Master Class (India), பிற்பகல் 1.30 மணி தொடக்கம் 2.30 மணி வரை குறுந்திரைப்படங்களும் பிற்பகல் 3 மணிக்கு We are Young We are Strong (Germany) (வயது வந்தவர்களுக்கு மட்டும்) ஆகிய திரைப்படங்களும் காட்சிப்படுத்தப்படவுள்ளன. அனைவரையும் பங்குகொள்ளுமாறு விழாக் குழுவினர் அறிவித்துள்ளனர். (இ-9)

# கோப்பாய் கோமானின் 56 வது நினைவு தினம்

கோப்பாய் கோமான் அமரர் கு.வன்னியசிங்கத்தின் 56ஆவது நினைவு தினமும் கல்வி உதவிநிதி வழங்கலும் இன்றைய தினம் காலை 9.30 மணிக்கு நீர்வேலி சந்தி வாழைக்குலைச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாணசபை உறுப்பினர் அ.பரஞ்சோதி தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை. சோ.சேனாதிராசா கலந்து கொள்ளவுள்ளார். இந்த நிகழ்வில் புதிய பாராளுமன்ற உறுப்பினர்கள் வடக்கு மாகாண சபை அமைச்சர்கள், உறுப்பினர்கள், கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தவுள்ளனர்.

அனைவரையும் இந்த அஞ்சலி நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு இலங்கை தமிழரசுக் கட்சியின் கோப்பாய் கிளை குழுவினர் அறிவித் துள்ளனர். (இ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டு வெவ்வேறு விபத்துக்கள் குடும்பஸ்தர் பலி; 4பேர் படுகாயம்

(மல்லாவி)

**மல்லாவியில் நடைபெற்ற இரு வெவ்வேறு விபத்து சம்பவங்களில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்த துடன் நான்கு பேர் படுகாயம் அடைந்து மல்லாவி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக வவுனியா, கிளிநொச்சி ஆகிய மாவட்ட வைத்தியசாலைகளுக்கு மாற்றப்பட்டனர்.**

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 7.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது, மல்லாவி நகரப் பகுதியில் இருந்து துணுக்காய் செல்லும் வீதியில் மல்லாவி பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில் தனியார் மின்சார வேலையில் ஈடுபடும் ஒப்பந்த நிறுவனம் ஒன்றினுடைய கன்டர் ரக வாகனமும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதுண்டு விபத்துக்குள்ளானது.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த மல்லாவி நகரப்பகுதியிலுள்ள உந்துருளி திருத்தகம் ஒன்றில் வேலைசெய்யும் மல்லாவியைச் சேர்ந்தவர்களான தருமலிங்கம் பரமேஸ்வரன்(வயது-34),சிவபாதசுந்தரம் சிவரூபன் (வயது-26) ஆகிய இருவரும் படுகாயம் அடைந்த நிலையில் மல்லாவி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டனர்.

இதேவேளை கன்டர் ரக வாகனத்தின் சாரதியான கொழும்பைச் சேர்ந்த எஸ்.நிசாந்த (வயது 23) என்பவரும் படுகாயம் அடைந்த நிலையில் மல்லாவி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மூவரில் மோட்டார் சைக்கிளில் பயணித்து விபத்துக்குள்ளானவர்கள் வவுனியா மாவட்ட வைத்தியசாலைக்கும் கன்டர் வாகனத்தின் சாரதி கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கும் மாற்றப்பட்ட போது வவுனியா மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டவர்களில் தருமலிங்கம் பரமேஸ்வரன் (வயது 34) என்ற குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி அன்றிரவே மரணமடைந்தார்.

மற்றைய விபத்து சம்பவம் மு/மல்லாவி மத்திய கல்லூரிக்கும் கொக்காவிலுக்கு செல்லும் வீதிக்கும் இடைப்பட்ட மல்லாவி துணுக்காய் வீதியில் சம்பந்தர் மில் பாலத்திற்கருகில் வீதியோரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரு சக்கர உழவு இயந்திரத்தின் இழுவைப் பெட்டி மீது நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில மு/மல்லாவி மத்திய கல்லூரியில் கடமையாற்றும் திருமதி கிருஷ்ணதாஸ் சுதாஜினி (வயது-29) என்ற ஆசிரியை பிரத்தியேக வகுப்பொன்றில் பிள்ளையை மோட்டார் சைக்கிளில் வீட்டுக்கு அழைத்து சென்றவேளை மோதுண்டு விபத்துக்குள்ளானார்.

இதில் ஆசிரியை கைமுறிந்த் நிலையிலும் பின்னால் அமர்ந்து பயணித்த பிள்ளை காயமடைந்த நிலையிலும் மல்லாவி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக ஆசிரியை கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். இவ்விரு விபத்துக்கள் தொடர்பில் தகவல் அறிந்த மல்லாவி பொலிஸார் அவ்விடத்திற்கு விரைந்து விசாரணைகளை மேற்கொண்ட னர். (2-15)




## கருங்குளவி கொட்டிற்கு இலக்கான 20பேர் வைத்தியசாலையில் அனுமதி

மு/மல்லாவி யோகபுரம் மகாவித்தியாலயத்திற்கு நேற்று காலை 7.30 மணியளவில் பாடசாலை சென்ற மாணவர்கள் மீது கருங்குளவி கூட்டம் துரத்தி கொட்டியதன் காரணமாக 15 இற்கு மேற்பட்ட மாணவர்களும் வீதியில் பயணித்த பொது மக்கள் 5 பேருமாக மொத்தம் 20 பேர் குளவி தாக்கத்திற்குள்ளாகி மல்லாவி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

மல்லாவி நகரப்பகுதியிலிருந்து பாரதிபுரம் கிராமத்திற்கு செல்லும் வீதியிலுள்ள ஆயுள் வேத வைத்தியசாலைக்கும் மு/யோகபுரம் மகாவித்தியாலயத்திற்கும் இடைப்பட்ட பகுதியிலேயே கருங்குளவி கொட்டு இடம்பெற்றுள்ளது.

இதே போன்ற சம்பவம் ஒன்று நேற்று முன்தினமும் இடம்பெற்ற போது சில மாணவர்கள் பாதிக்கப்பட்டதாக பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

குளவி கொட்டுக்குள்ளான வீதியால் பயணித்த மாணவர்கள், பொதுமக்கள் ஆகியோர் இடைமறிக்கப்பட்டு ஒரு சில மணித்தியாலங்கள் பிறிதொரு வழியால் போக்குவரத்தில் ஈடுபடுமாறு அனுப்பி வைக்கப்பபட்டமை குறிப்பிடத்தக்கது. (2-15)

## வலயமட்டத்தில் நடைபெற்று முடிந்த சிறுவர் அரங்கு போட்டி முடிவுகள்

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட ஆரம்பக்கல்வி பாடசாலை மாணவர்களுக்கு இடையே நடத்தப்பட்ட வலய மட்ட சிறுவர் அரங்குப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பாடசாலைகளின் பெயர் விபரங்களை துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி,எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய முதல் மூன்று இடங்களையும் பெற்ற பாடசாலைகளின் பெயர் விபரங்கள் வருமாறு, மு/அனிஞ்சியன்குளம் தமிழ் வித்தியாலயம், மு/முத்துவிநாயகர் தமிழ் வித்தியாலயம், மு/குமாரசாமி வித்தியாலயம், மு/முத்தையன்கட்டு இடதுகரை அ.த.க.பாடசாலை.

மேற்படி வலயமட்ட போட்டியில் முதலாமிடத்தைப் பெற்ற சிறுவர் அரங்கக் குழு மாகாணமட்ட போட்டிக்கு, எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு வவு / தமிழ் மத்திய மகாவித்தியாலயத்திற்கு சமுகமளிப்பதற்கான நடவ டிக்கையை பாடசாலை அதிபரை மேற்கொள்ளுமாறு துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (2-15)

## மருத்துவ நிர்வாகத்துறை சார்ந்தவர்கள் பற்றாக்குறை

### வடமாகாண சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

(குருமன்காடு)


மருத்துவ நிர்வாகத்துறை சார்ந்தவர்கள் எமது பிரதேசங்களில் இல்லாத நிலையில் அகிலேந்திரனின் இடமாற்றம் ஏற்றதல்ல என வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப. சத்தியலிங்கம் தெரிவித்தார்.


வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியகலாநிதி கு. அகிலேந்திரனுக்கு இடமாற்றம் வழங்கப்படவுள்ளதாகவும் இதனை நிறுத்த தன்னாலான முயற்சியை மேற்கொள்வேன் எனவும் வடமாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ப. சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

வவுனியா பொது வைத்தியசாலை பணிப்பாளருக்கு இடமாற்றம் வழங்கப்படவுள்ளதாக கிடைக்கப்பெற்ற தகவலை உறுதிப்படுத்தும் முகமாக அவரிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், பணிப்பாளர் கு. அகிலேந்திரனை இடமாற்றம் செய்யவுள்ளதாகவும் இவ் இடமாற்றம் மத்திய அரசினால் மேற்கொள்ளப்படும் ஓர் இடமாற்றமாகும். எனினும் வைத்தியசாலைக்கு சிரேஷ்ட மருத்துவ நிர்வாகத்துறையை சேர்ந்தவர்களே நியமிக்கப்படவேண்டும் என்ற அடிப்படையில் தற்போது இதற்கு பாரிய வெற்றிடம் காணப்பட்டு வரும் நிலையில் மருத்துவத் துறையில் நிர்வாக அதிகாரியான வைத்திய கலாநிதி கு. அகிலேந்திரனை இவ்வாறு இடமாற்றம் செய்வது எமது பிரதேசங்களுக்கு பாரிய இழப்பாகும்.

வவுனியா வைத்தியசாலை இவருடைய காலத்தில் பல்துறையிலும் அபிவிருத்தி அடைந்து வருவதுடன் சிறந்த முகாமைத்துவத்தையும் மேற்கொண்டிருந்தார். இந்நிலையில் இவருக்கு பணி இடமாற்றம் கிடைக்கப் பெறவுள்ளதாகவும் எனினும் இவ் இடமாற்றத்தினை நிறுத்துமாறு மத்திய சுகாதார அமைச்சின் செயலாளர்களுடன் கலந்துரையாடுவேன் என சுகாதார அமைச்சருக்கு எடுத்துக் கூறுவேன் என அவர் மேலும் தெரிவித்தார். (2-250)






**வவுனியா ஆசிகுளம் சித்தி விநாயகர் ஆலயத்தில் நேற்று முன்தினம் சர்வதேச விசாரணையை வலியுறுத்தி கையெழுத்து போராட்டம் இடம் பெற்றது. இதில் இந்துமத குருமார்கள், பொது மக்கள் ஆகியோர் பங்கேற்றனர். (படங்கள்:குருமன்காடு செய்தியாளர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதியில் மூவின மக்களும் இணைந்து ஆர்ப்பாட்டம்


(குருமன்காடு)

வவுனியா, நெளுக்குளத்திலிருந்து செட்டிகுளம் செல்லும் நேரியகுளம் ஊடான பிரதான போக்குவரத்து பாதையானது கடந்த 35 வருட காலமாக திருத்தம் செய்யப்படாமையைக் கண்டித்து நேற்று காலை மூவின மக்களும் ஒன்றுதிரண்டு பதாகைகளை ஏந்தியவாறு பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

உலுக்குளம் சந்தியில் ஒன்றுகூடிய தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் போக்குவரத்துக்கு இடையூறு இல்லாத வகையில் வீதியின் இருமருங்கிலும் நின்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன் அங்கிருந்து ஊர்வலமாக உலுக்குளம் பாடசாலை வரை சென்று ஆர்ப்பாட்டத்தை நிறைவு செய்திருந்தனர்.

தினமும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொது மக்கள் பயன்படுத்தும் இவ் வீதியில் அரச திணைக்களங்கள், வைத்தியசாலைகள், பாடசாலை, ஆடைத் தொழிற்சாலை என்பன அமைந்துள்ள நிலையில் 35 வருடகாலமாக குறித்த வீதி திருத்தப்படாமையால் போக்குவரத்து செய்வதில் பெரும் இடையூறுகளை எதிர்கொள்வதோடு விபத்துக்களும் சம்பவிக்கின்றன.

இது தொடர்பாக அரச அதிகாரிகளுக்கு சுட்டிக்காட்டிய போதிலும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லையென தெரிவித்த ஆர்ப்பாட்டக்காரர்கள் சுமார் 25 கிலோ மீற்றர் தூரமான இவ்வீதியை செப்பனிட்டு தருமாறு கோரிக்கை விடுத்தனர்.

இதேவேளை தமது கோரிக்கை அடங்கிய மகஜரை ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கும் அனுப்பி வைக்கவுள்ளதாகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

இச்சம்பவ இடத்திற்கு வருகைதந்த வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனிடமும் மக்கள் மகஜர் ஒன்றையும் கையளித்தமை குறிப்பிடத்தக்கது. (2-250-281)




# விவசாய உள்ளீடுகள் விநியோக நிகழ்வு இன்று

(வவுனியா)

வவுனியா விவசாய திணைக்களத்தின் ஏற்பாட்டில் மாகாண குறித்தொதுக்கப்பட்ட 2015 அபிவிருத்தி நிதியத்தின் கீழ் விவசாய உள்ளீடுகள் விநியோக நிகழ்வு இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு முருகனூரில் உள்ள மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் கலந்துகொண்டு விவசாயிகளுக்கான உள்ளீடுகளை வழங்கி வைக்கவுள்ளார்.

உள்ளீடுகள் தெரிவு செய்யப்பட்ட 100 பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளது.

சாக்கு படங்குகள், உழுந்து, பசன் மரக்கன்றுகள், இளைய வளர்ப்பு வாழைக்குட்டிகள், விதைநெல் ஆகிய உள்ளீடுகள் பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளது.

அத்துடன் 50 வீதம் மானிய அடிப்படையில் வெங்காயக் கொட்டகைகள் அமைத்த ஈரட்ட, பம்பைமடு, கோவில் குளம், ஓமந்தை, செட்டிகுளம், நெடுங்கேணி ஆகிய விவசாய போதனாசிரியர் பிரிவுகளைச் சேர்ந்த 6 பயனாளிகளுக்கு தலா 50 ஆயிரம் ரூபா வீதம் காசோலைகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை காலம் தவறிய மரக்கறி செய்கைக்கான 50 வீதம் மானிய அடிப்படையில் வலை வீடுகள் அமைத்த ஓமந்தை, நெடுங்கேணிஆகிய விவசாய போதனாசிரியர் இரண்டு விவசாயிகளுக்கு ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான உள்ளீடுகளுக்கான சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளது.

இவர்களுக்கான உள்ளீடுகள் ஏற்கனவே வழங்கப்பட்டு வலைவீடுகள் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேபோன்று கோவில் குளம் விவசாயப் போதனாசிரியர் பிரிவில் நாற்று மேடையாளர்களை வலுப்படுத்தும் திட்டத்தில் 50 வீதம் மானிய அடிப்படையில் வலைவீடு அமைத்த விவசாயி ஒருவருக்கு ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான உள்ளீடுக்கான சான்றிதழும்

நெடுங்கேணி, பம்பைமடு, கனகராயன் குளம் ஆகிய விவசாய போதனாசிரியர் பிரிவுகளைச் சேர்ந்த தாவரங்களை கடினப்படுத்தும் பகுதியையும் மற்றும் தாவர இனப்பெருக்குகளையும் அமைத்த மூன்று விவசாயிகளுக்கு 50 வீதம் மானிய அடிப்படையில் தலா 60 ஆயிரம் ரூபா பெறுமதியான உள்ளீடுகளுக்கான சான்றிதழ்கள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (2)

# எள்ளுக்காடு சிறுமி வழக்கு விசாரணை ஒத்திவைப்பு



(மல்லாவி)

கிளிநொச்சி எள்ளுக்காடு பகுதியில் 3 வயது சிறுமி (ஜெருசா) பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டமை தொடர்பிலான வழக்கு விசாரணை நேற்று கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

குறித்த கொலையுடன் சம்பந்தப்பட்டவர் என சந்தேகிக்கப்படும் 14 வயதுடைய சிறுமியின் ஒன்றுவிட்ட சகோதரன் மன்றில் ஆஜர் செய்யப்பட்டார். இவ்வழக்கினை விசாரணை செய்த் நீதிபதி எதிர்வரும் 30 ஆம் திகதி வரை ஒத்தி வைத்தார். (2-15)

# விளையாட்டரங்கின் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படும்

## செல்வம் எம்.பி தெரிவிப்பு

(மன்னார்)

மன்னார் எழில்நகர் பகுதியில் சுமார் 23 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்படவுள்ள அதி நவீன வசதிகளைக் கொண்ட விளையாட்டு அரங்கின் ஆரம்பப்பணிகள் சில தினங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

மன்னார் எழில் நகர் பகுதியில் அமைக்கப்படவிருந்த அதிநவீன வசதிகளைக் கொண்ட விளையாட்டரங்கு அரசியல்வாதி ஒருவரின் தலையீட்டினால் வேறு கிராமம் ஒன்றில் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

இதனால் மன்னார் எழில் நகர் பகுதியில் குறித்த விளையாட்டரங்கு அமைக்கும் பணிகள், சில வருடங்களாக கிடப்பில் போடப்பட்டிருந்தது.

இதனால் இந்த விளையாட்டரங்கு தொடர்பாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்ற குழுக்களின் பிரதி அவைத் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன், விளையாட்டுத்துறை அமைச்சர் மற்றும் உரிய அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு வந்ததோடு குறித்த மைதானம் எழில் நகர் பகுதியில் அமைக்கப்பட வேண்டும் எனவும் இதனால் சகல கிராம விளையாட்டு வீரர்களும் பயனடைவார்கள் என்பதையும் வலியுறுத்தினார்.

இதனால் விளையாட்டரங்கு மன்னார் எழில் நகர்ப் பகுதியிலேயே அமைப்பதற்கான சகல அனுமதிகளும் வழங்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2)

# 8 வயதுச் சிறுமி துஷ்பிரயோகம்; இளைஞனுக்கு விளக்கமறியல்

(முள்ளியவளை)

முள்ளியவளையிலுள்ள கிராமம் ஒன்றில் 8 வயது சிறுமி மீது 20 வயது இளைஞன் பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் என்ற குற்றச்சாட்டில் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தியபோது இளைஞனை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

கடந்த 14 ஆம் திகதி பாடசாலை முடிந்து வீடு திரும்பிக்கொண்டிருந்த சிறுமியை தாயார் அழைத்துவருமாறு கூறி துவிச்சக்கர வண்டியில் ஏற்றி சென்றுள்ளார்.

இதன்பின்னர் குறித்த சிறுமி வீதியால் சென்றுகொண்டிருக்கையில் நடையில் தளர்வை அவதானித்த அயலவர் சிறுமியிடம் விசாரித்தபோது சிறுமி நடந்தவற்றை விபரமாக கூறியுள்ளார்.

தகவலறிந்து விரைந்து செயற்பட்ட மக்கள், இளைஞர்கள் ஆகியோர் இளைஞனை மடக்கிப்பிடித்து நையப்புடைத்த பின் முள்ளிவளைப் பொலிசாரிடம் ஒப்படைத்தனர்.

விசாரணைகளை மேற்கொண்ட பொலிசார் மருத்துவ பரிசோதனைக்காக சிறுமியை மாஞ்சோலை மருத்துவமனையில் அனுமதித்தனர்.


குறித்த இளைஞனை நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் முற்படுத்திய வேளை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (2-302)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்டங்கள் கடுமையாக்கப்படும் - அமைச்சர் சந்திராணி

நாட்டில் இடம்பெறும் சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கும் சிறுவர்களையும் மகளிர்களையும் பாதுகாப்பதற்குமான சட்டத்தை மிகவும் கடினமாக்கப்படவேண்டும் என்று மகளிர் மற்றும் சிறுவர்கள் அபிவிருத்தி அமைச்சர் சந்திராணி பண்டார தெரிவித்தார்.

இசுருபாயவில் அமைந்துள்ள மகளிர் மற்றும் சிறுவர்கள் அபிவிருத்தி அலுவலகத்தில் தனது கடமைகளை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பொறுப்பேற்று கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். "தாயின் அரவணைப்பில் இருக்கவேண்டிய சேயா செதவ்மியின் இழப்பு எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும். இவ்வாறான கொடூரச் செயல்கள் இனியும் நடப்பதை தடுப்பதற்கு கடுமையான சட்டங்கள் கொண்டு வரப்பட வேண்டும். சேயா செதவ்மியின் மரணத்துக்கு காரணமானவர்கள் யார் என்பது கண்டுபிடிக்கப்பட்ட பின்னர், எந்தவொரு மன்னிப்பும் வழங்கப்படாது. கடுமையான தண்டனை வழங்கவேண்டிய பொறுப்பு என்னிடம் உண்டு என்பதை உறுதியாக தெரிவிக்கின்றேன்" என்று அவர் மேலும் தெரிவித்தார். மேலும் குற்றவாளிக்கு சட்டத்திலிருந்து தப்பவிடாது, ஜனாதிபதி, பிரதமர் மற்றும் நீதியமைச்சு ஆகியோருடன் இணைந்து, தகுந்த தண்டனை பெற்றுக் கொடுக்கப்படுவது மட்டுமல்லது, இனி இப்படியானதொரு சம்பவம் நாட்டில் இடம்பெறுவதற்கு எப்போது இடமளிக்கமாட்டோம் என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)




# மரணதண்டனை வேண்டும் அமைச்சர் சஜித் பரிந்துரை

(கொழும்பு)

**சிறுவர்கள் மற்றும் மகளிர் சமூகத்தை பாதுகாப்பதற்கும் அவர்களுக்கு எதிராக நடைபெறும் குற்றங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கும் மகளிர் மற்றும் சிறுவர்கள் அபிவிருத்தி அமைச்சும் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சும் ஒன்றிணைந்து ஒரு தேசிய ஒருங்கிணைப்பு திட்டம் ஒன்றை அறிமுகம் செய்யவுள்ளதாக தெரிவித்த வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாச இதனை மீறுவோருக்கு மரண தண்டனை வழக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.**

மகளிர் மற்றும் சிறுவர்கள் அபிவிருத்தி அமைச்சராக பதவியேற்றுக்கொண்ட அமைச்சர் சந்திரானி பண்டார, நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்த வைபத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"சிறுவர்களுக்கும் மகளிருக்கும் எதிராக இடம்பெறும் துஷ்பிரயோகங்களுக்கு நடவடிக்கை எடுப்பதற்காகவே நாம் இவ்வாறானதொரு திட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம்.

இதையும் மீறி தவறுகள் நடைபெறுமாயின், குற்றவாளிகளுக்கு மரண தண்டனை வழுங்கப்பட வேண்டும்" என்று அவர் தெரிவித்தார்.

மேலும், துஷ்பிரயோக சம்பவங்களில் ஈடுபடும் குற்றவாளிக்கு தண்டனை வழங்குவதற்கு தேசிய அரசாங்கம் அவசியம் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.(இ-7)

## சிறுமி படுகொலை தொடர்பில் மூவர் மீது விசேட அவதானம்

படுகொலை செய்யப்பட்ட கொட்டதெனியாவ - படல்கம, அக்கராங்கஹ பகுதியைச் சேர்ந்த சேயா செதவ்மி என்ற சிறுமியின் இறுதிக் கிரியைகள் நேற்று முன்தினம் இடம்பெற்றன. நேற்று சேயா செதவ்மி தனது 5 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாட இருந்த நிலையிலேயே நேற்று முன்தினம் மாலை அவரது இறுதிக் கிரியைகள் இடம் பெற்றன.

இந்த நிலையில் சிறுமி சேயா செதவ்மியின் படுகொலை விசாரணைகளில் எவரும் நேற்று முன்தினம் மாலை வரை கைது செய்யப்படாத போதும் மூவர் குறித்து விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக விசாரணைகளுக்கு பொறுப்பான உயர் பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

எவ்வாறாயினும் இன்று அல்லது நாளைக்குள் இடம்பெறும் சில முக்கியமான விசேட சோதனைகள் மற்றும் அறிவியல், பௌதீகவியல் சான்றுகளை முன்னிறுத்திய விசாரணைகளில் சந்தேக நபரை அல்லது கொலைக்குற்றவாளகளை உறுதியாக அடையாளம் காணக் கூடியதாக இருக்கும் என தாம் நம்புவதாகவும் அந்த பொலிஸ் அதிகாரி மேலும் தெரிவிததார்.

இதனிடையே இந்த விவகாரம் குறித்த சட்ட நடவடிக்கைகள் மற்றும் விசாரணைகளுக்கு டீ.என்.ஏ.மூலக்கூறுகள் மற்றும் அறிவியல் ரீதியிலான தடயங்களை பயன்படுத்த பொலிஸார் தீர்மானித்துள்ளமைக்கமைய அந்நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. நேற்று மாலை 5 மணி வரையில் இந்த விவகாரம் குறித்து சிறுமியின் தாய் மற்றும் தந்தை, பாட்டன், பாட்டி உள்ளிட்ட 20 இற்கும் அதிகமானோரின் வாக்கு மூலங்களை பொலிஸார் பதிவு செய்திருந்தனர்.

கொட்டதெனியாவப் பிரதேசத்தில் உளவுப்பிரிவு உத்தியோகத்தர்களை கடமையில் ஈடுபடுத்தி இந்த படுகொலை மற்றும் அதனுடன் தொடர்புடைய பல தகவல்களையும் சேகரித்துள்ளனர். அதன்படி மேலதிக விசாரணைகள் இடம்பெறும் நிலையில் விரைவில் சந்தேக நபர்கள் கைதாவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந் நிலையில் இவை தொடர்பிலான விசாரணைகளுக்கு மூன்று விசேட பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் கொட்டதெனியாவ பொலிஸ் நிலையத்துக்கு மேலதிகமாக திவுலபிட்டிய மற்றும் கந்தானை ஆகிய பொலிஸ் நிலைய அதிகாரிகள் அந்த குழுக்களில் அங்கம் வகிப்பதாகவும் பொலிஸ் தலைமையகத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அத்துடன் ஒட்டுமொத்த விசாரணைகள் நீர்கொழும்பு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கட்டுப்பாட்டில் இடம்பெறுவதாகவும் அவர் தெரிவித்தார்.

கொட்டதெனியாவ படல்கம அக்கராங்கஹ பகுதியைச் சேர்ந்த சேயா செதவ்மி கடந்த சனிக்கிழமை அதிகாலை காணாமற் போயிருந்தார். அதன்பின்னர் மறுநாள் அவர் வீட்டிலிருந்து 200 மீற்றர் தூரத்தில் உள்ள ஓடையொன்றின் அருகில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

இது தொடர்பிலான விசாரணைகள் பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோனின் நேரடி கட்டுப்பாட்டில் மேல் மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர, மேல் மாகாணத்தின் வடக்குப் பிராந்தியத்துக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் எல்.ஜி.குலரத்ன ஆகியோரின் கட்டுப்பாட்டில் நீர்கொழும்பு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அபே விக்ரமவின் ஆலோசனைக்கு அமைய முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மரணதண்டனையை மீளவும் அறிமுகம் செய்ய வேண்டும்

### ரஞ்சன் ராமநாயக்க வேண்டுகோள்

மரண தண்டனையை மீளவும் அறிமுகம் செய்ய வேண்டுமென பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

மரண தண்டனை அமுல்படுத்துவது குறித்த பிரேரணை ஒன்று எதிர்வரும் 22 ஆம் திகதி நாடாளுமன்றில் சமர்ப்பிக்கத் திட்டமிட்டுள்ளேன்.

பிரேரணையாக அல்லது ஒத்தி வைக்கப்பட்ட பிரேரணையாக முன்வைப்பதா என்பது குறித்து அமைச்சர்கள் கலந்தாலோசித்து வருகின்றனர்.

இந்த விடயம் குறித்து ஜனாதிபதி மற்றும் பிரதமரை தெளிவுபடுத்தி அவர்களின் ஆலோசனையும் பெற்றுக்கொள்ளப்படவுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியைப் போன்றே ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பலரும் மரண தண்டனையை அமுல்படுத்த விருப்பம் வெளியிட்டுள்ளனர்.

நாட்டின் ஒட்டுமொத்த மக்களும் இந்த தீர்மானத்திற்கு ஆதரவளித்துள்ளனர்.

நாட்டில் மரண தண்டனை அமுல்படுத்தப்பட்டிருந்தது. எனவே தற்போது புதிதாக மரண தண்டனை அறிமுகம் செய்யப்படவில்லை. ஏற்கனவே இருந்தது மீளவும் அமுல்படுத்தப்படவுள்ளது.

குற்றச் செயல் இடம்பெற்றவுடன் அது குறித்து பேசி பின்னர் அதனை மறந்து விடும் கலாசாரம் நாட்டில் நிலவுகின்றது.

இம்முறை அமைச்சரவை மரண தண்டனையை அமுல்படுத்தும் வரையில் அதற்கான முனைப்புக்களை மேற்கொள்ளும்.

கடந்த காலங்களில் கொலைகள், பாலியல் வன்கொடுமை, சிறுவர் துஷ்பிரயோகம், போதைப் பொருள் கடத்தல் உள்ளிட்ட பாரிய குற்றச்செயல்களுடன் தொடர்புடைய குற்றவாளிகள் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

பிணையில் செல்லும் குற்றவாளிகள் மீளவும் குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர் என ரஞ்சன் ராமநாயக்க சிங்கள பத்திரிகை ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார். (இ-7)


பதினேழாவது ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு:-21.05.1981

உதிர்வு:-25.08.1998



செல்வி நிஷாலினி நாகேந்திரம் (சுகி)

திதி: ஆவணிச் சதுர்த்தி

17.09.2015

நெஞ்சினிலே நீ! சுமந்தாய் கனவுகள் - கோடி
வஞ்சகரை உறவென எண்ணினாய் - நாடி
பிஞ்சு உனக்கு நஞ்சம் செய்தார்கள் - தேடி
தஞ்சமென நினைத்த மாலுசந்தியாலும்
வஞ்சகம் செய்து விட்டான் - கூடி
நீ பூமியில் வாழ்ந்ததும் மறைந்ததும்
பதினேழாண்டுகளாகின்றன.

உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை
என்றென்றும் பிரார்த்திக்கின்றோம்.

சுகிஸ்தான்
அல்வாய்.

உமது பிரிவால் என்றென்றும் வாடி நிற்கும்
பெற்றோர் - குடும்பத்தினர்.

(1785)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இளம் பெண் கடத்தல்!

கனடாவில் இருந்து திருமணத் திற்காக சொந்த ஊரான உடுப்பிட்டி இமையாணன் பகுதிக்கு பெற்றோருடன் வந்த இளம் பெண் ஒருவர் கடந்த 14 ஆம் திகதி இரவு 10 மணியளவில் மூன்று இளைஞர்களால் கடத்தப்பட்டுள்ளார். பிரஸ்தாப பெண்ணின் வீட்டி ற்குச் சென்ற மூன்று இளைஞர்கள் வீட்டுக் கதவை உடைத்து பெண்ணை மோட்டார் சைக்கிளில் வரணிப் பகுதிக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

இதனையடுத்து நள்ளிரவு வல்வெட்டித்துறைப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து பொலிஸார் உடனடியாக செயற்பட்டு சந்தேக நபர்களின் வீட்டிற்குச் சென்றுள்ளனர்.

வீடு பூட்டப்பட்டிருந்த நிலையில் சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவிக்கப்பட்டு பொலிஸார் அவர்களைத் தேடி வலை விரித்தனர்.

பொலிஸார் தம்மைப் பின் தொடர்வதை உணர்ந்த இளைஞர்கள் அப்பெண்ணை வீட்டில் கொண்டுவந்து விட்ட நிலையில் இளைஞர் கள் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் காலை கைது செய்யப்பட்ட இவர்களிடம் பொலி ஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை பிரஸ்தாப பெண் 4 வருடங்களுக்கு முன்னர் கனடா வுக்குச் சென்றிருந்தார் என்றும் இன்றைய தினம் திருமணத்திற்காக பொன்னுருக்கு நடைபெறவிருந்த வேளை மேற்படி சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இதேவேளை மேற்படி கடத்தல் சம்பவத் தில் 8 இளைஞர்கள் சம்பந்தப்பட்டுள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் தெரிய வந்து ள்ளது. ஏனைய 5 சந்தேக நபர்களையும் கைது செய்வதற்கான முயற்சியில் பொலி ஸார் ஈடுபட்டுள்ளனர். (இ-3-60)


## ஏல விற்பனை

எமது பாடசாலையில் பாவித்த பழைய பொருட்கள் ஏலத்தில் விற்பனை செய்யப் படவுள்ளது.

இடம்: பாடசாலை வளவு
காலம்: 01.10.2015 (வியாழக்கிழமை)
நேரம்: 10.00 மணி

பொருட்கள்
1. மரத்தளபாடங்கள்
2. பழையபுத்தகங்கள்

அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

அதிபர்
யா/கோப்பாய்கிறிஸ்தவ கல்லூரி
கோப்பாய்

"றோயல் சுத்தமான தேங்காய் எண்ணெய்"

சுப்பு:- என்ன மணியண்ணே, கடைக்கு வந்து எல்லாத்தேங்கா யெண்ணைப் போத்தலையும் முறைச்சுப் பார்க்கிறியள்?
மணி:- இதில உள்ள எல்லாத்தையும் வாங்கி சமைச்சுப் பாத்திட்டன் ஒண்டிலையும் வாசனையோ சுவையோ இல்லை. எல்லாம் கலப்படம்.
சுப்பு:- இதுக்கு ஏன் குழப்பம். நேரடியா சிவா நறுமணப் பூங்கா கடைக்கு போங்கோ. அங்க "றோயல் தேங்காய் எண்ணையிண்ட" சாம்பிளை வாங்கி கையில் பூசி மணந்து பாருங்கோ. பிறகு நீங்க அந்தத் தேங்காயெண்ணையை மட்டும் தான் வாங்குவியள். தரமான சுவையான, வாசனையான சாப்பாட்டிற்கு "றோயல் சுத்தமான தேங்காயெண்ணையை" அடிக்க எதுவும் இல்லையண்ணே. இப்ப 200ml, 500ml அளவில கிடைக்குது. சாப்பாட்டிற்கு மட்டுமல்லாம தலைக்கும் வைக்கலாம்.
மணி:- அப்ப ஒரு கல்லில இரண்டு மாங்காய் எண்டு சொல்லு சுப்பு. எல்லா கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.


ஏக விநியோகஸ்தர்
சிவா நறுமணப் பூங்கா
இல. 288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே:-021 222 2567

Packed By
Royal Industry
Colombo-13

(1789)


## 31.12.2014 அன்று வலம்புரியில் வெளிவந்த 19 ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...

# சுழிபுரம்-பறாளாய் ஈசுர விநாயகர் தேவஸ்தானம்



**மனித சக்தியை ஆட் டிப்படைப்பது தெய் வீக சக்தி**

**என் இனிய நெஞ் சங்களே!**

**24 ஆண்டுகள் ஐயா வின் ஆன்மீகப் போராட் டப் பாதையிலே...**

ஈசுர விநாயகரிடம் நம் பிக்கையுடன் தும்பிக்கை யிலே நாட்டுப்பிரச்சினை சம்பந்தமான மனுத்தாக்கல் செய்தமை (08.11.1991) அம்மனுவின் முக்கிய கோரிக்கை- கொழும்பு அரசியல் சூறாவளி. **ஆன்மீகம் எப்படிப்பட்டது?**

இது ஒரு குடையைப் போன்றது. குடை வெயி லிலும் மழையிலும் மனிதனைப் பாதுகாக்கிறது. அதுபோன்றே மனித வாழ்வில் இன்பத்திலும் துன்பத்திலும் கைகொடுப்பது ஆன்மீகமே.

### புது அத்தியாயத்தில் ஆன்மீகம் (நாட்டில் நல்லாட்சிக்கான மாற்றம்)



30.12.2014 அன்று யாழ். குடா நல்லூர் கிட்டு பூங்காவில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் பிரசார மாபெரும் பொதுக் கூட்டத்தில் தற்போதைய மேன்மைதங்கிய ஜனா திபதி மைத்திரிபால சிறி சேன தரப்பினரின் நிகழ்வில் கலந்து கொண்டு ஈசுர விநாயகரின் அருளாசியுடன் மங்கல விளக்கேற்றினேன். ஆன்மீகம் கைகொடுத்தது. தமிழர்களின் வாக்குகளால் வெற்றிவாகை சூடினார். மைத்திரிபால சிறிசேன அவர்கள் மேன்மைதங்கிய ஜனாதிபதியானார். நாட்டில் நல்லாட்சி மலர்ந்திட தம்மை அர்ப்பணித்த புன்முறுவல் பூத்த புன்னகை மன்னனே! நீடூழி வாழ்க! உன் புகழ் ஓங்குக!.

### மீண்டும் சந்திரிகா



என்ன யோசிக்கிறீர் கள்? இதுதான் தெய் வீகம். சமாதானத்திற்கு உரியவர் பெண்தான். இப்போது அம்மையார் ஒரு மறைமுக ஆட்சி நடத்திக்கொண்டு இருப் பதை யாவரும் அறிவீர் கள். இன்னும் அம்மை யார் எப்போது? எப்படி? பதவிக்கு வரப்போ கிறார் என்று பொறுத்திருந்து பாருங்கள் நடைமுறையில் உணருங்கள்.

இன்னும் 2014ஆம் ஆண்டு மார்கழி மாதம் கொழும்பு கோட்டை நாகவிகாரைக்குச் சென் றேன். அங்கே விகாராதிபதியும் நாட்டில் தற்போதைய நல்லாட்சிக்கு வித்திட்டவருமான மாதுளுவாவே சோபித தேரரைச் சந்தித்து எனது ஆன்மீகப் போராட்டம் பற்றிக் கலந்துரையாடினேன். அப்போது ஈசுர விநாயகர் அருட்குரல் துண்டுப்பிரசுரத்தைக் காண்பித்து




மீண்டும் சந்திரிகா என்று தெரியப்படுத்தினேன். அவர் ஈசுர விநாயகர் அருட் குரலை நன்றாகப் பார்வை யிட்டார்.

பின்னர் யாவற்றையும் நன்றாகக் கேட்டறிந்து ஆச்சரியம் அடைந்தார். நீங்கள் இந்த ஆன்மீகப் போராட்டத்தில் வெற்றிபெற எனது நல்லாசிகள் என்று வாழ்த்திவிட்டார்.

### மேன்மைதங்கிய முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் தோல்வி பற்றி...

ஈசுர விநாயகரின் சமாதான அரணின் தெற்குப் பக்கமாக அமைந்துள்ளது சிங்கள மக்களுக்குரிய நுழைவாயில். இந்நுழை வாயினால் 2013ஆம் ஆண்டு எல்லாவெல மேதானந்ததேரர் (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்) திறந்து வைத்தார். ஐயாவின் ஆன்மீகப் போராட்டம் பற்றி நன்கறிந்தவர்.

அவர் கடந்த ஜனவரியில் என்னுடன் உரையாடும் போது வரும் ஜனாதிபதித்



தேர்தலில் மகிந்த வெற்றி பெறுவாரா? ஈசுர விநாய கர் என்ன காட்டியுள்ளார்.? என்று கேட்டார். உடனே ஈசுர விநாயகர் காட்டி யருளியதை அவரிடம் கூறினேன். ஜனாதிபதி மகிந்த அவர்கள் ஓர் பனைமர உச்சியில் நிற்ப தைக் கண்டேன். பின்னர் இறங்குவதற்கு முயற்சிப்பதைக் கண்டேன். இறங்க முடியாமல் தடுமாறவும் கண்டேன். பின் தொப்பென விழுவதைக் கண்டேன். அவரை நோக்கி ஓடினேன் தலையில் இரத்தம் வடிந்தோடுவதைக் கண்டேன். பனைமரம் என்பது தமிழர்களின் சொத்து (வாக்குகள்) தமிழரின் பிரச்சினையை வைத்தே ஆட்சி நடத்தியவர்.

தமிழர்களினாலேயே பதவியும் பறிபோனது. இவருக்கு ஆட்சியைக் கொடுத்தவரும் ஈசுர விநாயகரே. இப்போது பதவியைப் பறித்தவரும் அவரே. இதன்மூலம் இலங்கை அரசியலை நடத்திக் கொண்டிருப்பவர் ஈசுர விநாயகரே என்பதில் ஐயமே இல்லை.

### உங்கள் பிரச்சினை தீர்க்க எவருமே இல்லை. ஆளில்லாத காரணத்தால் நானே வருகின்றேன்

என்று கூறியருளிய ஈசுர விநாயகர் இன்று உங்கள் எல்லோரினதும் பிரதி நிதியாக உங்கள் முன்னிலையில் விக்னேஸ்வரன் ஐயாவைத் தாங்கி நடாத்திக் கொண்டிருக்கின்றார் என்பதில் ஐயமே இல்லை. அதாவது எமது நாட்டுப்பிரச்சினை தீரு வதற்கு முன்னர் எல்லோருமே ஒற்றுமையாக இருக்க வேண்டும். ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுகாரணமாகத்தான் ஈசுரவிநாயகர் மனித வடிவம் தாங்கி எல்லோரையும் வழிநடத்திக் கொண்டிருக்கின்றார் என்பதை முதலில் உணர் வோமாக. இதனை விக்னேஸ்வரன் ஐயாவின் செயற்பாடுகள் உங்கள் எல்லோரையும் உணர வைக்கும். மேலும் எமது நாட்டுப் பிரச்சினை இறு திக்கட்டத்தில் நிற்கின் றது. தீருவதற்குரிய சந் தர்ப்பம் சூழ்நிலைகளை



உருவாக்கிக் கொடுப்பதற்கே இத்தேர்தல் நடக்கின்றது என்பதை உங்கள் எல்லோருக்கும் கூறிவைக்க விரும்புகிறேன். எனது ஆன்மீகப் போராட்டத்தில் காட்டியருளிய நடக்காத தர்சனங்கள் எல்லாம் நிறை வேற்றுகின்ற காலம் இப்போது ஆகும்.

### தமிழர்களின் ஆட்சி பற்றிய தீர்ப்பு (01.01.1994)

ஒரு மாடி வீட்டைக் காட்டியருளினார். அதாவது கீழ்மாடி வடக்கு மாகாணம் மேல் மாடி கிழக்கு மாகாணம். எனவே இணைப்புடன் கூடிய ஆட்சி என்பது எமது கணிப்பாகும். இவ்வாறு ஒரு வகைச் சமஷ்டி முறையி லான ஆட்சியையே ஈசுர விநாயகர் காட்டியருளினார்.

### தீராத எங்கள் நாட்டுப் பிரச்சினை தீருமா...?...?....?

இன்று தீரும் நாளை தீரும் என்று காலம் காலமாக எல்லோரும் எதிர்பார்த்து பார்த்து ஏமாந்த காலங்கள்... அதனால் இப்போதும் நம்ப மனம் மறுக்கத்தான் செய்யும். ஆனால் ஈசுர விநாயகன் உங்கள் எல்லோரையும் ஆச் சரியப்படும் வகையில் நம்பவைக்கத்தான் போகி ன்றார். தீராத பிரச்சி னையைத் தீர்க்கத்தான் போகின்றார்.



மனிதன் தன்னால் முடியுமென்றால் இறை வன் எதற்கு? நாட் டில் எது எவ்வாறு நடப்பி னும் நாட்டைக் காக்க வேண்டியது அனைத்து மக்களின் தலையாய கடமையாகும்.

எனவே இந்து சமுத்திரத்தின் முத்து என்ற சிறப்புடைய எமது வளமான அழ கான தாய்நாட்டை அனைத்து மக்களும் இன, மத, பேதமின்றி அரசியல் கட்சி பேதமி ன்றி அமைதி காத்து நாட்டைப் பாதுகாப் போமாக.

சோழியூரான் பிறைசூடிக் குரு. குருமாத்தயா
(ஆன்மீகவாதியும் சந்ததிப் பூசகரும்)

# குவைத் மசூதி மீது தாக்குதல் 7 பேருக்கு மரணதண்டனை

## குவைத் நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு



(குவைத்)

**குவைத்தில் மசூதிக்குள் தற்கொலைப்படை தாக்குதல் நடத்தி 26 பேரை படுகொலை செய்த வழக்கில் 7 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.**

குவைத்தில் உள்ள அல் சாதிக் மசூதியில் கடந்த ஜூன் மாதம் 26 ஆம் திகதி தொழுகை நடைபெற்றுக்கொண்டிருந்தபோது, உள்ளே புகுந்த தற்கொலைப்படை தீவிரவாதி தனது உடலில் கட்டியிருந்த சக்திவாய்ந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்தான். இதில், 2 இந்தியர்கள் உட்பட 26 பேர் உடல் சிதறி பலியாகினர்.

குவைத் வரலாற்றில் மிக மோசமான தாக்குதலாக கருதப்படும் இச்சம்பவத்திற்கு ஐ.எஸ். தீவிரவாத அமைப்பு பொறுப்பேற்றது. இது தொடர்பாக பலர் கைது செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வந்தது. விசாரணை முடிவடைந்த நிலையில், நேற்று தீர்ப்பளித்த நீதிபதி, 7 பேருக்கு மரண தண்டனை விதித்தார்.

இவர்களில் தற்கொலைப்படை தீவிரவாதியை வழிநடத்திய முக்கிய குற்றவாளியான அப்துல் ரஹ்மான் சபா சாத் தன் மீதான குற்றத்தை ஒப்புக்கொண்டார். மேலும், பக்தர்களுக்கு காயம் ஏற்படுத்தாத வகையில் தாக்குதல் நடத்தவே திட்டமிட்டதாக கூறியுள்ளார் மற்றொரு தீவிரவாதி பெயர் பகாத் பராஜ் முகாரப். இவன், உள்ளூர் ஐ.எஸ். தீவிரவாத குழுவின் தலைவராக செயற்பட்டு வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (3-7)

## அல்ப்ஸ் மலை பனிச்சரிவில் சிக்கி 7 பேர் பலி



(பரிஸ்)

பிரான்ஸ் நாட்டிலும் அல்ப்ஸ் மலை உள்ளது. பனி படர்ந்திருக்கும் இம்மலை சுற்றுலா தளமாகும். இங்கு குவியும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் பனிச்சறுக்கு விளையாடி மகிழ்கின்றனர்.

இந்த நிலையில், அங்குள்ள கிரெனோபில் என்ற இடத்தில் அல்ப்ஸ் மலையில் திடீரென பனிச்சரிவு ஏற்பட்டது. அதில் சிக்கி 7 பேர் உயிரிழந்தனர். அவர்களில் 3 பேர் ஜேர்மனியை சேர்ந்தவர்கள். 2 பேர் செக்குடியரசு நாட்டினர் ஆவர். (3-7)

# போதையை கைவிடுங்கள்

## கணவனின் பிணத்துடன் புகைப்படம் எடுத்து பேஸ்புக்கில் போட்ட பெண்



போதைப் பழக்கத்தால் உயிரை இழந்த தனது 26 வயது கணவரின் உடலுடன், தானும், தனது பிள்ளைகளுடன் சேர்ந்து புகைப்படம் எடுத்து பேஸ்புக்கில் போட்டு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார் அமெரிக்காவைச் சேர்ந்த ஒரு பெண். போதைப் பழக்கம் உயிரைப் பறிக்கும். அதை இனியாவது விட்டு விடுங்கள். அதற்காகத்தான் இந்தப் புகைப்படம் என்று அவர் விளக்கம் அளித்துள்ளார். இதைப் பார்த்து நாலு பேர் திருந்தினால் அது தனக்கு மகிழ்ச்சியே என்றும் அவர் கூறியுள்ளார்.

அமெரிக்காவை சேர்ந்த பெண் ஈவா ஹாலந்த். இவரது கணவரின் பெயர் மைக் செட்டில்ஸ். கணவர் ஹெரோயின் போதைப் பழக்கத்திற்கு அடிமையானவர். இந்தத் தம்பதிக்கு லூகாஸ் மற்றும் அவா என்ர மகளும் மகனும் உள்ளனர். மைக்கும் ஈவாவும் 11 ஆண்டு காலம் சேர்ந்து வாழ்ந்தனர்.

அமைதியான இவர்களது வாழ்க்கையில் ஹெரோயின் போதையால் சூறாவளை வீசி விட்டது. போதைக்கு அடிமையாகிப் போன மை செப்டெம்பர் 2 ஆம் திகதி மரணமடைந்தார்.

உடைந்து போன ஈவா, அந்த சோகத்திலிருந்து உடனடியாக வெளியே வந்து ஒரு காரியத்தை செய்தார். சவப்பெட்டியில் வைக்கப்பட்டிருந்த தனது கணவரின் உடலுக்கு அருகே தானும், தனது பிள்ளைகளுமாக நின்று ஒரு புகைப்படம் எடுத்துக் கொண்டார். பின்னர் இந்தப் புகைப்படத்தை தந்து பேஸ்புக், இன்ஸ்டாகிராம் ஆகியவற்றில் வெளியிட்டார். கூடவே தனது சோக வாழ்க்கையையும், மைக்குக்கு நேர்ந்த கதியையும் விளக்கி, இதுதான் எல்லோருக்கும் கதி. கடைசியில் மரணம்தான் கிடைக்கும். இன்றே போதைப் பழக்கத்தை விட்டுவிடுங்கள் என்று அதில் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

அவரது இந்தக் கடிதமும், புகைப்படமும் பலரையும் உலுக்கியது. பலரும் தங்களது கெட்ட பழக்கத்தை விட ஆரம்பித்து விட்டதாக ஈவாவுக்கு தெரிவித்து வருகின்றனர். ஒரு பெண் தனது போதைப் பழக்கத்திலிருந்து விடுபட இந்தப் புகைப்படம் உதவியதாக கூறி நடு ரோட்டில் வைத்து ஈவாவைக் கட்டிப் பிடித்து அழுது நன்றி கூறியுள்ளார்.

இந்தப் புகைப்படம் இப்போது வைரஸாக பரவி வருகிறது.

ஈவா தனது கடிதத்தில் கூறியுள்ளதாவது, நீங்கள் முடிவெடுக்காத ஒவ்வொரு நாளும் உங்களது முடிவு வேகமாக நெருங்கி வருகிறது என்று அர்த்தம். எந்தப் பெற்றோரும் தங்களது பிள்ளையை அடக்கம் செய்வதை நினைத்துக் கூட பார்க்க மாட்டார்கள். அதே போலத்தான் எந்தக் குழந்தையும் இவ்வளவு இளம் வயதில் தனது பெற்றோரை இழக்க விரும்பாது என்று தெரிவித்துள்ளார். (3-7)

# அணு உலையை மீளவும் இயக்குகிறது வடகொரியா

வடகொரியா தனது யொங்பியொன் அணு உலையை செயற்படுத்த ஆரம்பித்ததாக அறிவித்துள்ளது.

தனது அணு ஆயுதங்களை மேம்படுத்தி, அவற்றை எந்த நேரத்திலும் அமெரிக்காவுக்கு எதிராக பயன்படுத்த தயாராவதாக வடகொரியா தெரிவித்துள்ளது.

அந்த அணு ஆலைப் பகுதியில் நடமாட்டமும் செயற்பாடுகளும் அதிகரித்திருப்பதை கடந்த வாரம் வெளியான செய்மதிப் படங்கள் காண்பித்தன.

நீண்ட தூர ரொக்கெட்டுக்களை ஏவும் வல்லமையை அதிகரிக்கச் செய்யும் நடவடிக்கை என்று ஏனையோரால் பார்க்கப்படும் வகையில், தொடர்ச்சியாக பல செய்மதிகளை தாம் ஏவப்போவதாக வடகொரியா அறிவித்த மறுதினம் இந்த அறிவிப்பும் வந்துள்ளது. இந்த இரு அறிவிப்புக்களும், வடகொரியாவின் இராணுவ வல்லமையை உலகுக்கு நினைவூட்டும் வகையில் ஒருங்கிணைக்கப்பட்டவை என்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். (3-7)

# அங்கவீனமான சகாக்களை கொன்று குவித்தது ஐ.எஸ்.



(மொசூல்)

ஈராக் மற்றும் சிரியாவில் ஆதிக்கம் செலுத்தி வரும் ஐ.எஸ் தீவிரவாதிகள தங்கள் சொந்தவீர்களையே கொனறு குவித்துள்ள சம்பவம் ஐ.எஸ் அமைப்பின் மீதான எரிச்சலை மேலும் பல மடங்கு அதிகரித்துள்ளது.

ஈராக்கின் மொசூல் நகரில் உள்ள கஸ்லானி முகாமில் தாக்குதல்களில் கை ,கால்களை இழந்த ஐ.எஸ் இயக்க தீவிரவாதிகள் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். இவர்களை சரிவர பராமரிக்க முடியாததாலும், இனி இவர்கள் எந்த வகையிலும் தங்களுக்கு தேவைப்படமாட்டார்கள் என்பதாலும் எந்த இயக்கத்திற்காக அவர்கள் உயிரைக் கொடுத்து தாக்குதல்களில் ஈடுபட்டார்களோ அந்த அமைப்பைச் சேர்ந்த் ஐ.எஸ் தீவிரவாதிகளே அவர்களை கொடூரமாகக் கொலை செய்துள்ளனர்.

இதே போல் கடந்த வருடம் ஜூன் மாதம் உளவு பார்த்தது உள்ளிட்ட காரணங்களுக்காக 32 பேரை ஐ.எஸ் தீவிரவாதிகள் சுட்டுக் கொன்றது நினைவிருக்கலாம். (3-7)

### சவுதி கிரேன் விபத்தில்

# உயிரிழந்த உறுப்பினருக்கு தலா பத்து இலட்சம் றியால்

(ரியாத்)

சவுதி அரேபியா நாட்டில் உள்ள முஸ்லிம்களின் புனித நகரமான மக்கா நகரின் பெரிய மசூதியில் கடந்த வாரம் கிரேன் சரிந்து விழுந்த விபத்தில் 115 ஹஜ் யாத்ரீகர்கள் பலியானார்கள். அவர்களில் 11 பேர் இந்தியாவின் பல மாநிலங்களில் இருந்து ஹஜ் யாத்திரை செய்ய புறப்பட்டு சென்றவர்கள் என தெரியவந்துள்ளது.

இதுதவிர, சுமார் 200 யாத்ரீகர்கள் காயங்களுடன் மக்கா நகரில் உள்ள வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த விபத்து தொடர்பாக நடத்தப்பட்ட உயர்மட்ட குழுவின் விசாரணை நேற்றுமுன்தினம் சவுதி மன்னர் சல்மானிடம் தாக்கல் செய்யப்பட்டது.

இந்நிலையில், இந்த விபத்தில் பலியான யாத்ரீகர்கள் குடும்பத்துக்கு தலா 10 இலட்சம் றியால் (இந்திய மதிப்புக்கு சுமார் 1.75 கோடி ரூபாய்) நிவாரணம் வழங்குமாறு மன்னர் சல்மான் உத்தரவிட்டுள்ளதாக சவுதி அரசு நேற்று அறிவித்துள்ளது. விபத்தில் காயம் அடைந்து உடலுறுப்பு ஊனம் அடைந்தவர்களுக்கும் இதே தொகை வழங்கப்படும். காயம் அடைந்தவர்களுக்கு 5 இலட்சம் ரியால்கள் அளிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்தில் உயிரிழந்த யாத்ரீகர்களின் குடும்பங்களை சேர்ந்த தலா இரண்டு பேர் அடுத்த ஆண்டு ஹஜ் யாத்திரையின்போது சவுதி மன்னரின் விருந்தினராக மக்காவுக்கு வர அனுமதிக்கப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச விசாரணை மூலமே தமிழருக்கு நீதி கிடைக்கும்

## ரணிலிடம் இடித்துரைக்குமாறு தமிழக வாழ்வுரிமைக் கட்சி வலியுறுத்து



(சென்னை)

**இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங்கள் குறித்து சர்வதேச விசாரணையை நடத்துவதன் மூலமே தமிழ் மக்களுக்கான நீதி கிடைக்கும் என்பதை இதற்கான தீர்மானத்தை ஐக்கிய நாடுகள்மனித உரிமைகள் ஆணையத்தில் இந்தியாவே கொண்டுவரும் என்ற நிலைப்பாட்டையும் ரணிலிடம் பிரதமர் நரேந்திரமோடி தெரிவிக்க வேண்டும் என்று தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் தி.வேல்முருகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இந்தியாவின் எதிரி நாடான பாகிஸ்தானின் பிரதமர் நவாஸ் ஷெரீப்பை ரஷ்யாவின் உபா நகரில் நேரில் சந்தித்து குஜராத் மீனவர்களையும் படகுகளையும் விடுதலை செய்வதற்கு ஒரு ஒப்பந்தத்தை போட முடிகிற பிரதமர் நரேந்திர மோடியால். இந்தியாவுக்கு வருகை தந்துள்ள "நட்பு நாடான" இலங்கையின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் தமிழக மீனவர்களுக்காக ஒரு ஒப்பந்தத்தை ஏன் போட முடியாது?

தமிழக மீனவர்கள் காலம் காலமாக தங்களது பாரம் பரியமான மீன்பிடி பகுதியில் மீன் பிடித்தலை இலங்கை அரசு மதித்து நடக்க வேண்டும். இலங்கை சிறையிலிருந்து அனைத்து தமிழக மீனவர்களையும் விடுதலை செய்ய வேண்டும்.

இலங்கை கடற்படையால் பறிமுதல் செய்யப்பட்ட அனைத்து தமிழக மீனவர்களின் படகுகளையும் விடுவிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் விதமாக ரணில் விககிரமசிங்கவுடன் ஒரு ஒப்பந்தத்தை பிரதமர் நரேந்திர மோடி உருவாக்க வேண்டும் என்று தமிழக வாழ்வுரிமைக் கட்சி வலியுறுத்துகிறது.

மேலும், இலங்கை மீதான போர்க குற்றங்களை நீர்த்து போகச் செய்யும் வகையிலும் ராஜபக்ஷ உள்ளிட்டோரை பாதுகாக்கும் வகையிலும் போர்க்குற்றங்களுக்கு உள்நாட்டு விசாரணையே போதும் என்று இலங்கை வலியுறுத்தி வருகிறது. இலங்கையின் இந்த பேரினவாத கபட நாடகத்துக்கு இந்திய அரசு எப்போதும் துணை போகக் கூடாது என்பதே தமிழ் நாட்டு மக்களின் ஒட்டுமொத்த வேண்டுகோள்.

இலங்கை நிகழ்த்திய போர்க் குற்றங்கள் குறித்து சர்வதேச விசாரணையை நடத்துவதன் மூலமே தமிழ் மக்களுக்கான நீதிகிடைக்கும் என்பதையும் இதற்கான தீர்மானத்தை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையத்தில் இந்தியாவே கொண்டுவரும் என்ற நிலைப்பாட்டையும் ரணிலிடம் பிரதமர் நரேந்திர மோடி தெரிவிக்க வேண்டும் என்பது தமிழக மக்களின் எதிர்பார்ப்பு.

எனவே, ரணிலின் இந்த இந்திய பயணத்தை இந்தியாவின் அங்கமாக இருக்கும் தமிழ் நாட்டு மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து இந்த மக்களுக்கு ஆறுதல் தரும் வகையிலான செயற்பாடுகளுககுரிய தாக்கிட மத்திய அரசை தமிழக வாழ்வுரிமைக் கட்சி வலியுறுத்துவதாக தெரிவித்துள்ளார்.

இதேவேளை பா.ம.க. இளைஞர் அணி தலைவர் அன்புமணி ராமதாஸ் இது தொடர்பில் தெரிவிக்கையில், இலங்கை மீது சர்வதேச நீதி வசாரணை நடத்தப்படுவதற்கு ரணில விக்கிரமசிங்க ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்று பிரதமர் நரேந் திரமேடி வலியுறுத்த வேண்டும்.

மேலும் இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட தமிழர்களின் குடும்பங்களுக்கு நீதி பெற்றுத்தரும் கடமையும், பொறுப்பும் மற்ற நாடுகளைவிட இந்தியாவுக்குத்தான் அதிகமாக உள்ளது.

எனவே, இலங்கைப் போர்க் குற்றங்கள் தொடர்பாக ஐ.நா. மனித உரிமை ஆணையக விசாரணையில் தெரியவரும் உண்மைகள் குறித்து பன்னாட்டு நீதிமன்ற விசாரணைக்கு ஒப்புக் கொள்ளும்படி இலங்கை பிரதமர் ரணில்விக்கிரமசிங்கவிடம் பிரதமர் நரேந்திரமோடி வலியுறுத்த வேண்டும்.

மேலும், இதற்கானத் தீர்மானத்தை மனித உரிமைகள் பேரவையில் இந்தியாவே கொண்டு வர வேண்டும். அதுமட்டுமின்றி, இந்தியா- இலங்கை இடையிலான வங்கக்கடல் பகுதியில் இருநாட்டு மீனவர்களும் எந்த பிரச்சினையும் இன்றி மீன்பிடிக்கும் வகையில் ஒரு திட்டத்தை வகுக்க வேணடும் என இலங்கைப் பிரதமரிடம் இந்திய அரசு அறிவுறுத்த வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (3-7)

# 82 வயதான சீக்கியரைத் தாக்கிய அமெரிக்கருக்கு 13 வருட சிறை

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் 82 வயது சீக்கியரை கொலைவெறியுடன் இரும்பு கம்பியால் தாக்கியவருக்கு 13 ஆண்டு சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள பிரெஸ்னோ என்ற இடத்தில் சீக்கியர்களின் ஆலயமான குருத்வாரா ஒன்றுள்ளது.

இந்த குருத்வாராவில் பியாரா சிங் (82) என்ற சீக்கியர் பணியாற்றி வந்தார்.

இந்த நிலையில், கடந்த 2013 ஆம் ஆண்டு மே மாதம் குருத்வாரா கோவில் வாசலில் நின்று கொண்டிருந்த பியாரா சிங்கை, கில்பெர்ட் கார்சியா என்ற நபர் இரும்புக் கம்பியால் சரமாரியாக தாக்கினார்.

இதில் படுகாயமடைந்த பியாரா சிங், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பாக பொலிசில் புகார் அளிக்கப்பட்டது. தாடியுடனும், தலைப்பாகையுடனும் இருந்ததால் முஸ்லிம் தீவிரவாதி என்று கருதி பியாரா சிங் மீது இந்த தாக்குதலை நடத்தியதாக பிடிபட்ட குற்றவாளி கில்பர்ட் கார்சியா பொலிசில் வாக்குமூலம் அளித்தார்.

இரண்டு ஆண்டுகளாக கலிபோர்னியாவின் ப்ரெஸ்னோ கவுண்ட்டி உச்ச நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த இந்த வழக்கில் நேற்று தீர்ப்பு அளிக்கப்பட்டது.

இதில் குற்றவாளி கில்பர்ட் கார்சியாவுக்கு 13 ஆண்டு சிறைத் தண்டனை விதித்து நீதிபதி ஆல் வின்ஹாரெல் உத்தரவிட்டார். (3-7)

# கோடீஸ்வரர்கள் பட்டியலில் இந்தியாவுக்கு 11 வது இடம்

(புதுடில்லி)

அதிக கோடீஸ்வரர்களை கொண்ட நாடுகள் பட்டியலில் இந்தியாவுக்கு 11 வது இடம் கிடைத்துள்ளது.

இந்தியாவில் 1.98 லட்சம் கோடீஸ்வரர்கள் இருப்பதாக ஆய்வறிக்கை ஒன்றில் தகவல் வெளியாகியுள்ளது.

இந்தியாவில் பொருளாதாரச் சீர்திருத்தம் செய்வதில் அக்கறை கொண்ட பிரதமர் மோடி கடந்த ஆண்டு பதவியேற்றதைத் தொடர்ந்து நாட்டில் முதலீடு செய்ய விரும்புபவர்களின் நம்பிக்கை அதிகரித்துள்ளது.

சர்வதேச அளவில் பெற்றோலிய எண்ணெயின் விலை தொடர்ந்து சரிந்து வருவதும், இந்திய அரசின் நிதிநிலையில் ஏற்படும் பற்றாக் குறை குறைவதற்கு முக்கிய காரணமாக இருக்கிறது.

மேலும் சில்லறை வர்த்தக அடிப்படையிலான விலை உயர்வும் குறைந்துள்ளது.

இப்படிப்பட்ட பொருளாதாரக் காரணங்களால் இந்தியாவில் செல்வ வளம் நிறைந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு முக்கிய காரணியாக விளங்கியுள்ளது.

இந்தியாவில் 2014-ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட புள்ளிவிவரக் கணக்கின்படி சுமார் 1.98 லட்சம் கோடீஸ்வரர்கள் உள்ளனர்.

இந்த எண்ணிக்கை கடந்த 2013 ஆம் ஆண்டு 1.56 லட்சமாக இருந்தது.

உலக அளவில் அதிக கோடீஸ்வரர்களைக் கொண்ட நாடுகளில் இந்தியா 11 வது இடத்துக்கு உயர்ந்துள்ளது.

இந்த பட்டியலில் முதலிடத்தை அமெரிக்கா பிடித்துள்ளது. அந்நாட்டில் 43.51 லட்சம் கோடீஸ்வரர்கள் உள்ளனர்.

இரண்டாவது இடத்தில் ஜப்பானும் 3-வது இடத்தில் ஜேர்மனியும் 4-வது இடத்தில் சீனாவும் உள்ளன.

மேலும், இந்தியா மற்றும் சீனாவின் வளர்ச்சி விகிதம் அதிகரித்து வருவதால் இந்த 2 நாடுகளில் உள்ள கோடீஸ்வரர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

இந்த தகவலை உலக பொருளாதர வளம்-2015 என்ற ஆய்வறிக்கையை கேப்ஜிமினி மற்றும் ஆர்பிசி வளம் மேலாண்மை நிறுவனம் வெளியிட்டுள்ளது. (3-7)

# இந்திய பெண்ணை தரக்குறைவாக பேசிய இங்கிலாந்து நீதிபதி பதவியிலிருந்து விலகல்

இந்தியாவைச் சேர்ந்த பெண்ணைப் பற்றி தரக்குறைவாக பேசிய இங்கிலாந்து நீதிபதி வேலையை இராஜினாமா செய்ய வைக்கப்பட்டுள்ளார்.

இங்கிலாந்தில் உள்ள டெர்பிஷயரைச் சேர்ந்த டெரன்ஸ் ஹாலிங்வொர்த் என்ற நீதிபதி, இந்தியாவைச் சேர்ந்த தீபா பட்டேல் என்பவரை அவரது முன்னாள் காதலர் கொடுமைப்படுத்திய வழக்கை விசாரித்து வந்தார்.

தீபா நீதிமன்றத்தில் ஆஜராகி வாக்குமூலம் அளித்தால்தான் அவரது முன்னாள் காதலருக்கு தண்டனை அளிக்க முடியும் என்றும், எனவே அவரை அழைத்து வாருங்கள் எனவும் டெரன்ஸ் தெரிவித்துள்ளார்.

இதற்கு பதிலளித்த தீபாவின் வழக்கறிஞர் ரெய்ச்சல் பார்க்கர், தீபா வேலையில் இருப்பார், எனவே அவரை உடனே நீதிமன்றத்திற்கு வருமாறு கூற முடியுமா என தெரியவில்லை என்று கூறியுள்ளார்.

இதையடுத்து நீதிபதி கூறுகையில், அது ஒன்றும் பிரச்சினையாக இருக்காது. அவர் நீதிமன்றத்திற்கு வராத அளவுக்கு முக்கியமான வேலையில் இருக்க மாட்டார் என்றும் ஏதாவது கடையில் வேலை செய்வார் எனவும் தெரிவித்துள்ளார்.

என்ன கூறுகிறீர்கள் என்று ரெய்ச்சல் கேட்டபோது, நீதிபதி மீண்டும், பட்டேல் என்ற பெயர், அவரது இனத்தின் பின்னணியை பார்த்தால் அவர் ஒன்றும் பெரிய முக்கியமான வேலையில் எல்லாம் இருக்க மாட்டார் என தெரிகிறது என்று பதிலளித்துள்ளார்.

தீபாவின் இனத்தை பற்றி தரக் குறைவாக பேசிய டெரன்ஸ்மீது நடவடிக்கை எடுக்குமாறு புகார் அளிக்கபபட்டதால், டெரன்ஸ் மாவட்ட நீதிபதி பதவியிலிருந்து விலகினார.

இருப்பினும் குடியேற்றத் துறை நீதிபதியாக தொடர்ந்து பதவி வகித்து வந்த அவர், அந்த பதவியையும் இராஜினாமா செய்ய வைக்கப்பட்டுள்ளது.

மேலும், அவர் ஆண்டுக்கு சுமார் 1 கோடி ரூபா சம்பாதித்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (3-7)

# இந்திய வம்சாவளி நபருக்கு நியூசிலாந்தில் 6 வருட சிறை

(மெல்போர்ன்)

நியூசிலாந்து நாட்டில் வசித்து வருபவர் சஞ்சய் குமார் ஜோஷி (வயது 33). இந்திய வம்சாவளியை சேர்ந்தவர்.

இவர் போலி ஆவணங்கள் மூலம் 20 க்கும் மேற்பட்டோரை ஏமாற்றி பெருமளவு நிதி திரட்டியதாக குற்றச்சாட்டு எழுந்தது.

தனது தொழில் கூட்டாளி, மருத்துவர், நண்பர்கள், பெற்ற தாயார் ஆகியோரை ஏமாற்றியுள்ளார்.

இவர் தனது தாயாரின் கிரெடிட் கார்ட்டை பயன்படுத்தி 9 ஆயிரம் டொலர் பணம் எடுத்துள்ளார்.

இந்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக சஞ்சய் குமார் ஜோஷி மீது ஆக்லாந்து நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.


நீதிமன்றத்தில் அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டன.

அப்போது நீதிபதி கில்பர்ட், சஞ்சய் குமார் ஜோஷியின் வக்கீலிடம், "உங்கள் கட்சிக்காரரர் இவ்வளவு பணத்தை மோசடி செய்து திரட்டி இருக்கிறாரே, அதை என்ன செய்தார்?" என்று கேள்வி எழுப்பினார். அதற்கு அவர், "எனக்கு தெரியாது" என பதில் அளித்தார்.

இதையடுத்து அவருக்கு 6 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்பு அளித்தார். (3-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளில் விழுமியக் கல்வி போதிப்பதன் முக்கியத்துவம்



ஆ.சிவகுமார்
ஆசிரியர்.

பாடசாலைகள் சமூகத்திற்காகச் செயற்படும் நிறுவனங்க
ளாகும். இன்றைய காலகட்டத்தில் மாணவர்களின்வாழ்க்கை
யில் தொடர்பு சாதனங்களின் விரிவாக்கம், சக பாடிகளுக்க
ளின் தாக்கம்,நகரங்களுக்கிடையிலான தொடர்புகளின்
அதிகரிப்பு, பாடசாலை மாணவர்களுக்கிடையிலான தனியாள்
வேறுபாடு,குடும்ப அமைப்புக்களின் சிதைவு,மன அழு
த்தம், சுகாதாரத்திற்கு கேடு விளைவிக்கும் பொருட்கள்
கிடைத்தல் , சுற்றுலாத்துறைத் தொடர்புகள், அதிகரித்த
கைத்தொலைபேசிப் பாவனை, தொலைக்காட்சிகளில்
காணப்படும் சமூகப்பிறழ்வுகள், விழுமியக் காட்சி, கலாசார
பெறுமான மாற்றம் இவற்றின் அறிவு, திறன், மனப்பாங்கு
போன்றவற்றினால் வாழ்க்கை முறை குழப்பமடைந்து
வருகின்றது. ஜெஸ்ஸர் (Jessor) எனும் உளவியல் அறிஞர்
கூறும் போது கட்டிளமைப் பருவம் ஆபத்துக் களைக் கடக்
கும் பருவமாக குறிப்பிடுகின்றார்.

ஏனெனில் அப்பருவத்திலே ஆபத்துக்கள் தொடர்பான
கற்றல் நடைபெறுகின்றது. இதனால் புதிய ஆபத்து நடத்
தைகள், ஆபத்து சார்ந்த ஆளுமை மற்றும் சூழலில் ஆபத்து
தரும் சந்தர்ப்பங்கள் என்பவற்றின் கற்றல் என்கின்றார்.
இவ்வாறான மாணவர்கள் நடத்தை மாற்றங்களால் பாடசா
லையின் கலாசாரத் தொகுதி பாதிப்புக்குள்ளாகின்றது. இந்த
நிலையிலிருந்து பாடசாலைகளின் இலக்குகள் நோக்கங்களை
யும் சரியான முறையில் நெறிப்படுத்திக் கொள்வதற்கு விழுமி
யக் கல்வி பாடசாலைகளில் போதிக்கப்படுதல் அவசியமாகும்.

கல்விக்கும் விழுமியங்களுக்கும் இடையில் தொடர்புண்டு.
விழுமியம் என்பது மனிதனால் சம்பவம் தொடர்பாக எடுக்
கப்படும் தீர்மானமாகும். விழுமியங்கள் ஆளுக்கு ஆள்
வேறுபடுகின்றன. தனிநபர் விழுமியங்கள் இவ்விதம் வேறு
படும் போது பொது விழுமியங்கள் எப்போதும் மாற்றமடையாது
இருக்கும் விழுமியத்தின் ஊற்று அல்லது ஆரம்பம் மனிதனின்
மனச்சான்றாகும். மனித நடத்தையின் நன்மை தீமையை
நிர்ணயிப்பது விழுமியமாகும். இத்தகைய விழுமியங்கள்
மனித நடத்தையை நெறிப்படுத்தி வாழ்விற்குப் பொருள்
கொடுக்கின்றன. முதலில் வேலைக்காரனாக இருக்கக்
கற்றுக்கொள். பின்பு எஜமானாகும் தகுதி உனக்கு வந்து
சேரும் என்று சுவாமி விவேகானந்தர் குறிப்பிடுகின்றார்.
எத்தகைய கல்வி நல்லொழுக்கத்தை உருவாக்குமோ
ஒருவன் தன்னுடைய சுய வலிமையைக் கொண்டு நிற்கச்
செய்யுமோ அத்தகைய கல்விதான் சிறந்தது என்பது சுவாமி
விவேகானந்தரின் சிந்தனையாகும். எந்தவொரு சமுதா
யத்தில் உயர் விழுமியங்கள் போற்றப்படுகின்றனவோ
அந்த சமுதாயம் சிறந்த சமுதாயமாகப் பார்க்கப்படுகின்றது.
சமுதாயம் அதற்குத் தகுதி இல்லாதவிடத்து அதைக்கல்வி
மூலம் தகுதியுடையதாக ஆக்கவேண்டும். தனி மனிதனுக்கு
வழங்கப்படும் கல்வியின் மூலம் சமூகம் மேன்மையடை
கின்றது. தனிமனிதன் ஒன்றிணைவால் சமூகம் உருவாக்
கப்படுகின்றது. தம்முடைய மனதில் பொறா மையையும்
சந்தேகங்களையும் விரட்டி இலட்சியத்தில் கவனம்
செலுத்தி வாழும் போது, வாழுகின்ற போது அவர்கள் சமூ
கத்திற்கும் நாட்டிற்கும் உலகிற்கும் பெருமைப்படும் பணி
ஆற்றும் வகையில் எல்லோருக்கும் உயர்ந்த நன்மைகள்
கிடைக்கின்றன. எங்கே உயர்ந்த நன்மைகள் நடைமுறை
யில் இருக்கின்றனவோ அந்தச் சமுதாயம் சிறந்தது என்பது
சுவாமி விவேகானந்தரின் கூற்றாகும்.

கல்வி என்பது ஒவ்வொரு மனிதனையும் சிறந்த விழுமிய
சிந்தனைகள் உடையவனாக ஆக்குகின்ற போது சமுதாய
மேம்பாடு ஏற்படுகின்றது.ஒரு நாட்டினுடைய முன்னேற்றத்திற்
குத் தனிநபர் விழுமியங்களும் சமூக விழுமியங்களும் முக்
கியம் பெறுகின்றன. சமூக விஞ்ஞானத் தொழில்நுட்ப வளர்ச்
சியின் விளைவாக சமூக விழுமியங்கள் மாற்றமடைகின்றன.
நாகரீக மாற்றமும் விழுமியங்கள் பாதிப்பும் ஏற்படுகின்றது. ஒவ்
வொரு மனிதனும் அன்பு,உண்மை,நேர்மை,நீதி, அஞ்சாமை,
சமத்துவம் போன்ற உயர் விழுமியங்களை ஏற்று நடக்கின்ற
போது அது சமூகத்தில் சிறந்த மாற்றத்தை உருவாக்குகிறது.
சமூக விழுமியங்களோடு ஒத்து இயங்கும் மனிதர்கள் கல்
வியின் மூலம் உருவாக்கப்படுதல் அவசியமாகும். ஆன் மீக
உணர்வுகளுடன் ஒன்றிணைந்த தத்துவஞானிகள் பலர்
உளர். சுவாமி விவேகானந்தர் மகாத்மாகாந்தி போன்றோர்
ஆன்மீக உணர்வோடு அரசியல் உணர்வும் சமுதாய உணர்
வும் ஒருங்கே கொண்ட தத்துவஞானிகளாவர்.ஒவ்வொருமனி
தரிடத்தும் அறிவும் ஆற்றலும் நிரம்பியுள்ளன. இவைகள்
இணைந்து முழுமையாக நன்கு வெளிப்படும் போது
அவைகள் ஆன்மீக உண்மைகளாகிவிடுகின்றன என
சுவாமி விவேகானந்தர் கருதுகின்றார்.அந்த ஆன்மீக உண்
மைகளே எப்போதும் உயர்ந்தவைகள் என்பது கவிஞர்
இரவீந்திரநாத்தாகூர் கருத்தாகும். காந்தியடிகள் மேலும்
உண்மைக் கல்வி எப்படி இருக்க வேண்
டும் என்று கூறும் போது அறிவை வளர்
ப்பது, ஆற்றல் களை வளர்ப்பது உணர்
ச்சிகளைப் பயன் படுத்துவது, மக்களின்
வாழ்க்கையினை ஆயத்தம் செய்வது,
மனிதனின்சமூகநடத்தைகளையெல்லாம்மாற்றியமைப்பதுசெயற்
பாட்டினைக் கொண்டிருப்பதாக கூறுகின்றார். இந்தவகையில்
இரவீந்திரநாத் தாகூரும் இயற்கையோடு ஒட்டிய ஆன்மீகம்
பற்றிய கருத்தினைக் கூறும்போது இயற் கையின் அழகில்
இன்பம் கண்டார்.மனிதர்கள் இயற்கையை இர சிக்க வேண்
டும். அவனுடைய தூய உள் ளத்தில் ஏற்படும் அழகுணர்வு
அவனை நல்ல பண்பாளனாகவும் ஒழுக்க சீலனா கவும்
ஆக்குகின்றது. மனிதனுடைய உள்ளத்தில் அழகுணர்வு
ஏற்படும் போது அவன் அன்பும் கருணையும் உள்ளவனாக
மாற்றப்படுகின்றான் என்பது கவிஞர் தாகூரின் கருத்தாகும்.

சமூகப் புனரமைப்புச் சாதனம் எனக் கூறப்படும் கல்வியா
னது ஒருவனின் வாழ்நாள் முழுவதும் இடம்பெறுகின்றது.
தனிமனித வளர்ச்சி, சமுதாய வளர்ச்சி, அனைத்துலக நோக்கு
என்பவற்றைக் கொண்ட விழுமியங்களை வளர்க்கின்ற கல்வி
ஒவ்வொருவரையும் கற்றதன் படி ஒழுகுதலையும் முக்கி யமாகக்
கொண்டுள்ளது.மேலும் நாட்டின் அரசியல் பொருளாதார அற
நெறிக்கேற்பவும் பொதுநலவாய நாடுகளின் விழுமிய சார்
பண்புகளை உள்ளடக்கியும் அறநெறி வாழ்க்கைக்கேற்ப வும்
வாழ்கின்ற வகையில் கல்வி அமைதல் சிறப்பாகும். சமூகத்தில்
காணப்படும் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக கல்வி அமைதல்
வேண்டும்.பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவும் மனிதனை
மேம்படுத்தாத, அவனிடத்தே உள்ள தெய்வீக யதார்த்த
நிலையை உணரச் செய்யாத கல்வியை உண்மைப் பெறுமா
னம் கொண்ட கல்வியாகக் கருதமுடியாது என்று கருதிக்
கொள்கின்றார். கல்வியானது மனித மேம்பாட்டுக்கான விழுமி
யங்களை விருத்தி செய்கின்றது. சத்தியம், தர்மம், சாந்தி,
பிரேமை,அஹிம்சை ஆகிய விழுமியங்களை ஒருவர் சரிவரப்
புரிந்து கொண்டு அவற்றைத் தன்வாழ்நாளில் பின்பற்றும்
போது அதன்மூலம் சமூகம் மேம்பாடடைகின்றது.தனது
குடும்பத்திற்கும் பிறருக்கும் ஒருவர் நாளாந்தம் செய்ய வேண்
டிய பணிகளையும் கடமைகளையும் செய்வதற்குரிய மனப்
பக்குவத்தையும் கல்வி அளிக்கும்போது சிறந்த விழுமியம்
கொண்ட சமுதாயம் உருவாக்கப்படுகின்றது.எமது முன்னோர்
களின் அனுபவங்களினால் செம்மைப்படுத்தப்பட்ட நற்
பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள் மற்றும் ஒழுக்கலாறு என்
பனவே விழுமியங்களாகும். விழுமியங்கள் மகிழ்ச்சியான
வாழ்க்கைக்கும் சீரான சமூக நிலவுகைக்கும் காரண மாகின்றது.

பாடசாலையில் கல்வி போதிக்கப்படுகின்ற போதிலும் பாட
ரீதியான முன்னேற்ற அறிக்கைகளும் அடைவு மட்டங்களும்
அவற்றின் வீழ்ச்சிகளுமே முக்கியமாக கருதப்படுவதுடன்
மாணவர் விழுமியம் சார்ந்த நடத்தைகளை சரியாக வழிப்படுத்
துவதற்கு மேம்பாட்டு அணுகுமுறைகள் இன்னும் சீர்செய்யப்
படவேண்டியுள்ளது. இதற்கு முன்பாக மாணவர்களின்
பிறழ்வான நடத்தை தொழிற்பாடுகளை அண்மைக்கால
தகவல்கள் மூலம் காணமுடியும்.தற்கொலை, கட்டிளமைப்பருவ
கர்ப்பம்,பாலியல் பிறழ்வு நடத்தை,குழு வன்முறை, நவநாகரீக
ஆடை மோகம்,அதிகமான மனஅழுத்தம், மதுப்பாவனை,
சிகரெட் புகைத்தல், விரும்பிய அச்செயற்பாடு முத்திரைகுத்தல்,
பொதுச்சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தல், வாழ்க்கை
யின் அர்த்தம் தெரியாது மனம் போன போக்கில் செயற்படு
தல்,சமூகப் பெரியோர்,ஆசிரியர் அறிவுரைகளைப் பின் பற்
றாதிருத்தல்,பேராசை,விரக்தி,தாழ்வுச்சிக்கல், தோல்விகளைத்
தாங்கமுடியாத நிலை, பிறழ்வான செயற்பாடுகள், சமூக
விழுமியங்களுக்கு எதிர்நடத்தை காட்டுதல் போன்ற செயற்
பாடுகள் தாழ்மட்ட கல்வி அடைவுகள் தன்னை ஏற்றுக் கொள்
ளும் பக்குவம் இன்மை காரணமாக பாடசாலை எனும் நிறு
வனத்தின் சமூக செயற்பாட்டிற்கு அச்சுறுத்தலாக அமைகின்
றது. இந்த வகையில் விழுமியக் கல்வியை மாணவர்களுக் குப்
பாட ஒன்றிணைப்புடன் சேர்ந்த வகையின் கணிப்பீடு மதிப்
பீடாக மேற்கொள்ளுதல் இன்றைய காலத்தின் முதன் நிலை
செயற்பாடாக அமைதல் வேண்டும்.பின்வரும் செயற்பாடுகள்
பாடசாலைகளில் அமுல்படுத்த முடியும்.

1.மாணவர்களின் சுய கணிப்பை விருத்தி செய்ய பயிற்சிப்
புத்தகத்தில் நாளாந்தம் செய்த நல்ல விடயங்களை நாட்கு
றிப்பாக எழுதுவித்தல்.

2.தவணைப் புள்ளிப் பரீட்சையில் 10புள்ளியை (விழுமி
யம்,நடத்தை மாற்ற அவதானிப்பு மூலம் வழங்குதல்) 2ம்
சமய பாடம்,குடியுரிமையும் வாழ்க்கைத் தேர்ச்சியும்

3.ஓம் சிரியா பாபாஜி யோக ஆரண்யம்.மாணவர் செயல
மர்வு, யோகாசனப் பயிற்சி.

4.இராமகிருஷ்ணமிஷன் அறநெறி போதனைகள், வாழ்
க்கை முறைகள், ஆன்மீகப் பயிற்சிகளில் பங்குகொள்ளு
தல்,(விழுமியங்கள் நெறிமுறைகளைப் பின்பற்றல்)

5.இந்து அறநெறிப் பாடசாலைகளில் ஆன்மீக வாழ்
க்கை யோகாப் பயிற்சியில் சமய விழுமியம் அறிதல் பங்குபற்
றுதல். இந்து இறுதி நிலை, இந்து தர்மாசிரியர் பரீட்சைகளில்
பங்குகொள்ளுதல்.

6.ஸ்ரீ அம்மா பகவான் (கல்கி பகவான்) யூத் கோர்ஸ்,
வித்தியாமாலை,மகாதீட்சை,முத்தி தீட்சை போன்ற செயலமர்
வுகளை நடத்துதல்,பங்குகொள்ளல்.

7.ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் மனித மேம்பாட்டுக் கல்வியை
வழங்குதல்.

8.பிரம்ம குமாரிகள் இராஜயோக ஆன்மீக செயலமர்வு
களை நடத்தல்.

9.சஹஜயோகா தியானம் ஸ்ரீ மாதாஜி நிர்மலாதேவி.

10.நேர்நிலையான சிந்தனைகளை காட்சிப்படுத்தல்
(அறிஞர்கள், தத்துவஞானிகள்)

11.சின்மயாமிஷன் வாழ்வியல் ஆன்மீக கல்வி செய
லமர்வு

12.அன்றாட விழுமியம் சார்ந்த நற்சிந்தனைகளை
ஆசிரியர்கள் காலைப் பிரார்த்தனையில் வழங்குதல்.

13.நல்ல விழுமியங்கள் மூலம் வாழ்வின் உயர்ந்தவர்
களின் இறுவெட்டுக்கள்(CD)கருத்துரைகளைக் கேட்பதற்கு
ஏற்பாடு செய்தல்.

14.நல்ல விழுமியங்களைப் போதிக்கும் சமய நூல்கள்,
இலக்கியங்கள், பழமொழிகளை மாணவர்கள் கற்பதற்கு
ஊக்கப்படுத்தல்.

15.வேதாந்த மஹரிஷியின் காயகற்பப் பயிற்சி,ஸ்ரீரவி
சங்கரின் சுதர்சனகிரியா-மூச்சுப்பயிற்சி போன்ற நிகழ்வு
களை நடத்துதல்.

ஐயப்பன் விரதம் ஆண் மாணவர்கள் மேற்கொள்ள
வழிமுறைசெய்தல்.

17.குருமகராஜி-பிறேம்வாள்(ஆத்மஞானம்) (ஞானவழி
முறை)

18.பிரமச்சரிய வாழ்க்கையின் விழுமிய அறிக்கை

மேற்படி ஆன்மீகம் சார்ந்த செயற்பாடுகளை மாணவர்க
ளுக்கு வழங்கும்போது ஆழ்மனத்தின் அறிந்தும் அறியாம
லும் உள்ள மனக்காயங்கள் அகன்று மன்னிப்பு, நன்றியு
ணர்வு, முக்கியத்துவம் தேடாமை,உறவுநிலை, சீர்பெறுதல்,
சேவை மனப்பாங்கு, விடாமுயற்சி,புத்துணர்ச்சி, உணர்ச்
சிகளைக் கட்டுப்படுத்தி வாழ்தல்,பெரியோர் அறிவுரைக
ளைக் கேட்டு நடத்தல், தீயசெயல்களில் இருந்து விடுபடுதல்
போன்றன ஏற்படுவதுடன் அன்பு, இரக்கம்,பொறுமை, விட்
டுக்கொடுக்கும் மனப்பாங்கு,மனக்கவலை நீக்குதல், மனஅழு
த்தம் இன்மை, தன்னம்பிக்கை,புண்ணியம் செய்தல்,தாய்,
தந்தை, குரு ஆகியோரை உரிய முறையில் கனம் பண்ணு
தல் போன்ற பண்புகள் இயல்பூக்கமாக உள்ளுணர்வாக
வளர்ந்து செல்வதைக் காணமுடியும்.

மேற்படி செயற்பாடுகள் மாணவர்களில் வாழ்வியல், பிர
தேச பண்பாடு,பாடசாலை கலாசாரத் தொகுதி, விழுமிய
நெறிமுறைகளுக்கு ஏற்ப பாடசாலைசார் நிறுவனங்களில்
நடைமுறைப்படுத்தப்படுவது பயனுடையதும் காலத்தின்
தேவைகருதிய செயற்பாடுமாகும்.

கல்வியானது ஆன்மீக வாழ்விற்கேற்ப அடிப்படை
யைத் தூண்டுவதுடன் மனித ஆத்மாவிற்குப் பயிற்சி அளிப்
பதன் மூலம் உண்மையினையும் நற்பண்பிற்கு ஏற்ப வழி
வகையினையும் நாடுவதற்கு உதவ வேண்டுமென
கீழைத்தேய சிந்தனையாளரும் அறிஞருமான டாக்டர்
இராதா கிருஷ்ணனின் கருத்தாகும்.கல்வியானது பல் வகை
விழுமியங்களின் தோற்றுவாயாக விளங்குவதுடன் பழைமை
பேணுவதோடு புதுமையையும் வரவேற்கின்றது. தன்
னைத்தான் மறுபடைப்புச் செய்கின்றது.ஒவ்வொரு தலை
முறையினரும் தம்முன்னோரிடமிருந்து பெற்ற அறிவைத்
தம் அடுத்த தலைமுறையினருக்கு கையளித்துச் செல்
கின்றார்கள்.கல்விசார் உலகில் இந்த விழுமியங்கள் கைய
ளிக்கும் நிகழ்வு நடைபெறவில்லையாயின் பாரிய இழப்
புக்கள் நேரிடலாம்.இன்று உலகம் இக்கட்டான சூழலில்
இருப்பதற்குக் காரணம் வாழ்க்கை விழுமியங்கள், தத்துவம்,
சமயம் ஆகியவற்றைத் தேவையற்ற கருத்துக்கள் என்றும்
வெறும் கற்பனைகள் என்றும் எண்ணி அவற்றை மக்கள்
புறக்கணித்தமையேயாகும் என்று தத்துவஞானி இராதாகி
ருஷ்ணன் கூறுகின்றார்.

கல்வியானது மனிதனின் அறிவு,உணர்வு,உடல் ஆகிய
மூன்றினையும் ஒருங்கிணைத்து வளர்த்துச் செல்கின்
றது.இன்றைய உலகில் சிந்தனை மாற்றம் அறிவுத் துறை
யில் புதிய வளர்ச்சிகள் விரைவாக நிகழ்தல் ஒருவன் தன்
வாழ்க்கையில் பின்தங்கிவிடாமல் காலத்தோடு ஒட்டிச் சேர்
ந்து வாழ்வதற்கு அவனுக்கு வாழ்நாள் முழுவதும் கல்வி
அவசியமாகும்.இந்த கல்வி ஒருவனுக்கு அறிவாகிய உயர்
விழுமியம் மட்டுமல்லாது சமூகத்தின் பொருளாதார பண்
பாட்டு தொழில் ஆன்மீக கலாசார விழுமியங்களை வளர்ப்பதா
கவும் வாழ்வதற்குரிய விழுமியநெறி முறைகளை போதிக்
கின்ற வகையில் அமைதலே சமூகத்தில் ஆரோக்கியமான
செயற்பாடுகளுக்கும் பாடசாலை கலாசாரத் தொகுதி பாதுகாப்
பிற்கும் சிறப்பானதாயிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் அவன்காட் நிறுவனம் மீது வழக்கு

## ஜே.வி.பியின் தலைவர் பரிந்துரை

(கொழும்பு)



**பெரும் பரப்பரப்பை ஏற்படுத்திய அவன்காட் பாதுகாப்பு நிறுவனத்தின் மிதக்கும் ஆயுதக் களஞ்சியம் தொடர்பில் துப்பாக்கிகள் தொடர்பான கட்டளைச் சட்டம், வெடிபொருட்கள் தொடர்பான கட்டளைச் சட்டம் மற்றும பயங்கரவாத தடுப்புச் சட்டம் ஆகியவற்றின் கீழ் வழக்கு தாக்கல் செய்ய முடியும் என மககள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

தனியார் தொலைக்காட்சி ஒன்றில் நேற்று முன்தினம் ஒளிப்பரப்பான அரசியல் நிகழ்ச்சி ஒன்றில் அவர் இதனை கூறியுள்ளார்.

அவன்காட் வழக்கு சம்பந்தமாக செயற்பட்ட சட்டமா அதிபர் திணைக்களத்தின் அதிகாரி, இந்த மூன்று சட்டங்களின் கீழ் வழக்கு தொடரலாம் எனக் கூறியுள்ளார்.

இந்த நிலையில், சட்டமா அதிபர் நீதிமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கைக்கும் குறித்த அதிகாரியின் கருத்துக்களுக்கும் இடையில் முரண்பாடுகள் இருப்பது சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் திஸாநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் அவன்காட் சம்பவம் தொடர்பான விடயத்தில் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடர வேண்டாம் என வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர கூறியிருந்ததாகவும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் தெரிவித்தார். (இ-7)

# சாப்பிடுவதற்கு மட்டுமே டி.பி.வாய்திறக்க முடியும்

100 நாட்கள அரசாங்கத்தில்அமைச்சர் பதவிகளை பெற்றுக்கொண்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அலைந்து திரியும் ஆவிகளுக்கு சாப்பிடுவதற்கு மட்டுமே வாய்திறக்க முடியும் என்று கூறிய டி.பி. ஏக்கநாயக்கவுக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக வாய்திறக்க முடியாது என மக்கள் விடுதலை முன்னணியின் வடமேல் மாகாண சபை உறுப்பினர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

தேசிய அரசாங்கத்தில் அமைச்சர் பதவியை பெற்றுக்கொண்டுள்ள ஏக்கநாயக்கவுக்கு தற்போது சாப்பிடுவதற்கும் கொட்டாவி விடுவதற்கும் மட்டுமே வாய் திறக்க முடியும். இவர்கள் இதுவரை நாடாளுமன்றத்திற்கு சென்றிருந்தாலும் இவை இரண்டையுமே செய்து வந்தனர்.

டி.பி. ஏக்கநாயக்க, மகிந்தவை தோளில் சுமந்து கொண்டு சென்றார். மகிந்த தங்குவதற்கு வீடொன்றை கொடுத்தார். மகிந்த ராஜபக்ஷ மூன்று வேளையும் உணவை தானே கொடுத்ததாக ஊர் ஊராக சென்று கூறி, மகிந்தவின் தோளில் ஏறி நாடாளுமன்றம் சென்றார்.

இறுதியில் மகிந்தவை தனியாக விட்டு விட்டு, ஐக்கிய தேசியக் கட்சி யுடனான கூட்டணி அரசாங்கத்தில் இணைந்து கொண்டார். இவர்கள் வாய் மூலம் பேசுகிறார்களா? அல்லது வேறு வழியில் பேசுகிறார்களா? எனவும் நாமல் கருணாரதன கேளவி எழுப்பியுள்ளார். (இ-7)

# கடற்படையினரின் வாகனம் விபத்து

கடற்படைக்கு சொந்தமான கெப்ரக வாகனம் ஒன்று மோதியதில் பலத்த காயங்களுக்குள்ளான நபர் ஒருவர் சிலாபம் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு சிலாபம் - கொழும்பு வீதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

சிலாபம் காக்கபள்ளிய பிரதேசத்தில் வசித்த 64 வயதுடைய முதியன்சே என்பவரே விபத்தில் காயமடைந்துள்ளார்.

கொழும்பில் இருந்து சிலாபம் நோக்கி சென்ற கெப் ரக வாகனம் பாதையின் குறுக்காகச் சென்று குறித்த நபர் மீது மோதியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கெப் ரக வாகனத்தில் பயணித்த கடற்படை அதிகாரிகளை பொலிஸார் கைது செய்துள்ளதுடன், மேலதிக விசாரணைகளை சிலாபம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (இ-7)

# இணைந்திருக்கும் கட்சிகளால் சுதந்திரக்கட்சி அழிக்கப்பட்டது

## மகிந்த அமரவீர குற்றச்சாட்டு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை சுற்றி இணைந்திருக்கும் சில கட்சிகளினாலே சுதந்திரக் கட்சி அழிக்கப்பட்டதென மீன்பிடித்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் செயற்பாடுகள் இதுவரையில் அதனுடன் இணைந்துள்ள கட்சியினால் மேற்கொள்ளப்படுகின்றமையே சுதந்திரக் கட்சி அழிவடைவதற்கு காரணமாகியுள்ளது.

மகிந்த ராஜபக்ஷ மற்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு இடையில் ஒற்றுமையைக் கட்டியெழுப்ப என்னால் முடிந்தவரையில் செயற்பட்ட நிலையில் தற்போது தேசிய அரசாங்கம் ஊடாக நாட்டினுள் புரட்சியை ஏற்படுத்த வேண்டும்.



தேசிய அரசாங்கக் கருத்தானது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தனித் தீர்மானங்களினால் மேற்கொள்ளப்பட்ட ஒன்றல்ல, தலைவர்கள் இருவரின் இணக்கப்பாட்டிற்கமைய மேற்கொள்ளப்பட்டதென அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# விமான நிலையத்திலிருந்து பாதுகாப்பாக பிரிகேடியர் குணவர்தன வெளியேறினார்

இராணுவத் தளபதி பிரிகேடியர் தேசப்பிரிய குணவர்தன பாதுகாப்பாக விமானநிலையத்திலிருந்து வெளியேறினார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

வெலிவேரிய, ரதுபஸ்வல ஆர்ப்பாட்டத்தின் போது துப்பாக்கிச் சூட்டுக்கு அனுமதி வழங்கினார் எனக் கூறப்படும் இவர் இலங்கைக்கான துருக்கி தூதுவராலயத்தில் கடமையாற்றி வந்தார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இவர் இலங்கை வரவுள்ளதாக அறிந்து தெரிபெஹெ ஸ்ரீதம்ம தேரர் உள்ளிட்டோர் கட்டுநாயக்க விமானநிலையத்தில் ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்து வந்தனர்.

இதனால் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பாதுகாப்புடன், இவர் பலத்த பாதுகாப்புடன் அழைத்துச் செல்லப்பட்டார்.

இவர் கட்டார் விமான சேவைக்கு சொந்தமான விமானம் ஒன்றின் மூலம் நேற்று முன்தினம் பிற்பகல் வேளையில் இலங்கை வந்தடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

## இருக்கிறோமா? வசிக்கிறோமா?

"வாழ்க்கை" என்ற சொல்லைப் பலரும் பலகாலமாகப் பயன்படுத்தி வருகிறார்கள். ஆனால் எத்தனை பேர் வாழ்கிறார்கள்? வாழ்க்கை என்றால் என்ன என்று எத்தனை பேர் புரிந்து வைத்திருக்கிறார்கள் என்பது கேள்விக்குரியது.

'வசி' என்று ஒரு சொல் ஊண்டு. "வசிக்கிறேன்", "வசிக்கிறார்" என்றெல்லாம் பயன்படுத்துகிறோம் வசிப்பது வேறு, இருப்பது வேறு.

யாராவது 'நான் சிறையில் வசிக்கிறேன்' என்று சொல்லக் கேட்டதுண்டா? 'என்னை சிறையில் வைத்திருக்கிறார்கள்' என்று தான் சொல்லுவார்கள்.

வீட்டில் வசிக்கிறோம். சிறையில் வைத்திருக்கிறார்கள்-இரண் டிற்கும் என்ன வித்தியாசம்? நாம் நம் விருப்பப்படி ஓர் இடத்தில் இருந்தால் வசிக்கிறோம். நாம் நம் விருப்பத்திற்கு மாறாக அடை த்து வைக்கப்பட்டிருந்தால் 'வைத்திருக்கிறார்கள்' என்று சொல்லலாம்.

சிறைக்கும் வீட்டிற்கும் என்ன வித்தியாசம்? அங்கு கதவுண்டு, இங்கும் கதவு உண்டு, தாழ்பாள் தான் வித்தியாசம். வீட்டின் உட்பக்கம் தாழ்பாள். சிறையில் வெளிப்பக்கம்!

வீட்டில் நாமாகக் கதவைச் சாத்துகிறோம். சிறையில் அவர்களாக சாத்தி வைத்திருக்கிறார்கள். எனவே வசிப்பது என்பது நமது வசதி ப்படி வாழ்வது. இருப்பது என்பது நமது விருப்பத்திற்கு விரோதமாக மற்றவர் கட்டுப்பாட்டில் இருப்பது.

உலகத்தில் இன்று 'வசிப்பவர்' குறைவு. இருப்பவர் அதிகம். தமது விருப்பபடி தமது கட்டுப்பாட்டில் தம்மை வைத்திருப்பவர்கள் மிகக் குறைவு. மற்றவரை அடக்கி ஆள வேண்டும் என்று பலர் ஆசைப்படு கிறார்கள். முட்டாள்கள், தங்களையே ஆள முடியாதவர்கள், தன் விரு ப்பப்படி தானே வாழாதவர்கள், மற்றவர்களை அடக்கி ஆள்வது எப்படி? நாம் நமது நிர்வாகத்தில் இருந்தால் வாழ்கிறோம். அல்லது வசிக் கிறோம். நமது நிர்வாகத்தில் நாம் இல்லாவிட்டால் இருக்கிறோம்.

காலை ஐந்து மணிக்கு எழுந்திருக்க நினைக்கிறோம். எழுந்தால்-வசிக்கிறோம், வாழ்கிறோம், எழுந்திருக்க முடியவில்லை என்றால் இருக்கிறோம் என்று பொருள்.

வயிற்றில் அமிலம் சுரப்பு அதிகமானதால் காப்பி வேண்டாம் என்று முடிவு செய்கிறோம். காலையில் மனைவி காப்பி வேண்டுமா என்றதும் புன்னகையுடன் வேண்டாம் என்றால் நாம் வாழ்கிறோம். வசிக் கிறோம். 'இன்னிக்கு மட்டும் கொடு' என்றால் வசிக்கவில்லை இருக்கிறோம். இருந்து தொலைக்கின்றோம். இப்படி இருந்தால் நாளாக நாளாக நமக்கே நம்மை பிடிக்காது.

நாம் சொன்னபடி மற்றவர் கேட்கவில்லை என்று எரிச்சல் படுகின்றோம். குற்றப் பத்திரிகை படிக்கின்றோம். நாம் நினைத்தபடி நாமே நடக்கின்றோமா? நம்மை எந்த இ.பி.கோ.வில் உள்ளே வைப்பது? நம்மை நாமே ஆளுகிறோமா? வாழுகிறோம். வசிக்கிறோம். நம்மை நாமே ஆளவில்லை என்றால்-இருக்கிறோம். இருந்து தொலைக் கிறோம்! 'பொறிகளின் மீது தனித்தனி அரசாணை' என்று பாரதி பாடினான். நமது உத்தரவுக்கு நமது கண், காது, மூக்கு, வாய், உடம்பு கீழ்ப்படிகிறதா?

நமது பொறியுலன்கள் நமது வசத்தில் இருந்தால்-வசிக்கின்றோம். வாழ்க்கை இனிமையாக-நிறைவாக இருக்கும். நமது வசம் நாம் இல்லாத போது நாம் இருக்கிறோம். அடிமையாக இருக்கிறோம். அடிமை வாழ்வு எப்படி இனிக்கும்? எனவே நம்மை நாமே வசப்படுத்த வேண்டாமா? முடியுமா? முடியும்! ரமணருக்கும் ராமகிருஷ்ணருக்கும் முடிந்தது நமக்கு மட்டும் முடியாதா? முடியும் நிச்சயமாக முடியும்.

ஒரு வேடிக்கையான நிகழ்ச்சி சொல்கிறேன். டவுன் பேருந்தில் போக வேண்டிய ஒருவர் கையில் சில்லறை இல்லை. ஐம்பது ரூபாய் நோட்டு மட்டும் தான். சில்லறையில்லாமல் ஐம்பது ரூபாய் நோட்டை நீட்டினால் நல்லவருக்கே கோபம் வரும். ஐயாவுக்கு ஒரு யோசனை. பக்கத்தில் இருந்த பளபள ஹோட்டலில் நுழைந்தார். இன்றைய ஸ்பெஷலை நோட்டம் விட்டார். ஆஹா கோதுமை அல்வா! வாங்கிச் சாப்பிட்டார். அருமை. பிறகு ஒரு வடை, காப்பி. பில்லும் சில்லறையும் கைமாறியது. பேருந்திற்கு சில்லறை பிரச்சினை தீர்ந்தது என்று கவலை போனது.

ஒரு வாரம் கழித்து அதே வழியாக வருகிறார். கையில் சில்லறை நிறையவே இருந்தது. இருந்தாலும் ஷோகேஸில் இருந்த அல்வா அவரைப் பார்த்துக் கண்சிமிட்டியது. நான் அல்வா - அல்லவா நீ கொஞ்சம் உள்ளே வா என்று அழைப்பு விட்டது. சம்பாதித்து என்ன கண்டோம். அல்வாவாவது சாப்பிடுவோம் என்று முடிவு செய்தார். அதன் பிறகு எப்போது அந்த வழியாகப் போனாலும் அல்வா அவருக்கு ஆசை காட்டியது.

அந்த அல்வாவுக்கு ஒரு விசேடம். நாளாக நாளாக நன்றாக இருப்பது அதன் ஸ்பெஷாலிட்டி. கொஞ்ச நாள் போனதும் நண்பர்களிடம் அவர் பெருமையாகச் சொல்லிக் கொண்டார். எப்ப இந்தப் பக்கம் போனாலும் அல்வா சாப்பிடாமல் நான் போனதே இல்லை. தமது பலவீனத்தைப் பெருமை போலப் பேச ஆரம்பித்தார்.

கி.வா.ஜ.செல்வார். "முதல்நாள் அல்வாவை அவன் விழுங்கினான். அடுத்த நாள் முதல் அல்வா அவனை விழுங்க ஆரம்பித்தது" நான் அல்வா என்று நாசுக்காகச் சொன்னோன். ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு வயதில் ஒவ்வொரு பொருள் அல்வாபோல் ஆட்டி வைக்கிறது. ஆசை நமக்குள் கட்டுப்பட்டிருந்தால் குற்றம் இல்லை. ஆசை இல்லாமல் இருக்கவே முடியாது. ஆனால் ஆசைக்குள் முழுமையாக நாம் சிக்கிக் கொண்டால் யாராலுமே நம்மைக் காப்பாற்ற முடியாது. பகவான் இராமகிருஷ்ணர் இதைத்தான் அவர் பாஷையில் சொன்னார். 'படகு தண்ணீருக்குள் இருந்தால் ஆபத்து இல்லை. படகுக்குள் தண்ணீர் புகுந்து விட்டால் ஆபத்து தவிர வேறு எதுவும் இல்லை. இரண்டாவது இராமகிருஷ்ணராக நம்முடன் வாழ்ந்த திருமுருக கிருபானந்தவாரியார் இன்னும் நன்றாக விளங்குவார். நாம காரிலே ஏறலாம். கார் நம்ம மேலே ஏறக்கூடாது. தம்பி 12 பி பேருந்திலே நீ ஏறினா தேனாம்பேட்டை போகலாம். 12பி உன் மேலே ஏறின கிருஷ் ணாம்பேட்டை (சுடுகாடு) போவாய் என்பார்.

எனவே ஆசை நமக்குள் அடக்கமாக இருந்தால் நாம் வசிக்கிறோம். ஆசைக்குள் நாம் அடக்கமானால் சவ அடக்கம் போலத் தான். காப்பாற்றுவது கஷ்டம். நம்முடைய பொறிகளும் புலன்களும் நாம் சொல்வதை அப்படியே கேட்க வேண்டும். மனது நம் வசப்பட் வேண்டும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழ் சினிமா வரலாறு

09

## தமிழ்பட உலகின் தந்தை

## கே.சுப்பிரமணியம்

...ஆனால், இதை ராஜலட்சுமி பொருட்படுத்தவில்லை. விடுதலைப்போராட்டத்துக்கு நான் அளித்த சிறு காணிக்கை என்று கூறி விட்டார்.

பிறகு படங்களில் நடிப்பதை ராஜலட்சுமி குறைத்துக்கொண்டார்.

ஜீவ ஜோதி, இதய கீதம் ஆகிய வேடங் களில் தாயார் வேடத்தில் நடித்தார்.

(ராஜலட்சுமி சென்னை கீழ்ப்பாக்கத்தில் இப்போது ஈகா திரையரங்கு இருக்கும் இடத்துக்கு அருகே பெரிய பங்களாவில் வசதி யுடன் வாழ்ந்தார். கடைசி காலம் வரை கௌரவத்துடனும், வசதிகளுடனும் வாழ்ந்து மறைந்தார்).

• • • • • • • • • • • • • • •

காளிதாஸ் படம் வெளிவந்த பின், வரிசையாகப் படங்கள் வரத் தொடங்கின. தமிழ்நாடு முழுவதும் சினிமா தியேட்டர்கள் கட்டப்பட்டன. புகழ்பெற்ற நாடகங்களையெல்லாம் சினிமாவாக தயாரிக்கத் தொடங்கினார்கள். அவை பெரும்பாலும் புராணக் கதைகள்.

சினிமா என்பது சக்தி வாய்ந்த சாதனம். புகழும் பணமும் ஒருங்கே வரக் கூடிய துறை. எனவே படத் தயாரிப்பில் ஈடுபடவேண்டும் என்ற எண்ணம் படித்த இளைஞர்கள் சிலருக்கு ஏற்பட்டது.

அப்படிப் படத்தொழில் மீது ஆர்வம் கொண்டவர்களில் கே. சுப்பிரமணியமும் ஒருவர்.

தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணம் அருகில் உள்ள பாபநாசத்தில் 1904 ஆம் ஆண்டு ஏப்ரல் 20 ஆம் திகதி கே. சுப்பிரமணியம் பிறந்தார்.

தந்தை சி.எஸ். கிருஷ்ண சுவாமி அய்யர். தாயார் வெங்கலட்சுமி அம்மாள்.


கிருஷ்ணசாமி அய்யர் பெரும் செல்வந்தர். நிலக்கிழார்.

எனவே மகன் உயர் கல்வி கற்று வக்கீலாக வேண்டும் என்று விரும்பினார். அதன்படி சுப்பிரமணியம் கும்பகோணத்தில் பி.ஏ தேறிய பின் சென்னையில் சட்டக் கல்லூரியில் சேர்ந்து படித்து பி.எல். பட்டம் பெற்றார்.

இந்தக் காலகட்டத்தில்தான் ஊமைப் படங்கள் வரத் தொடங்கின. அவற்றைப் பார்த்த சுப்பிரமணியத்துக்கு சினிமா மீது ஆர்வம் ஏற்பட்டது.



பாகவதர்



கே. சுப்பிரமணியம்

எனினும் தந்தையின் விருப்பப்படி சொந்த ஊருக்குச் சென்று வக்கீல் தொழிலில் ஈடுபட்டார்.

இருப்பினும் ஆங்கிலப் படங்கள், தமிழ்ப்படங்கள், இந்திப்படங்கள் ஆகியவற்றைத் தொடர்ந்து பார்த்து வந்தார்.

ஆர்வம் அதிக மாகியது. திரைப்பட உலகில் ஈடுபட முடிவு செய்தார்.

### ராஜா சாண்டோ

அதே காலகட்டத்தில் புதுக்கோட்டையைச்சேர்ந்த தமிழர் ராஜா சாண்டோ, பம்பாயில் நடிகராகவும் டைரக்டராகவும் புகழ்பெற்று விளங்கினார்.

ஊமைப்பட காலத்தில் இருந்து சினிமாவின் சகல துறைகளிலும் பயற்சி பெற்று அனுபவம் பெற்றவர்.

தமிழ்ப் படங்களை டைரக்டர் செய்வதற்காக அவர் சென்னைக்கு வந்தார்.

ராஜா சாண்டோவிடம் ஆர்.பத்மநாபன் என்ற இன்னொரு டைரக்டரிடமும் கே. சுப்பிரமணியம் டைரக்ஷன் துறையில் நேரடிப் பயிற்சி பெற்றார்.

வக்கீல் வேலைக்குப் படித்து பட்டம் பெற்ற சுப்பிரமணியம், திரைப்படத் துறையில் நுழைந்தது அவருடைய உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் பெரும் திகைப்பை அளித்தது. வேண்டாம். விஷப்பரீட்சை என்று எச்சரித்தவர்களும் உண்டு.



எம்.எஸ்.சுப்புலட்சுமி

### முதல்படம்

காரைக்குடியைச் சேர்ந்த ஏ.எல். ஆர்.எம். அழகப்பர் செட்டியாரும் மானகிரி லேனா என்று அழைக்கப்பட்ட லெட்சுமணன் செட்டியாரும் சினிமா படம் தயாரிக்க முடிவு செய்தனர்.

(பிற்காலத்தில் எம்.ஜி.ஆர், பானுமதி, பத்மினி ஆகியோர் நடித்த மதுரை வீரன் படத்தைத் தயாரித்தவர் மானகிரி லேனாதான்)

அந்தக் காலத்தில் நாடகங்களில் பெரும்பாலும் சிறுவர்களே நடிப்பார்கள்.

அழகான சிறுவனுக்குப் பெண் வேடம் கிடைக்கும்! இந்த நாடகக் குழுக்கள் பாய்ஸ் கம்பெனி என்று அழைக்கப்பட்டன.

இந்தக் கம்பெனியில் நடிக்கும் சிறுவர்கள், நடிப்பையே முழு நேரத்தொழிலாகக் கொண்டவர்கள். இவர்கள் ஊர் ஊராகச் சென்று மாதக்கணக்கில் முகாமிட்டு நாடகங்கள் நடத்துவார்கள்.

(தொடரும்)

---

# ஆத்ம ஞானத்தைத் தேடி

ஆன்மீகம் 280

## அஹங்காரத்தை விடுதல்

......தனிமனித உருமாற்றமே உலக அமைதிக்கு மிகவும் அனுபவ சாத்தியமான ஒரு வழியாகும்.

தியானத்துடனும் குருவின் வழிகாட்டுதலுடனும் நீங்கள் கடந்து செல்லும், எவையெல்லாம் நீங்கள் இல்லையோ அவற்றை அழித்து விடும். செயல்முறையே உருமாற்றம் என்பது.

குருவின் துணையுடன் கடந்து செல்லும் இந்தச் செயல்முறை வலியும் வேதனையும் தரும் ஒன்றாகும்.


ஏனெனில், இதில் நீங்கள், நீங்கள் என்று நினைத்து உங்கள் இதயத்திற்கு அருகில் வைத்திருக்கும் பல விடயங்களையும் விட்டுவிட வேண்டியிருக்கும்.

குருநாதர், எவையெல்லாம் நீங்கள் இல்லையோ, அவற்றையெல்லாம் உங்களுக்குத் தொடர்ந்து காட்டிக்கொண்டேயிருப்பார்.

அவையெல்லாம் தானாகவே நழுவி விழுந்துவிடும். அவர் உங்களுடைய அடக்கி வைக்கப்பட்ட உணர்வுகளை வெளிக்கொணரும் சூழ்நிலைகளை உருவாக்குவார்.

நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம, அவர் உங்களிடம் செயற்பட அனுமதிப்பதே.

அவர், நீங்கள் பல பிறவிகளிலும் சேர்த்து வைத்த குப்பைகளையெல்லாம் எரித்துவிடுவார்..



நான் மக்களிடம் சொல்வது வழக்கம்... நீங்கள் விலகி ஓடிவிட முயற்சி செய்தால், இன்னொரு முறை என்னைத் தவற விட்டுவிடுகிறீர்கள்.

அதனால் தப்பி ஓடிவிட முயற்சி செய்யாதீர்கள்.

என்னுடைய கைகளை சரியாக உங்களுக்குள் மறைந்திருக்கும் கட்டிகளின் மீதுதான் வைக்கிறேன். வெறுமனே என் மீது விசுவாசம் வைத்து திறந்துகொள்ளும் தைரியத்தைப் பெறுங்கள்.

பிறகு என்னால் உங்களுடைய எல்லாக் கட்டிகளையும் குணப்படுத்தி விட முடியும்.

வெறுமனே குருவுக்குத் திறந்து கொள்வதிலேயே உங்களுடைய பாதி அஹங்காரம் உங்களை விட்டுச் சென்று விடுகிறது.

மீதியை அவர் கவனித்துக்கொள்வார். நீங்கள் கைகளை வெறுமனே நீட்டினாலே போதும். அவர் உங்களை வெளியே தூக்கி விடுவார், அவ்வளவுதான்.

நீங்கள் ஒரு சிரத்தையுடன் தேடுபவராக இருந்தால், ஒரு உருமாற்றத்திற்குத் தயாராக இருந்தால் குருவுக்குத் திறந்த நிலையில் இருப்பீர்கள்.

எல்லாம் தானாகவே நடக்கும். நீங்கள் வெறும் வேடிக்கை பார்ப்பவராக இருந்தால் பெரிதாக எதுவும் நிகழாது.

நீங்கள் வெறுமனே ஒரு குருவிடமிருந்து இன்னொரு குருவிடம் தாவிக்கொண்டு இருப்பீர்கள்;

எவரிடமிருந்தும் எதுவும் கற்றுக் கொள்ள மாட்டீர்கள். நீங்கள் தியானம் செய்யும்பொழுது தீவிரமாக தியானம் செய்யுங்கள்.

தியானத்துடன் தீவிரத் தன்மை இருக்கும்பொழுது உருமாற்றம் நிகழ்ந்தே தீரும்.

உயர் விழிப்புணர்வு ஏற்படுவது நிச்சயம். சாதாரணமாக நாம் தீவிரமாக இருக்கும்பொழுது தியானத்தைத் தவறவிட்டு விடுவோம் அல்லது தீவிரத்தன்மை இல்லாமல் தியானம் செய்வோம். (தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளுக்கிடையிலான வரைதல், கட்டுரைப் போட்டி

உலக குடியிருப்பு தினத்தை முன்னிட்டு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் பாடசாலைகளுக்கிடையிலான வரைதல,கட்டுரைப் போட்டிக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

இவ்வருடம் முதன்முறையாக மாவட்ட மட்டத்தில் பரிசுகள் வழுங்கப்படவுள்ளதால் கூடிய ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

இதற்கான அறிவுறுத்தல் மற்றும் விண்ணப்பப்படிவங்கள் அநேக பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. விண்ணப்ப முடிவுத் திகதி 2015 செப்டெம்பர் 25 ஆம் திகதியாகும். விண்ணப்பங்கள் தேவைப்படும் பாடசாலைகள் எமது யாழ்.மாவட்ட அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் அல்லது தொலைபேசி இல - 021 222 2039 என்ற தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டும் தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

ஆக்கங்களுக்கு அடிப்படையாக கொள்ளக்கூடிய விடயங்கள்.

1. வீட்டினைப் பிரதானமாகக் கொண்ட குடியிருப்பு அபிவிருத்தி
2. பாதுகாப்பான சூழலினுள்பாதுகாப்பான ஒருவாழவு
3.. பொது போக்குவரத்தும் சக்திப்பாதுகாப்பும்
4. குடிப்பதற்கு தூய்மையான நீர் மற்றும் சுகாதார வசதிகளும்
5. திண்ம கழிவுப்பொருள் முகாமை

அரசாங்க பாடசாலைகளில் அல்லது தனியார் பாடசாலைகளில் கல்வி கற்கும் பின்வரும் பிரிவிற்குட்பட்ட எந்த ஒரு மாணவ மாணவிகளும் பங்கேற்க முடியும்.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை ஊழியர்களின் பிள்ளைகள் இப்போட்டிகளில் பங்குபற்ற முடியாது.

**வரைதல் போட்டிக்கான வயதுக் குழுக்கள்**

முதலாவது பிரிவு -தரம் 03, 04, மற்றும் தரம்05, இரண்டாவது பிரிவு தரம் 06, 07, 08, மற்றும் தரம் 09 , மூன்றாவது பிரிவு தரம் 10, 11, 12, மற்றும் தரம் 13.

**ஆக்கங்களை முன்வைக்கப்பட வேண்டிய முறை**

வரைதல் போட்டிக்கான ஆக்கங்கள் 17X22 அங்குல கடதாசியில் வரையப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

இந்த வரைதலுக்காக பெஸடல், நீர்ச்சாயம், பென்சில், போன்ற எந்தவிதமான வர்ணங்களையும் பயனபடுத்தலாம்.

**கட்டுரைப் போட்டிக்குழுக்கள்**

மொழி: (1) சிங்களம்
(2) தமிழ்

முதலாவது குழு- தரம் 06 முதல் தரம் 09 வரை (300 சொற்களுக்குட்பட்டது.)

இரண்டாவது குழு - தரம் 10 முதல் தரம் 13 ஆம் வரை (500 சொற்களுக்குட்பட்டது.)

**ஆக்கங்களை முன்வைக்கப்பட வேண்டிய முறை**

முதலாவது குழு விண்ணப்பதாரிகள் 300 சொற்களுக்குட்பட்டதாக தமது கட்டுரைகளை முன்வைத்தல் வேண்டும்.

இரண்டாவது குழு - விண்ணப்பதாரிகள் 500 சொற்களுக்குட்பட்டதாக தமது கட்டுரைகளை முன்வைக்க வேண்டும்.

மாவட்ட மட்டத்தில் வெற்றியாளர்கள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கு பின்வரும் வகையில் பரிசில்கள் வழுங்கப்படும்.

முதலாமிடம்-5000 ரூபா பணப்பரிசுடன் கிண்ணமும், சான்றிதழும்

இரண்டாமிடம்-3000 ரூபா பணப்பரிசுடன் கிண்ணமும், சான்றிதழும்

மூன்றாமிடம்-2000 ரூபா பணப்பரிசுடன் கிண்ணமும், சான்றிதழும்

திறமைக்கான பரிசுகள் - 05 சான்றிதழ்களும் வழங்கப்படும்.

**வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள்**

சகல போட்டிகளுக்கும்பின்வரும் வகையில் பரிசில்கள் வழுங்கப்படும்.

முதலாமிடம்-10000 ரூபா பணப்பரிசுடன் கிண்ணமும், சான்றிதழும்

இரண்டாமிடம்-7500 ரூபா பணப்பரிசுடன் கிண்ணமும், சான்றிதழும்

மூன்றாமிடம்-5000 ரூபா பணப்பரிசுடன் கிண்ணமும், சான்றிதழும்

திறமைக்கான பரிசுகள் - 2000 ரூபா வீதம் 05 பணப்பரிசுகளும் சான்றிதழ்களும்

**வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு**

வெற்றியாளர்களுக்கான பரிசளிப்பு 2015 ஒக்டோபர் 5 ஆம் திகதி உலக குடியிருப்பு தின வைபவத்தின் போது வழுங்கப்படும்.

**ஆக்கங்களை முன்வைக்க வேண்டிய விதம்**

சகல விண்ணப்பதாரிகளும் அதற்குரிய விண்ணப்பத்துடன் தன்னால் முன்வைக்கப்படும் ஆக்கங்கள் தமது சொந்த ஆக்கங்கள் என்பதை தாம் கல்வி கற்கும் பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தி 2015 செப்டெம்பர் 25ஆம் திகதிக்கு முன்னர் தபாலில் அல்லது நேரடியாக பிரதிப்பொதுமுகாமையாளர்(தகவல் மற்றும் பிரசாரம்) தகவல் மற்றும் பிரசாரப் பிரிவு, 7ஆம் மாடி, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை,சித்தம்பலம் ஏ காட்னர் மாவத்தை, கொழும்பு 02 என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பம் இல்லாது முன்வைக்கப்படும் ஆக்கங்கள் நிராகரிக்கப்படும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் உலக குடியிருப்பு தினம் 2015 ஆக்கம் என குறிப்பிடவும் என மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ-7)


## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 100 | 100 | 90 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 90 | 80 | 100 |
| பச்சைமிளகாய் | 120 | 100 | 200 | 140 | 160 |
| தக்காளி | 60 | 40 | 80 | 50 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 60 | 50 | 50 |
| கோவா | 70 | 60 | 60 | 60 | 70 |
| கரட் | 100 | 60 | 120 | 80-120 | 70 |
| பூசணி | 40 | 30 | 40 | 40 | 30 |
| புடோல் | 40 | 30 | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 80 | 80 | 60 | 60 | 70 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 100 | 100 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 | 120 | 120 |
| பாகற்காய் | 140 | 100 | 80 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 40 | 80 | 40 | 40 |
| கருணைக் கிழங்கு | 100 | 40 | 100 | 80 | 80 |
| பயற்றங்காய் | 80 | 40 | 80 | 80 | 60 |
| லீக்ஸ் | 60 | 70 | 80 | 100 | 80 |
| பீற்றூட் | 40 | 20 | 60 | 40 | 20 |
| கறிமிளகாய் | 100 | 90 | 120 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 100 | 60 | 80 | 120 | 120 |
| போஞ்சி | 150 | 160 | 160 | 180 | 160 |
| கத்தரிதம்புள்ள | 60 | 40 | 80 | — | 80 |
| கீரை - 1 பிடி | 30 | 10 | 30 | 30 | 20 |
| தேசிக்காய் | 100 | 120 | 20 | 120 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 25-70 | 40-45 | 50 | 50 |
| இராசவள்ளி | 100 | 200 | — | — | — |
| வெங்காயப்பூ | 200 | 100 | 200 | 120 | 120 |
| முள்ளங்கி | 30 | 40 | 80 | 40 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 30 | 20 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 10 | 20 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 491

Search for people, places and things
Nagendram Home

லக்ஷனா சண்முகநாதன்




கஜி சிவா




மதீசன் கணேஸ்




யதுநயன் அபி




அஜந்தன் லவ்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதுவரை நீடிக்கும் சம்பந்தனின் பதவி?

எதிர்க்கட்சித் தலைவராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், சபாநாயகர் கரு ஜெயசூரியவினால் அறிவிக்கப்பட்ட போதிலும், அது பற்றிய சர்ச்சைகள் அரசியல் அரங்கில் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன.

எதிர்வரும் 22 ஆம் திகதி பாராளுமன்றம் மீண்டும் கூடும் போதும், இந்த விவகாரத்தைப் பிரச்சினையாக எழுப்புவதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் உள்ள மகிந்த ராஜபக்ஷ ஆதரவாளர்கள் காத்திருக்கிறார்கள்.

அவர்கள் பாராளுமன்றத்தில் தம்மை ஒரு தனி அணியாக அங்கீகரிக்குமாறும், எதிர்க்கட்சித் தலைவர் பதவியைத் தமக்குத் தர வேண்டும் என்று கோரவுள்ளதாகவும் கூடத் தெரிவித்திருக்கின்றனர்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட சபாநாயகரை மாற்றிய முன்னுதாரணம் உள்ளதாகவும் அவர்கள் கூறுகிறார்கள்.

ஆனால், சபாநாயகர் கரு ஜெயசூரிய, அவர்களை எதிர்க்கட்சியில் தனி அணியாக அங்கீகாரம் அளித்தாலும், அவர்களுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வழங்குவார் என்று கருதுவதற்கில்லை.

ஏனென்றால், வழக்கமாக பாராளுமன்றத்தில் தேர்தலில் எந்தக் கட்சியின் ஊடாகப் போட்டியிட்டார்கள், எந்தக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தினார்கள் என்றுதான் கணக்கெடுக்கப்படும்.

அவ்வாறு பார்த்தால், இவர்களால் எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு உரிமை கோர முடியாது. ஏனெனில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினர் அரசாங்கத்திலும் அங்கம் வகிக்கின்றனர். அதைவிட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி எதிர்க்கட்சியாகச் செயற்படவுள்ளதாயின், அதன் பொதுச் செயலாளர் பேராசிரியர் விஸ்வ வர்ணபால தான், எதிர்க்கட்சித் தலைவர் பதவியைத் தமது கட்சியினருக்குத் தருமாறு சபாநாயகருக்கு உரிமை கோர வேண்டும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நியமிக்கப்பட்ட அவர், அவ்வாறு கோரப் போவதில்லை.

எனவே, எதிர்க்கட்சித் தலைவராக இரா.சம்பந்தன்தான் தொடரப் போகிறார் என்பது உறுதி. என்றபோதும், இந்த விவகாரத்தை, மகிந்த தரப்பினர் சும்மா விட்டுவிடுவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

அதனால், பாராளுமன்றத்தின் அடுத்த கூட்டத்தொடரிலும் இது சலசலப்பை ஏற்படுத்தலாம். ஆனால், அது பூகம்பமாக வெடிப்பதற்கு வாய்ப்பில்லை.

இப்போது, எதிர்க்கட்சித் தலைவர் பதவி இரா.சம்பந்தனுக்கு வழங்கப்பட்டுள்ளதை, மகிந்த அணியினர் தவிர்ந்த மற்றெல்லாத் தரப்பினரும் வரவேற்கின்றனர் என்பது முக்கியமான விடயம். அதிலும் சிங்கள அரசியல்வாதிகள் பலரும் இதனை முற்போக்கான விடயமாகவே பார்ப்பதும் கவனிக்கத்தக்கது.

ஆனாலும், அவர்கள் இரா.சம்பந்தன் எவ்வாறான எதிர்க்கட்சித் தலைவராக இருக்க வேண்டும் என வெளியிடும் எதிர்பார்ப்புகளும் சரி, சம்பந்தனை எதிர்க் கட்சித் தலைவராக நியமிக்கக் கூடாது என வலியுறுத்துவோர் வெளியிடும் கருத்துகளும் சரி ஒருமித்ததாகவே இருக்கிறது.

அதில் முக்கியமான விடயம், இரா.சம்பந்தன், போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பான சர்வதேச விசாரணையை ஆதரிக்கிறார் என்பது. இரா.சம்பந்தனும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், போர்க்குற்றச்சாட்டுகள் தொடர்பாக சர்வதேச விசாரணையை வலியுறுத்துவதால், எதிர்க்கட்சித் தலைவராக பதவியில் இருக்க அருகதையற்றவர் என்று உதய கம்மன்பில, தினேஷ் குணவர்த்தன, வாசுதேவ நாணயக்கார, விமல் வீரவன்ஸ போன்றவர்கள் கூறியிருக்கின்றனர்.

எதிர்க்கட்சித் தலைவர் பதவி என்பது, பாராளுமன்றத்தில் பெறும் ஆசனங்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும் ஒரு தகுதிநிலை.

ஆனால், சர்வதேச விசாரணை என்பது ஒரு தரப்பின் நிலைப்பாடு. அது கொள்கை சார்ந்த விடயம். இந்த இரண்டையும் ஒரே கோட்டுக்குள் கொண்டு வர முடியாது.

அதுபோலத்தான், சம்பந்தனும் கூட்டமைப்பும் சமஷ்டியைக் கோருவதால் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை அவர்களுக்கு வழங்க முடியாது என்றும் இவர்கள் கூறுகின்றனர். சமஷ்டி என்பது பிரிவினை என்றும், அது நாட்டைப் பிளவுபடுத்தும் என்றும் இவர்களே தீர்மானித்துக் கொண்டுள்ளனர்.

ஆறாவது திருத்தச்சட்டத்தின் படி, பாராளுமன்றத்தில் பிரிவினைவாதக் கருத்துக்களைப் பேசவோ நாட்டைப் பிளவுபடுத்துவது குறித்துக் கருத்து வெளியிடவோ முடியாது. எல்லா பாராளுமன்ற உறுப்பினர்களிடமும் இதற்கான எழுத்து மூல உறுதிமொழி பெறப்பட்டுள்ளது.

இந்த உறுதிமொழியை ஏற்றுக்கொண்டே, இரா.சம்பந்தன் உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 16 உறுப்பினர்களும் பதவியேற்றுள்ளனர்.

எனவே, அவர்கள் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வைத்து பிரிவினைவாதம் பேச முடியாது.

சமஷ்டி என்பது உலகில் நடைமுறையில் உள்ள ஒரு ஆட்சி



முறையே தவிர, அது ஒன்றும் சட்டவிரோதமானது அல்ல.

சமஷ்டி ஆட்சிமுறையை வலியுறுத்தும் எவரும், எதிர்க்கட்சித் தலைவராக வர முடியாது என்று இலங்கையின் அரசியலமைப்பில் எங்குமே கூறப்படவில்லை.

அதுபோலவே, எதிர்க்கட்சித் தலைவர் பதவியைப் பெறும் எவரும், இத்தகைய கொள்கையைத்தான் கொண்டிருக்க வேண்டும் என்ற விதிமுறையும் கிடையாது.

1977 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில், தனிநாட்டுக் கோரிக்கையை வலியுறுத்தும், வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை முன்னிறுத்தியே வெற்றி பெற்றது தமிழர் விடுதலைக் கூட்டணி.

18 ஆசனங்களுடன் இரண்டாவது பெரிய கட்சியாக பாராளுமன்றம் சென்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப்பட்ட போது, யாரும் அவரது கட்சியின் கொள்கையைக் காரணம் காட்டி, இப்படியான எதிர்ப்பைத் தெரிவிக்கவில்லை.

இப்போதுதான், சமஷ்டி கோருபவர் சர்வதேச விசாரணையைக் கோருபவர் எதிர்க் கட்சித் தலைவராக இருக்க முடியாது என்று புதிய புதிய நிபந்தனைகளை சிங்கள பேரினவாத அரசியல் சக்திகள் முன் வைக்கின்றன.

இவை எல்லாவற்றினதும் அடிப்படை, தமிழர்களுக்கு எதிரான சிங்களப் பேரினவாதச் சிந்தனைதான்.

தமிழர் ஒருவரை எதிர்க்கட்சித் தலைவராக ஏற்றுக்கொள்ளும் பக்குவம், விமல் வீரவன்சவுக்கு, தினேஸ் குணவர்த்தனவுக்கு, உதய கம்மன்பிலவுக்கு

இல்லாமல் இருப்பது ஆச்சரியத்துக்குரிய விடயமல்ல.

சம்பிக்க ரணவக்க போன்றவர்களே அதனை ஏற்றுக்கொள்ளும் பக்குவத்தைப் பெற்றுள்ள நிலையில், வாசுதேவ நாணயக்கார போன்ற இடதுசாரித் தத்துவம் பேசுவோரால்கூட, இதனை அது ஏற்றுக்கொள்ள முடியாதிருப்பதுதான் வேடிக்கை.

தமிழர் ஒருவர் எதிர்க்கட்சித் தலைவராக வரக் கூடாது என்று நேரடியாகப் பிரசாரம் செய்தால் அது இனவாதமாக எடுத்துக் கொள்ளப்படும் என்பதால்தான், இவ்வாறு பொருத்தமற்ற நிபந்தனைகளை இவர்கள் வெளியிட்டு வருகிறார்கள்.

மகிந்த ராஜபக்ஷ அணியினர் மட்டும் தான் இதே நிலைப்பாட்டில் இருக்கின்றனர் என்று கூறமுடியாது.

மைத்திரிபால சிறிசேன அரசாங்கத்தில் உள்ளவர்களில் பலருக்கும்கூட, இதில் இணக்கம் இருப்பதாக கருதமுடியாது.

அவர்களில் பலரும், எதிர்க்கட்சித் தலைவர் பதவியை சம்பந்தனுக்கு கொடுத்துள்ளதன் மூலம், சர்வதேச ஆதரவைப் பெற்றுக் கொள்ளலாம் என்றே சிந்திக்கின்றனர்.

அவர்கள் அளிக்கின்ற ஆதரவின் பின்னால், நரித்தந்திரம் தான் இருக்கிறது.

சிறுபான்மைத் தமிழர்களால், எதிர்க்கட்சித் தலைவர் பதவியையும் பெற முடிந்திருக்கிறது. அந்தளவுக்கு தற்போதைய ஆட்சி மேனமையானது என்ற கருத்தை ஏற்படுத்த, இவர்கள் விரும்புகின்றனர்.

இது, இலங்கை மீதான சர்வதேச அழுத்தங்களைக் குறைக்கும் என்றும், அவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

அதேவேளை, எந்தக் கட்டத்தில் இரா.சம்பந்தனின் எதிர்க்கட்சித் தலைவர் பதவி, இலங்கை அரசாங்கத்துக்குப் பாதகமாக அமைகிறதோ அப்போதே அவரைத் தாம் வீழ்த்தி விடவும் தயங்கோம் என்பதையும், இவர்கள் வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

உதாரணத்துக்கு அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க வெளியிட்ட கருத்து முக்கியமானது.

எதிர்க்கட்சித் தலைவராக இரா.சம்பந்தன் பதவி அறிவிக்கப்பட்ட பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க, அதனை வரவேற்பதாக கூறியிருந்தார்.

அதேவேளை, அவர் படையினரைச் சர்வதேச விசாரணைக்கு கொண்டு சென்று தண்டிக்க முனைந்தால், அவரை எதிர்க்கட்சித் தலைவர் பதவியிலிருந்து நீக்குவோம் என்றும் எச்சரித்திருந்தார்.

இது, தமது வசதிக்கேற்றவராக இருந்தால் மட்டுமே சம்பந்தனை எதிர்க்கட்சித் தலைவராக ஏற்க முடியும் என்ற சிங்களப் பேரினவாதச் சிந்தனையைத்தான் வெளிப்படுத்தியிருக்கிறது.

சிங்கள அதிகார வர்க்கம், தமது நலன்களைப் பாதுகாப்பதற்காக மட்டுமே, இரா.சம்பந்தனை எதிர்க்கட்சித் தலைவராக இருக்க விட்டிருக்கிறதே, தவிர, தமிழர்களுக்கு சம உரிமை வழங்குவதற்காக அல்ல.

இதனைக் கொண்டு பார்க்கும் போது, சிங்களப் பேரினவாதிகளால் வரையப்பட்டுள்ள அந்த எல்லையைத் தாண்டும் போது, அவரால், எதிர்க்கட்சித் தலைவராக நீடிக்க முடியுமா என்பது சந்தேகம்தான்.

-கபில்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் சதுர்த்தி விரதம்

முழுமுதற் கடவுள் என்று போற்றப்படும் விநாயகப் பெருமானுக்கு உகந்த நாளான விநாயகர் சதுர்த்தி விரதம் இன்று வியாழக்கிழமை சிறப்பாக கொண்டாடப்படுகின் றது. சிவபெருமானின் சக்தியான விநாயகப் பெருமான் யானை முகம் கொண்டவர். அவர் நாம் தொடங்கும் சுபகாரியங்களுக்கு தடைகள் ஏதும் ஏற்படாமல் காக்கிறார்.

எனவேதான் எந்தப் பிரார்த்தனையிலும் அவர் முதலில் வணங்கப் பெறுகிறார். ஆவணி மாதம் அமாவாசை கழிந்த 4 ஆம் நாள் வரும் சதுர்த்தியன்று விநாயகர் சதுர்த்தி கொண்டாடப்படுகின்றது.

இலங்கையில் உள்ள இந்துக்கள் விரதமிருந்து அனுஷ்டிப்பார்கள். ஆனால் இந்தியாவில் மொழி வேறுபாடு இல்லாமல் அனைவரும் விநாயகர் சதுர்த்தியை பெருமளவில் உற்சாகமாக ஓர் பண்டிகை போல கொண்டாடுவார்கள். இந்தியா சென்று ஆன்மீக சுற்றுலா மூலம் தெய்வதரிசனம் செய்தவர்களுக்கு நன்கு தெரியும். சென்று வர வாய்ப்பு இல்லாதவர்கள் ஒரு சில தமிழ் திரைப்படங்கள் மூலம் பார்த்திருப்பார்கள்.



### சதுர்த்தி விரதம் இருப்பது எப்படி?

ஆவணி மாதம் சதுர்த்தி யில் தொடங்கி புரட்டாதி மாதம் புரட்டாதி மாத சுக்கில பட்ச சதுர்த்தி வரை விநாயகர் சதுர்த்தி விரதம் மேற்கொள்ளப்படுகின்றது.

இயலாதவர்கள் விநா யகர் சதுர்த்தி அன்று மட்டும் விரதம் இருக்கலாம். விநாயகர் சதுர்த்தியன்று சதுர் த்தி திதி நேரத்தில் குடும்பத்துடன் அருகில் உள்ள விநாயகர் கோயிலுக்குச் சென்று முறைப்படி விநாயகரை தரிசித்து விட்டு வந்த பிறகு பூஜைக்கு மஞ்சள், சாணம், களி மண் இவற்றில் பிள்ளையாரை உருவாக்கவேண்டும். வீட்டில் பூஜை அறையில் மரப்பலகை ஆசனம் போட்டு, அதில் சிவப்புப்பச்சை அரி சிமா கோலம் போட வேண்டும். ஒருதலைவாழைஇலையை அதன் நுனிப்பகுதி கிழக்கு அல்லது வடக்கு திசையைப் பார்க்க இருக்குமாறு (வீட்டின் திசைகளை பொறுத்து) கிழக்கு, வட க்கு மாறுபடும்.

அப்பலகையின் மேல் போட்டுள்ள கோலத்தின் மேல் வைக்க வேண்டும். அந்த இலையில் மூன்று கைபிடி அளவு சுத்தமான சிவப்பு பச்சை அரிசியை பரப்ப வேண்டும்.

அரிசியின் மேல் வலது கை மோதிர விரலால் பிள்ளையார் சுழி போட வேண்டும். அதன் கீழ் ஓம் என்று அதே விரலால் எழுத வேண்டும். உருவாக்கிய பிள்ளையாரை அந்த அரிசியின் மேல் வைத்து அருகம் புல், பூ, வெள் எருக்கம் பூ, விபூதி, சந்தனம், குங்குமம் போன்றவற்றால் அலங்கரிக்க வேண்டும்.

தொப்புளில் ஒரு ரூபாய் நாணயத்தை வைக்க வேண்டும். விநாயகர் அகவல், விநாயகர் மூல மந்திரம் விநாயகர் தொடர்பான மந்திரங்களை கூறி தூபமிட்டு, கர்ப்பூரம் ஏற்றி விநாயகரை வணங்க வேண்டும். பிள்ளையாருக்கு கொழுக்கட்டை பிரசாதம் மிகவும் பிடிக்கும். பார்வதி தேவி விநாயகர் சதுர்த்தியின் போது கொழுக்கட்டையைபடைத்தார். எனவே, விநாயகர் வழிபாட்டின் போது கொழுக்கட்டை நிச்சயம் இடம்பெற வேண்டும். விநாயகருக்கு மிகமிக பிடித்தமான அருகம்பு ல்லை அவரது திருமுடி மேல் சூட்ட வேண்டும். பூக்களில் வெள்ளெருக் கம்பூ இவருக்கு அதி விசேடமான தாகும்.

வெண்மையானவெள்ளைமாவில் தேங்காய்வெல்லபூரணத்தைவைத்து பூஜிப்பதால் நாம் பரிபூரண பிரம்மத்தை பூரணமாக காணும் நிலை ஏற்படும். அவல், பொரி, வெல்லம், கடலை, பழம், தேங்காய், எள்ளுருண்டை முதலியன விநாயகருக்கு விருப்பமான பிரசாதமாகும்.

விநாயக சதுர்த்தி பூஜைக்குப் பிறகு பூசித்த பிள்ளையாரை குளம், கிணறு, சமுத்திரம் ஆகிய ஏதாவது ஒன்றில் தண்ணீரில் விட வேண்டும். உடைக்கவோ அல்லது கரைக்கவோ கூடாது (அதனால் களிம ண்ணில் செய்வதே சிறந்தது). அப் படியே தண்ணீரில் இறக்கி விட வேண்டும். ஆண்கள் தான் இதைச் செய்ய வேண்டும். வீட்டில் விநாயகரை வைத்திருக்கும் ஒவ்வொரு நாளும் விநாயகருக்கு நைவேத்தியம் அளிக்க வேண்டும். விநாயகரின் நாபியில் வைத்த ஒரு ரூபாய் நாணயத்தை வீட்டில் பூஜை அறையில் வைத்துக்கொள்ள வேண்டும்.

இதனால் செல்வம் பெருகும். விநாயக சதுர்த்தியன்று பகலில் ஒரு வேளை மட்டும் சாப்பிட்டு இரவில் பால் குடிக்க வேண்டும்.

முருகன் மட்டுமா விநாயகரும் ஆறுபடி அப்பனாக வீற்றிருப்பதை அறிவீர்களா? தம்பி முருகனுக்கு ஆறுபடை வீடுகள் உள்ளதைப் போல அண்ணன் விநாயகருக்கும் ஆறுபடை வீடுகள் உள்ளன. அவை

1. திருவண்ணாமலை-அல்லல் தீர்க்கும் விநாயகர்
2. விருத்தாச்சலம்- ஆழத்துப் பிள்ளையார்
3. திருக்கடவூர்- கள்ளவாரணப் பிள்ளையார்
4. மதுரை-சித்திவிநாயகர், முக்குறுணிப்பிள்ளையார்
5. திருச்சி-மாணிக்க விநாயகர்
6. திருநாரையூர்- பொல்லாப் பிள்ளையார்

பிள்ளையாருக்கு பிடித்த நிவேதனம்-கடலை, பொரி,- சுண்டல், இளநீர், தேன், அப்பம், அதிரசம், முறுக்கு, சர்க்கரை, கரும்பு, விளாம்பழம், கொழு க்கட்டை, மோதகம், மிளகு, அன்னம், சர்க்கரைபொங் கல், வடை .

**சிவஸ்ரீ**
**வி.பிரணவன் ஐயர்,**
**கலட்டி ஸ்ரீ வீர கத்தி விநாயகர் தேவஸ்தானம்.**

# விடுதலைப்புலிகள் மீதான தடையை...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

நீதியரசர் எலிபி தர்மாராவ் அவர்கள் அமர்வில் விசாரணை நடைபெற்று வாதங்கள் முடிவுற்று தீர்ப்பு நிலுவையில் இருந்த நிலையில், டில்லி உயர்நீதிமன்ற நீதிபதி வி.கே.ஜெயின் தலைமையில் அமைக்கப்பட்டு இருந்த தீர்ப்பு ஆயத்தில் 2012, நவம்பர் 3ஆம் திகதி இறுதி கட்ட விசாரணையில் புலிகள் மீதான தடையை நீக்கக் கோரி வாதாடினார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் குறிக்கோளான தமிழீழம் என்பது தமிழ்நாட்டையும் சேர்த்துத்தான் என்ற காரணத்தினால் புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்டதாக மத்திய அரசு சார்பில் தெரிவிக்கப்பட்ட போது, விடுதலைப்புலிகள் உருவாக்கிய தமிழீழ நாட்டின் வரைபடம் மற்றும் தலைவர் பிரபாகரனின் மாவீரர் நாள் உரைகளை மேற்கோள்காட்டி மத்திய அரசின் குற்றச்சாட்டு பொய்யானது என்பதை வைகோ ஆணித்தரமாக வாதாடினார்.

விடுதலைப் புலிகள் தமிழ் நாட்டிலோ, இந்தியாவிலோ ஓர் அங்குல நிலத்தைக்கூட இணைக்க முயற்சிக்கவில்லை. அவர்கள் இலங்கையில் உள்ள வடக்கு மாகாணத்தையும், கிழக்கு மாகாணத்தையும் மட்டுமே தமிழீழம் என்கிறார்கள். பெரும்பான்மைத் தமிழர்கள் வசிக்கும் பகுதிகள் அவை. இலங்கையின் மற்ற பகுதிகளைக்கூட அவர்கள் கைப்பற்ற நினைக்கவில்லை என்றும் எடுத்துரைத்தார்.

2009இல் நடைபெற்ற முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தத்தில் விடுதலைப் புலிகள் இயக்கம் வீழ்த்தப்பட்டு விட்டது என்று இலங்கை அரசு கூறி வருவதை இந்திய அரசு ஏற்றுக் கொண்டிருக்கும் போது, புலிகள் மீதான தடையை இன்னும் தொடருவது ஏன்?

தமிழீழ விடுதலைப் புலிகள் சிங்கள அரசின் இன ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடிய புலிகள் இயக்கத்தின் மீது ஐரோப்பிய ஒன்றியம் விதித்த தண்டனையை எதிர்த்து லக்சம்பர்கில் உள்ள ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றத்தில் புலிகள் இயக்கத்தின் அரசியல் பிரிவு 2011 ஆம் ஆண்டில் வழக்குத் தொடுத்தது.

இந்த வழக்கில் புலிகளின் சார்பில், நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த சட்டத்தரணி விக்டர் கோப் வாதாடினார். ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரணை 2014 பெப்ரவரி மாதம் முதல் நடைபெற்று வந்தது.

விடுதலைப் புலிகள் இயக்கம் தங்கள் தாயகத்தின் விடுதலைக்காவும், ஈழத்தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் நிர்ணய உரிமையை நிலை நாட்டவும் போராடியதேயொழிய அது பயங்கரவாத இயக்கம் அல்ல என்று விக்கிபீடியா தகவல்களை மட்டும் வைத்துக்கொண்டு இயக்கத்தின் மீது தடை விதிப்பது நியாயம் அற்றது என்றும் புலிகள் இயக்கத்தின்சார்பில்முன்வைக்கப்பட்டன.

இந்த வழக்கில் 2014 ஒக்டோபர் 15ஆம் திகதி ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றம் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதான தடையை நீக்கி தீர்ப்பு வழங்கியது.

இதற்கு முன்பு, 2011 ஜூன் 23இல் நேபிள் நீதிமன்றம் புலிகள் இயக்கத்தின் மீது விதிக்கப்பட்ட தடைக்கு எதிராகத் தீர்ப்பு அளித்தது.

நெதர்லாந்து நாட்டில் உள்ள ஹேக் மாவட்ட நீதிமன்றம் 2011, ஒக்டோபர் 21இல் விடுதலைப் புலிகள் இயக்கம் பயங்கரவாத இயக்கம் அல்ல என்று தீர்ப்பு வழங்கியது.

எனவே, இந்திய அரசும் புலிகள் இயக்கத்தை விடுதலைப் போராட்ட இயக்கமாக அங்கீகரித்து அதன் மீதான தடையை நீக்க வேண்டும் என்று மாநாட்டில் வலியுறுத்தப்பட்டது. (இ-7)

# கொடிகாமம்- பருத்தித்துறை வீதியினைப் புனரமையுங்கள்

(கொழும்பு)

கொடிகாமம் பருத்தித்துறை வீதியைப் புனரமைத்து தருமாறு வடமராட்சி வடக்கு மகாத் மாகாந்தி பொதுப் பணிமன்றம் வீதி அபிவிருத்தி திணைக்களத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.


தினசரி பெருமளவானோர் மேற்படி வீதியில் பயணிப்பதாலும் மற்றும் சுற்றுலாப் பயணிகள் பருத்தித்துறைக்குச் செல்வதற்கு மேற்படி வீதியைப் பயன்படுத்துவதாலும் பெரும் அசௌகரியத்திற்கு உள்ளாகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்னுரிமை அடிப்படையில் மேற்படி வீதியை திருத்தம் செய்து தருமாறு பொதுப்பணி மன்றம் கோரிக்கை விடுத்துள் ளது. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# எறும்பு கட்டிய வீடு



அப்போதுதான் மழை பெய்து ஓய்ந்தது. மண்ணுக்குள்ளே பாதுகாப்பாய் ஆழத்தில் குடியிருந்த சிவத்தான் எறும்பு மெல்ல வெளியே வந்தது.

தன்னுடய உணர்கொம்புகளால் காற்றைத் துழாவியது. இப்போது மேல்மண் காயத் தொடங்கிவிட்டது. மறுபடியும் வேலையை ஆரம்பிக்க வேண்டியதுதான் என்று அது நினைத்தது.

இந்த மழை வருவதற்கு முன் மிகப் பெரிய புற்று கட்டியிருந்தார்கள் சிவத்தானின் கூட்டத்தார்.

வேலையாள் எறும்புகளின் அயராத உழைப்பை ராணியார் எறும்பான சிவப்புத் தலை சிங்காரியே பாராட்டியிருந்தார்கள்.

இந்த இடத்தைக் கண்டுபிடித்துச் சொன்னது சிவத்தான்தான். இதற்கு முன் அவர்கள் இருந்த புற்றில் அடிக்கடி ஒரு பாம்பு வந்து குடியிருந்துகொண்டது.

என்ன கடித்தாலும் அதற்கு சுரணையே இல்லை.

அது மட்டுமல்ல, அருகில் இருந்த கருவை மரக்காட்டில் நிறைய ஓணான்களும் இருந்தன. அவை ஒன்று மாற்றி ஒன்று புற்று வாசலில் உட்கார்ந்துகொள்ளும்.

உணவு தேடிக்கொண்டு வரும் எறும்புகளைத் தன்னுடைய நீண்ட பசை நாக்கை நீட்டி வாய்க்குள் போட்டுக்கொள்ளும்.

அதனுடைய தோலும் ரப்பர் மாதிரி இருக்கும். என்ன கடித்தாலும் வலிக்காது.

ஒருநாள் மாலை நான்கு ஓணான்கள் புற்று வாசலில் உட்கார்ந்திருந்தன. வேலையாட்களில் பாதியை அவை விழுங்கி விட்டன.

அன்றிரவு சிவத்தான் ராணி சிவப்புத்தலை சிங்காரியுடன் ஆலோசனை செய்து புதிய இடம் தேடுவதற்கான ஆணையை வாங்கியது.

அப்படி அலைந்து திரிந்து கண்டுபிடித்த இடம்தான் இந்தக் கரிசல் மண். அருகில் மரங்களோ ஓணான்களோ இல்லை. சிவத்தானுக்கு ரொம்ப சந்தோஷம்.

ஒரு நாள் இரவில் சிவப்புத் தலை சிங்காரியின் தலைமையில் அனைவரும் இந்த இடத்துக்கு வந்து புற்று மாளிகையைக் கட்டினார்கள். அந்த மாளிகையின் அமைப்பைப் பார்த்து மிகுந்த மகிழ்ச்சியடைந்தது ராணி சிவப்புத்தலை சிங்காரி.

வேலையாட்களுக்கும் அவற்றின் தலைவனான சிவத்தானுக்கும் ஒரு பெரிய வெட்டுக்கிளியைப் பரிசாகக் கொடுத்தாள்.

அதிலிருந்து சிவத்தானுக்கு ரொம்பப் பெருமை. தலையைத் தூக்கிக்கொண்டே திரிந்தது.

**(தொடரும்)**

## 09.2015 17 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1630- மசாசுசெட்ஸ், பொஸ்டன் நகரம் அமைக்கப்பட்டது.
- 1631- உரோமப் பேரரசுடனான 30 ஆண்டுகள் போரில் சுவீடன் பிறைட்டென்ஃபெல்ட் என்ற இடத்தில் பெரும் வெற்றிபெற்றது.
- 1787- ஐக்கிய அமெரிக்க அரசியலமைப்பு பிலடெல்பியாவில் கையெழுத்திடப்பட்டது.
- 1789- வில்லியம் ஹேர்ச்செல் மைமாஸ் என்ற துணைக்கோளைக் கண்டுபிடித்தார்.
- 1795- மேஜர் பிரேசர் என்பவனது தலைமையில் பிரித்தானியப் படைகள் மட்டக்களப்பை ஒல்லாந்தரிடமிருந்து கைப்பற்றினர்.
- 1809- பின்லாந்து போரில் சுவீடனுக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் அமைதி ஒப்பந்தம் ஏற்பட்டது. பின் லாந்து ரஷ்யாவிடம் கையளிக்கப்பட்டது.
- 1858- ஆழ்கடல் தொலைத்தந்திச் சேவை இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் ஏற்படுத்தப்பட்டது.
- 1929- லித்துவேனியாவில் இடம்பெற்ற புராட்சி ஒன்றில் ஜனாதிபதி ஆகுஸ்டீனஸ் வொல்டெமாரெஸ் பதவியிழந்தார்.
- 1939- சோவியத் ஒன்றியம் போலந்தின் மீது படையெடுத்து கிழக்குப் பகுதியைப் பிடித்தது.
- 1939- இரண்டாம் உலகப் போர்: பிரித்தானிய விமானம் தாங்கிக் கப்பல் ஒன்று ஜேர்மனியரால் தாக்கி அழிக்கப்பட்டது.
- 1943- இரண்டாம் உலகப் போர்: ரஷ்யாவின் பிறயான் ஸ்க் நகரம் நாசிகளிடமிருந்து விடுவிக்கப்பட்டது.
- 1956- ஆஸ்திரேலியாவில் முதன் முதலாக தொலைக்காட்சி காண்பிக்கப்பட்டது.
- 1974- வங்காள தேசம், கிரெனடா, கினி-பிசாவு ஆகியன ஐ.நாவில் இணைந்தன.
- 1976- நாசா தனது முதலாவது மீள் விண்ணோடமான எண்டர்பிறைசஸ் பற்றிய தகவல்களை வெளியிட்டது.
- 1978- இஸ்ரேல், எகிப்து ஆகியன காம்ப் டேவிட் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.
- 1980- போலந்தில் சொலிடாரிற்றி தொழிற்சங்கம் உருவாக்கப்பட்டது.
- 1991 - லினக்ஸ் இயங்குதளம் (0.01) இணையத்தில் கிடைத்தது.
- 1993 - கடைசி ரஷ்யப் படை போலந்திலருந்து வெளியேறியது.
- 1997 - பெரியார் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது.
- 2004 - இந்தியாவில் தமிழ் செம்மொழியாக அறிவிக்கப்பட்டது.


### பிறப்புக்கள்

- 1879 - ஈ. வெ. ரா. பெரியார், திராவிடர் கழகத் தந்தை (இ. 1973)
- 1897- வில்லியம் கொபல்லாவ, இலங்கையின் ஆளுநர, முதலாவது ஜனாதிபதி (இ. 1981)
- 1989 - வ. ரா., மணிக்கொடி எழுத்தாளர்
- 1906 - ஜே. ஆர். ஜெயவர்த்தனா, இலங்கையின் முதலாவது நிறைவேற்று ஜனாதிபதி, (இ. 1996)
- 1930- லால்குடி ஜெயராமன், வயலின் மேதை (இ. 2013)
- 1944 - ரைன் மெஸ்னர், இத்தாலிய மலையேறுநர்
- **1950 - நரேந்திர மோடி, இந்திய அரசியல்வாதி**
- 1974 - ரஷீத் வாலஸ், அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்

### இறப்புகள்

- 1665 - நான்காம் பிலிப், ஸ்பெயின், போர்த்துக்கல், இலங்கை மன்னன் (பி. 1605)
- 1948- ரூத் பெனடிக்ட், அமெரிக்க மனிதவியலாளர் (பி. 1887)
- 1959- கு.வன்னியசிங்கம், இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் (பி. 1911)
- 1953 - திரு வி.க.தமிழறிஞர் (பி. 1883)
- 1979 - எம். ஆர். ராதா, தமிழ்த் திரைப்பட, நாடக நடிகர் (பி. 1907)
- 1994- கார்ல் பொப்பர், ஆஸ்திரிய மெய்யியலாளர், (பி. 1902)

## நரேந்திர மோடி



நரேந்திர தாமோதர தாஸ் மோடி (Narendra Damodar das Modi 1950 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17 ஆம் திகதி, ஒரு நடுத்தர பொருளாதார வசதி படைத்த குடும்பத்தில் வடநகர் என்னும் இடத்தில் பிறந்தார.

இவர் இந்தியப் பிரதமர் ஆவார. பாரதிய ஜனதா கட்சியின் முக்கிய அரசியல்வாதிகளில் ஒருவர். இவர் அக்டோபர் 7, 2001 முதல் மே, 2014 வரை குஜராத் மாநிலத்தின் முதல்வராக பதவி வகித்தவர்.

அவர் தாமோதர்தாஸ் முல்சந் மோடி மற்றும் அவரது மனைவி ஃகீர பேன்னுக்கும் பிறந்த ஆறு குழந்தைகளில் இவர் மூன்றாவதாக பிறந்தார். தனது மனைவியின் பெயர் யசோதாபென் என 2014 ஆம் ஆண்டுக்கான வடோதரா நாடாளுமன்ற மக்களவை தொகுதி தேர்தலுக்கான வேட்பு மனுவில் குறித்துள்ளார்.

இவர் இளமைப் பருவத்திலிருந்து ராஷ்டிரிய சுயம்சேவாக் சங்கம் ஒரு உறுப்பினராகவும் உள்ளார், இளமை முதல் அரசியலில் ஆர்வம் கொண்டவர். இவர் 1998 ஆம் ஆண்டில் அரசியல் அறிவியல் முதுகலைப் பட்டம் பெற்றுள்ளார். இவர் குஜராத்து மாநிலம், இமாசலப்பிரதேச தேர்தல் பிரசாரங்களில் இயங்க அத்வானியால் தேர்வு செய்யப்பட்டார்.

அப்போதைய முதல்வர் கேசுபாய் பட்டேல் பதவி விலகியதையடுத்து நடந்த இடைத் தேர்தலில் நரேந்திர தாமோதர்தாஸ் மோடி வெற்றிபெற்று அக்டோபர் 7, 2001 இல் குஜராத்தின் முதல்வர் ஆனார்.

இவர் தன் பதவிக்காலத்தை அக்டோபர் 7, 2001 தொடங்கி ஜூலை, 2007 வரை இருந்தார். பின் டிசெம்பர் 23, 2007 தேர்தலில் மறுபடியும் வெற்றிபெற்று ஆட்சியை தொடர்ந்தார். இவர் தொடர்ந்து 2063 நாட்கள் முதல்வர் பதவி யிலிருந்து குஜராத் வரலாற்றில் சாதனை படைத்துள்ளார்.

2014ம் ஆண்டு 16ஆம் மக்களவைத் தேர்தலில் பாரதிய ஜனதா கட்சி முதன்மையேற்கும் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் பிரதமர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டார்.

2014 நாடாளுமன்ற தேர்தலுக்கு வாரணாசி மற்றும் வடோதரா ஆகிய இரண்டு நாடாளுமன்ற மக்கள வைத் தொகுதிகளில் வேட்புமனு தாக்கல் செய்தார். வடோதரா தொகுதியில் 5,70,128 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். வாரணாசி தொகுதியிலும் பெரும் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

பா.ஜ.கவின் மக்களவைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டவுடன், நாடாளுமன்றத்தின் மைய அரங்கில் உரையாற்றினார். மே 26, 2014 அன்று பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்றார்.

அவருடன் ஏனைய 44 பேர் அமைச்சர்களாக பதவியேற்றனர். புது தில்லியிலுள்ள குடியரசுத் தலைவர் மாளிகையின் வெளிமுற்றத்தில் பதவியேற்பு நிகழ்ச்சி நடந்தது. இந்த நிகழ்ச்சியில் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி, நரேந்திர மோடி மற்றும் அவரது அமைச்சரவை உறுப்பினர்களுக்கு பதவிப் பிரமாணமும், இரகசிய காப்புப் பிரமாணமும் செய்துவைத்தார்.

அமைச்சர்கள் அனைவரும் முதல் 100 நாட்களுக்குரிய தமது திட்ட அட்டவணையை தயாரிக்குமாறு கேட்டுக்கொண்டார். அனைத்து அமைச்சர்களையும், அமைச்சகத்தின் செயலர்களையும் சந்திக்க இருப்பதாகவும் தெரிவித்தார். தனது வாழ்க்கைக் கதையை பள்ளிப் பாடத்திட்டத்தில் சேர்க்க எடுக்கப்படும் முயற்சிகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தவர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எல்லா அனுபவங்களுமே கட்டங்கள் அல்ல.கட்டங்கள் கட்டுவதற்கான அடித்தளம் மட்டுமே. - ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# தமிழினப் படுகொலைக்கு சர்வதேச நீதி விசாரணை

(சென்னை)

இலங்கையில் இடம்பெற்ற தமிழினப் படுகொலைக்கு எதிராக சர்வதேச நீதி விசாரணை நடத்தக்கோரி தமிழக சட்ட சபையில் நேற்று நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தையடுத்து முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு ம.தி.மு.க. பொதுச் செயலாளர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

## வைகோ பாராட்டு

நேற்று தமிழக சட்டமன்றத்தில் முதலமைச்சர் ஜெயலலிதா நிறைவேற்றிய தீர்மானம் தமிழர்களின் மனக் காயங்களுக்கு மருந்தாக அமைந்துள்ளது.

முதலமைச்சர் ஜெயலலிதாவின் இந்த தீர்மானம் ஏழரைக் கோடி தமிழர்களின் எண்ணத்தை பிரதிபலித்துள்ளது. அவருக்கு வரலாறு வாழ்த்துச் சொல்லும். நரேந்திர மோடி அரசு, தமிழக சட்டமன்றத் தீர்மானத்தை ஏற்றுக் கொண்டு, தமிழினப் படுகொலைக்கு முறையான பன்னாட்டு விசாரணையை மனித உரிமை ஆணைக்குழுவில் வலியுறுத்தாமல், அமெரிக்க-சிங்கள அரசுகளின் சதித்திட்டத்திற்கு உடந்தையாகச் செயற்படுமானால் நரேந்திர மோடி அரசை தமிழர்கள் ஒருபோதும் மன்னிக்க மாட்டார்கள் என எச்சரிக்கிறேன் என மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# ஐ.நா அறிக்கை கண்டு நெகிழ்ந்தோம் ஐயா!

இலங்கையில் நடந்த வன்கொடுமைகள், யுத்த நிட்டூரங்கள், மனித வதைகள் தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் செயித் அல் ஹுசைன் நேற்றையதினம் தனது அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

ஜெனிவாவில் நடைபெற்று வரும் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில், இலங்கை தொடர்பான அறிக்கை நேற்றையதினம் வெளியிடப்பட்டது.

இலங்கையில் தமிழ் மக்கள் மீது அரசும் படைத்தரப்பும் நடத்திய வன்கொடுமைகள் மிக மோசமானவை என்பது சர்வதேசத்தின் முன் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. யுத்தத்தினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் தங்களுக்கு நடந்த கொடூரங்கள் மறைபட்டுப் போகுமோ என்று அஞ்சியிருந்த வேளையில்,

ஐ.நா மனித உரிமைகள் பேரவை மிகத் தெளிவாக தமிழ் மக்களின் அவலங்களை அம்பலப்படுத்தியது.

பொதுமக்களுக்கு எதிரான கொடுமைகளை யார் செய்தாலும் அவர்கள் தண்டிக்கப்படவேண்டும் என்பதுடன் அந்தக் குற்றங்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பதும் நியாயமானது.

அந்த வகையில் இலங்கை அரசும் அதன் கட்டுப்பாட்டில் இயங்கிய படைத்தரப்பும் செய்த நாசகாரங்கள், விடுதலைப் புலிகள் செய்த குற்றங்கள், படைத்தரப்போடு சேர்ந்திருந்த ஆயுதக்குழுக்கள் புரிந்த அடாவடித்தனங்கள் என்பன பட்டவர்த்தனமாக மனித உரிமைகள் ஆணையாளரால் ஜெனிவாவில் வைத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் ஜெனிவாவில் நடைபெறும் கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பில் வெளியிடப்பட்ட அறிக்கை இலங்கையின் பேரினவாதிகளுக்குப் பலத்த அடி என்பது மட்டும் நிறுதிட்டமான உண்மை.

இனவாதம் என்ற பெயரால் தமிழ் இனத்தை அழிக்கும் கொடும் செயல் இன்று சர்வதேச அரங்கில் அம்பலமாகியுள்ளது.

இது கண்டு இலங்கை ஆட்சியாளர்களும் படைத்தரப்பும் பௌத்த பீடங்களும் ஒட்டுமொத்த சிங்கள மக்களும் வெட்கித் தலை குனியவேண்டும்.

இது எங்கள் நாடு எனக் கூறிக் கொண்டு தமிழினத்தை கொன்றொழித்த கொடூரமான செயல்கள்; பாலியல் வன்மங்கள்; ஆட்கடத்தல்கள்; சித்திர வதைகள் என்ற மிக மோசமான அநியாயங்கள்–அக்கிரமங்கள் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்டுள்ளன என்ற உண்மையை உலகறியச்செய்ததன் ஊடாக, சர்வதேசத்தின் தீர்ப்பு எங்களை ஆற்றுப்படுத்தும் என்று தமிழ் மக்கள் நம்புகின்றனர். இந்த நம்பிக்கை ஒன்றுதான் தமிழ் மக்களின் இருப்புக்கான அடித்தளமாகும்.

இலங்கையில் நடந்த போர்க்குற்றம் தொடர்பான விசாரணை, ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் அறிக்கை என்பவற்றின் பின்னணியாக இருந்த அமெரிக்காவையும் அதனோடு சேர்ந்து நீதியை நிலைநாட்டப் பாடுபட்ட நாடுகளையும் தமிழ் மக்கள் கைதொழுதேத்துவர்.

அதேநேரம் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஆணையர் நேற்றையதினம் வெளியிட்ட அறிக்கையை சர்வதேசம் ஆதரித்து அதன்மூலம் தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கவும் உதவவேண்டும். இதனை அமெரிக்கா முன்னின்று செய்து தரும் என்ற ஒரே நம்பிக்கையோடு தமிழ் மக்கள் காத்திருக்கின்றனர்.

# அமெரிக்காவுக்கு எதிராக போராட்டம் தொடர்கிறது

இலங்கை போர்க்குற்றம் தொடர்பாக சர்வதேச விசாரணை தேவையில்லை என கூறிய அமெரிக்காவுக்கு எதிராக தமிழகத்தில் போராட்டங்கள் வலுப்பெற்று வருகின்றன.

இலங்கையில் நடந்த இறுதிக்கட்ட போரின்போது நடந்த குற்றங்களை அந்நாட்டு அரசே விசாரிக்க ஏற்பாடு செய்யப்படும். பன்னாட்டு விசாரணை தேவையில்லை என்று அமெரிக்க அரசு தெரிவித்தது.

அமெரிக்காவின் இந்த கருத்துக்கு தமிழகத்தில் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. கடந்த சில நாட்களுக்கு முன்பு நாம் தமிழர் கட்சியினர் கோவையில் இயங்கி வரும அமெரிக்க நிறுவனமான கே.எப்.சியை முற்றுகையிட்டனர்.

இந்நிலையில், இலங்கை போர் குறறம் தொடர்பாக சர்வதேச பொது விசாரணையை வலியுறுத்தியும், உள்நாட்டு விசாரணை போதும் எனும் அமெரிக்காவின் நிலைப்பாட்டை கண்டித்தும், நேற்று விடுதலை தமிழ் புலிகள் கட்சி மற்றும் தந்தை பெரியார் திராவிடர் கழகம் உள்ளிட்ட கட்சியினர் திருச்சியில் இயங்கி வரும் கே.எப்.சி நிறுவனத்தை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

விடுதலை தமிழ்புலிகள் கட்சியின் நிறுவுநர் குடந்தை அரசன் தலைமையில் நடைபெற்ற இந்த போராட்டத்தில், அமெரிக்கா, இலங்கை, இந்தியா உள்ளிட்ட அரசுகளை கண்டித்து கோசங்கள் எழுப்பப்பட்டன. இலங்கையில் தமிழர்கள் கொத்துக்கொத்தாக கொன்று குவிக்கும் போது அமைதியாக இருந்த அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் இந்தியாவில் தொழில் தொடங்கி தமிழர்களின் பணத்தை கொள்ளையடிக்கின்றன. தமிழர்கள் கொல்லப்பட்ட போது அமைதியாக இருந்தவர்களுக்கு தமிழன் காசு மட்டும் இனிக்கிறதா என்றும் அவர்கள் கோசங்கள் எழுப்பினர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தமிழகத்தில் அமெரிக்க நிறுவனங்கள் செயற்படக் கூடாது என கூறி கே.எப்.சி. நிறுவனத்தை முற்றுகையிட முயற்சி செய்தபோது பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இந்திய பிரதமர் மோடியும், இலங்கை பிரதமரும் சந்தித்த சூழ்நிலையிலும், ஜெனிவாவில் மனித உரிமைகள் ஆணையத்தின் கூட்டம் நடந்து வரும் சூழலிலும் தமிழ் அமைப்புகள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருவது பலரின் கவனத்தை ஈர்த்துள்ளது. (இ-7)

# சாமரவின் இடத்துக்கு லக்ஸ்மன் செனவிரட்ன

ஊவா மாகாண முதலமைச்சராக பதவியேற்றுள்ள சாமர சம்பத்தின் நாடாளுமன்ற வெற்றிடத்துக்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் செனவிரட்ன நியமிக்கப்படவுள்ளார்.

இதனை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

செனவிரட்னவே பதுளை மாவட்டத்தின் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பட்டியலில் அடுத்தவராக உள்ளார்.

எனவே அவரே நாடாளுமன்ற உறுப்பினராக பதவியேற்கவுள்ளார் என்று திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

சாமர சம்பத் கடந்த தேர்தலில் 64, 418 வாக்குகளை பெற்றார்.

லக்ஸ்மன் செனவிரட்ன ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பில் இணைந்து பின்னர் சீனி தொழிற்றுறை அமைச்சராகவும் பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சத்திய தரிசனம்



## நேர்மையே சிறப்பு

- ❖ உங்களுக்குப் பிறர் செய்த தீமை, பிறருக்கு நீங்கள் செய்த நன்மை இரண்டையும் மறந்து விட முயலுங்கள்.
- ❖ எதிர்பார்ப்பு நிறைவேறாவிட்டால் வருந்தாதீர்கள். கடவுளின் விருப்பம் இதுவே என திருப்தி கொள்ளுங்கள்.
- ❖ பண்பாடு இல்லாத மனித வாழ்வு இறக்கை இல்லாத பறவைக்குச் சமமானது.
- ❖ வானுக்கு நிலவு அழகு தருவது போல மனிதனுக்கு நேர்மையே சிறப்பைத் தருகிறது.
- ❖ எங்கும் அன்புப்பயிரை விதையுங்கள். சேவை என்னும் தண்ணீரால் அதை வளரச் செய்யுங்கள்.


# ஆக்கங்கள் கோரல்

நெடுந்தீவு பிரதேச செயலகமும் கலாசார பேரவையும் இணைந்து நெடுங்கீற்று எனும் வருடாந்த சிறப்பு இதழ் ஒன்றினை வெளியிடவுள்ளதால் அறிஞர்கள், படைப்பாளிகள், வரலாற்று நிபுணர்கள், கவிஞர்கள் ஆகியோரிடம் இருந்து படைப்பாக்கங்கள், ஆய்வுக்கட்டுரைகள் என்பன எதிர்பார்க்கப்படுவதாக நெடுந்தீவு பிரதேச செயலர் சி.ஜெயகாந்த் அறிவித்துள்ளார்.

நெடுங்கீற்று எனும் இதழை கடந்த 2013, 2014 ஆம் ஆண்டுகளில் வெளியிட்டு பலரது பாராட்டையும் பெற்றுக் கொண்டமையால் இம்முறையும் இந்த இதழை வெளியிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் நெடுந்தீவு வரலாற்று சிறப்பு, பாரம்பரிய கலை, கலாசார விழுமியங்கள், சுற்றுலாப் பயணிகளை கவர்ந்திழுக்கும் உத்திகள், பொருளாதாரம், கல்வி, தொழிற்றுறைகளை மேம்படுத்துவதற்குரிய யதார்த்தமான சிந்தனைகள், எதிர்கால வளர்ச்சித்திட்டங்கள் முதலான கருப்பொருளில் யாதாயினும் ஒன்றை பற்றியதாக ஆக்கங்கள் கோரப்படுகின்றன.

ஆக்கங்களை எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பிரதேச செயலர், பிரதேச செயலகம், நெடுந்தீவு என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)



# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## கடவுள் பக்தியில் கர்வம் இருக்கலாமா? உண்மையான பக்தி என்றால் என்ன?

அதற்கு ஒரு கதை புராணங்களில் இருக்கிறது. நாரதர் சிவனை வணங்கும் போதும் சரி, எந்த நேரமும் சரி, நான்தான் இறைவனை வணங்குவதில் பெரிய ஆள் வேறு யாரும் கிடையாது என சர்வநேரமும் சொல்லி வந்தார். இதையறிந்த சிவபெருமான் பூலோகத்தில் ஒரு சாதாரணமான ஒரு உழைப்பாளி இருக்கின்றார். அவரைச் சென்று பார்த்து வா என கட்டளையிட்டார்.

அதன்படி நாரதர் பூலோகம் வந்து பார்த்தார். அவர் அரகர என்று கூறிவிட்டு தன் வயலில் காலை நேரத்தில் வேலை செய்ய ஆரம்பித்தார். பிறகு இரவு உறங்கும் நேரத்தில் அரகர எனக்கூறிவிட்டுப் படுத்தார்.

அதன்பிறகு இறைவனிடம் சென்ற நாரதர் அவன் இரண்டு முறை தானே உங்களை நினைக்கிறான். ஆனால் நான் அப்படியில்லையே என்றார்.

உடனே இறைவன் ஒரு கிண்ணத்தில் எண்ணெய்யைக் கொடுத்து நகரைச் சுற்றிவா. ஆனால் எண்ணெய் சிந்தக்கூடாது எனக் கூறினார்.அதுபோலவே அவரும் வந்தார். இறைவன் நாரதரைப் பார்த்துக் கேட்டார். நீ எண்ணெய் கொண்டு செல்லும்போது என்னை நினைத்தாயா? அதற்கு நாரதர் எண்ணெய் ஊற்றாமல் இருப்பதிலேயே கவனம் கொண்டேன் தங்களை நினைக்கவில்லை என்றார்.

அதற்கு இறைவன் பார்த்தாயா நீ ஒரு எண்ணெய்க் கிண்ணத்தைச் சுமக்கவே என்னை மறந்துவிட்டாய். ஆனால் அவன் சம்சாரி. பெரிய குடும்பத்தையே சுமக்கிறான். போதுமா பக்தி என்பது ஆழமான உண்மையான உள்ளன்போடு இருக்கவேண்டும். கர்வம் கொண்டு இருக்கக்கூடாது என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரிதாசன், குகன் அதிரடி ஆட்டம் வல்வெட்டித்துறை ஆதிசக்தி வெற்றி










நெற்கொழு கழுகுகள்விக நடத்தும வடமாகாண ரீதியான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் 12.09.2015 அன்று நடைபெற்ற சுப்பர் 8 போட்டியில் வல்வெட்டித்துறை ஆதிசக்தி வி.க எதிர் பலாலி விண்மீன் வி.க இடையிலான முதலாது போட்டியில் 4 ஆவது நிமிடமே பலாலி விண்மீன வீரர்யுட்கனடி முதலாவது கோலினை அடித்து சிறப்பான ஆரம்பத்தினை கொடுத்தார். எனினும் போட்டியில் வெற்றி பெற்றாக வேண்டும் என விளையாடிய ஆதிசக்தி வீரர்கள் கௌரிதாசனின் காலால் முதலாவது கோலினை பெற்றுக்கொண்டனர்.

இரண்டாம் பாதி ஆட்டம் 1:1 என சமநிலையில் ஆரம்பிக்க நீண்ட நேரமாக இரண்டு அணிகளும் போராடிய போதும் கோல் பெறும் வாய்ப்புக்கள் நழுவவிடப்பட்டன. எனினும் ஆட்ட முடிவிற்கு 03 நிமிடங்கள் மீதமிருக்க ஆதிசக்தி குகன் ஒரு கோலினை பெற்றதன் மூலம் ஆட்டத்தினை 2:1 என ஆதிசக்தி வெற்றி கொண்டது. போட்டியின் ஆட்ட நாயகனாக கௌரிதாசன் தெரிவுசெய்யப்பட்டார். ஆதிசக்தி விளையாடிய 3 சுப்பர் 8 போட்டிகளில் 2 போட்டிகளில் வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது. (க)

# தேசிய இளைஞர் சேவைமன்ற 27 ஆவது தேசிய வி. விழா
















முல்லைத்தீவு மாவட்ட புதுக்குடியிருப்பு பிரதேச இளைஞர் கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் சிறப்புற இடம் பெற்றது.

இதில் 100 மீற்றர், 200 மீற்றர், 400 மீறறர் மற்றும் அஞ்ச லோட்ட போட்டியும் இடம் பெற்று பரிசில், சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து புதுக்குடியிருப்பு இளைஞர் சேவை அதிகாரி க. சிந்துஜன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் நடத்தப்பட்ட குழு விளையரட்டுக்கள் மற்றும் தடகளப் போட்டிகளில் வெற்றியீட்டிய வீரர்களுக்கான சான்றிதழ்களும் வெற்றிக்கிண்ணங்களும் வழங்கி வைக்கப்பட்டன .

அந்தவகையில் ஆண்களுக்கான துடுப்பாட்ட போட்டியிலே இரண்டாமிடத்தை பெற்ற சிறீ விக்னேஸ்வரா அணியனருக்கும் முதலாமிடத்தை பெற்ற த்ரீ ஸ்ரார் அணியினருக்கும் ஆண்களுக்கான கரப்பந்தாட்ட போட்டியிலே இரண்டாமிடத்தை பெற்ற வளர்மதி அணியினருக்கும் முதலாமிடத்தை பெற்ற ஸ்ரீ வக்னேஸ்வரா அணியினருக்கும் பெண்களுக்கான கரப்பந்தாட்ட போட்டியிலே இரண்டாமிடத்தை பெற்ற இனிய வாழ்வு அணியினருக்கும் முதலாமிடத்தை பெற்ற செந்தமிழ் அணியினருக்கும் பெண்களுக்கான வலைப் பந்தாட்ட போட்டியிலே இரண்டாமிடத்தை பெற்ற இனிய வாழ்வு அணியினருக்கும் முதலாமிடத்தை பெற்ற செந்தமிழ் அணியினருக்கும் சம்பியன்களாக தெரிவு செய்யப்பட்டவர்களுக்கும் ஒட்டு மொத்த விளையாட்டுக்களிலே புள்ளியடிப்படையிலே 56 புள்ளிகளை பெற்று மூன்றாமிடத்தைப் பெற்ற தேராவில் இளந் தென்றல் இளைஞர் கழகத்திற்கும் 61 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தைப் பெற்ற மந்துவில் ஞான ஒளி இளைஞர் கழகத்திற்கும் 115 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தைப் பெற்ற கோம்பாவில் ஸ்ரீவிக்னேஸ்வரா இளைஞர் கழகத்திற்கும் கேடயங்கள் வழங்கி வைக்கப்பட்டன. (க-281)

# பருத்தித்துறை மாதனை வி.கழக மென்பந்தாட்டச் சுற்றுப்போட்டி

## இமையாணன், மைக்கல் வெற்றி

பருத்தித்துறை மாதனை விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்படும் 10 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடர் குறித்த கழக மைதானத்தில் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் நடைபெற்ற ஆட்டத்தில் இமையாணன், மைக்கல் அணிகள் வெற்றி பெற்றுள்ளன.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் இமையாணன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சிறிமுருகன் விளையாட்டுக்கழகம் மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய இமையாணன் விளையாட்டுக்கழகம் நிர்ணயிக்கப்பட்ட 10 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 80 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. அதிகபட்சமாக ரஜீவன் 28 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் சிறிமுருகன அணி சார்பாக பிரண வன் 2 இலக்குகளையும் பிரகாஸ், சுதன், கிருபரன் ஆகியோர் தலா ஓர் இலக்கை வீழ்த்தினர்.

81 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் களமிறங்கிய சிறிமுருகன் அணி நிர்ணயிக்கப்பட்ட பந்துப்பரிமாற்றங்களின் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 50 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 31 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அதிகபட்சமாக கிருபரன் 17 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் இமையாணன் அணி சார்பாக ஜசிந்தன், பிரகாஸ் ஆகியோர் தலா 3 இலக்குகளைக் கைப்பற்றினர்.

தொடர்ந்து இரண்டாவதாக இடம் பெற்ற ஆட்டத்தில் மாலுசந்தி மைக்கல் அணியை எதிர்த்து சுன்னாகம் காந்தி ஸ்ரார் அணி மோதியது. [illegible] லில் துடுப்பெடுத்தாடிய மைக்கல் அணியின் இலக்குகளை காந்தி ஸ்ரார் அணியின் பந்துவீச்சாளர் டெமினியன் சரித்தபோதும் அந்த அணி 8 இலக்குகளை இழந்து 83 ஓட்டங்களைப் பெற்றது. அதிக பட்சமாக விபுலியன் 44 ஓட்டங்களையும் ரகு 14 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சுன்னாகம் காந்தி ஸ்ரார் அணி சார்பாக டேமினியன் 5 இலக்குகளையும் ஜசிந்தன் 2 இலக்குகளையும் விவேக் ஓர் இலககையும் கைப்பற்றினர்.

84 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய காந்தி ஸ்ரார் நிர்ணயிக்கப்பட்ட பந்துப்பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 67 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 16 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அதிகபட்சமாக யூட் 15 ஓட்டங்களையும் டெமினயன் 14 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் மைக்கல் அணி சார்பாக தினேஜன, தர்சன் இரு [illegible] (க)

# நியூட்டன் விளையாட்டுக்கழக உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

## உடற்கல்வி ஐக்கியம் வெற்றி





நியூட்டன் வி.க நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் வல்வை வி.கழகம் உடற்கல்வி ஐக்கிய வி.க எதிர்த்து போட்டியிட்டது. இதில் 1-2 என்ற அடிப்படையில் உடற்கல்வி ஐக்கியம் வெற்றியை தனதாக்கி கொண்டது இப் போட்டியில் தர்சன் மற்றும் லக்ஸ்மன் தலாஒவ்வொரு கோலினை போட்டமை குறிப்பிடத்தக்கது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் போர்க்குற்றங்கள்...

"இது ஒரே நாளில் நடைபெறுவதற்கு சாத்தியமில்லாததால் எவரும் இப்பணியின் கடினத்தைக் குறைத்து மதிப்பிடலாகாது" எனக் கூறியுள்ளார். இலங்கையின் வரலாற்றில் அரசாங்கங்கள் காணாமலாக்கப்படுதல் போன்ற செயற்பாடுகளுக்கு முற்றுப் புள்ளி வைப்போம் என உறுதிமொழி கொடுத்திருந்தாலும், குற்றமிழைத்தவர்கள் தண்டிக்கப்படாமை மற்றும் இம்மாதிரியான துஷ்பிரயோகங்கள் இடம்பெறுவதற்கு வழிவகுத்த கட்டமைப்புகளில் உள்ள பிரச்சினைகளை வேரோடு அகற்றாமையினால், வெள்ளை வான்கள் தேவையான தருணத்தில் மீண்டும் நடைமுறைப்படுத்தப்பட்டன. இவ் அரசாங்கம் இத்தனித்துவமான வாய்ப்பைக் கைப்பற்றி குற்றமிழைத்தவர்கள் தண்டனையிலிருந்து தப்புவதனை இல்லாதொழிக்க வேண்டும், அரச நிறுவனங்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் செயற்படும் விதங்களில் அடிமட்டம் தொடக்கம் உயர்மட்டம் வரை மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும்.

கடந்த முப்பதாண்டு காலமாக இடம் பெற்ற மனித உரிமை மீறல்களுக்கு நீதி மற்றும் நிவாரணங்களை பெற்றுக் கொடுப்பதற்காகவும், இம்மீறல்கள் மீண்டும் நடைபெறாது என்று உத்தரவாதமளிப்பதற்கும் ஒரு முழுமையான இடைக்கால நீதிக் கொள்கையை உருவாக்குமாறு இவ்வறிக்கை பரிந்துரை செய்கின்றது.

உண்மையை மறுக்குமொரு நிலையிலிருந்து, உண்மையை ஒப்புக்கொள்ளும் நிலைக்கு வந்து, ஆக்கபூர்வமான கலந்துரையாடலின் மூலம் ஒரு மாற்றத்தைக் கொண்டுவருவதற்கு இவ்வறிக்கையை ஒரு வாய்ப்பாக நோக்குபடி புலம்பெயர் வாழ் மக்கள் உட்பட, சமூகத்தின் அனைத்து தரப்பினரையும் உயர்ஸ்தானிகர் கேட்டுக்கொண்டுள்ளார்.

பல வருடங்கள் தொடர்ச்சியாக நடைபெற்ற மனித உரிமை மீறல்களினாலும், குற்றமிழைத்தவர்கள் தண்டனை பெறாது தப்பிப்பது சாதாரண மயமாக்கப்பட்டமையினாலும், இருதரப்பிலும் பாதிக்கப்பட்டவர்களின் மனவடுக்கள் சீழ் கூட்டி ஆழமாக பதியப்பட்டுள்ளன என்று சையிட் கூறினார். அடிப்படை மாற்றங்களைக் கொண்டுவந்து இக்காயங்களை ஆற்றாவிட்டால், இவர்களின் தொடரும் வேதனையானது சமூகங்களுக்கிடையில் மேலும் பிளவுகளை ஏற்படுத்தி, நல்லிணக்கத்திற்கு ஒரு தடையாக அமைவது மட்டு மல்லாது எதிர்காலத்தில் புதிய முரண்பாடுகளுக்கும் வழிவகுக்கும். அரச அதிகாரிகள் மற்றும் நிறுவனங்களின் மீது பலதரப்பினருக்கும் இருக்கும் அவநம்பிக்கையினை குறைத்து எடைபோடலாகாது என உயர்ஸ்தானிகர் கூறினார்.

இக்காரணத்தினால் சர்வதேச நீதிபதிகள், வழக்குத் தொடுப்பவர்கள், சட்டத்தரணிகள் மற்றும் விசாரணையாளர்களை உள்ளடக்கிய ஒரு கலப்பு சிறப்பு நீதிமன்றத்தை ஸ்தாபிப்பது முக்கியமாகும். ஒரு தனித்த உள்நாட்டு நீதிமன்ற செயல்முறை பல தசாப்த காலங்களாக நடைபெற்ற உரிமை மீறல்கள், முறைகேடுகள் மற்றும் உடைத்தெறியப்பட்ட வாக்குறுதிகளால் உருவாக்கப்பட்ட நியாயமான சந்தேகங்களை நிவர்த்தி செய்ய மாட்டாது.

மக்களின் நம்பிக்கையை வென்றெடுப்பதற்காக உள்நாட்டு குற்றவியல் நீதிக்கட்டமைப்பு, சீர்திருத்தப்பட்டு வலுவாக்கப்பட வேண்டும். ஆனால், இச்செயல்முறையைப் பூர்த்தி செய்வதற்கு பல்லாண்டு காலம் தேவைப்படும். ஆகையால், இச்சீர்திருத்தம் சிறப்புக் கலப்பு நீதிமன்றத்தை ஸ்தாபிப்பதற்கு இணைவாக செயற்படுத்தபட வேண்டும், அன்றி அதற்குப் பதிலாக அல்ல. இவ்வகையான கலப்பு நீதிமன்றம், தேவையான சீர்திருத்தங்களை ஊக்குவித்து, பொது மக்களின் நம்பிக்கையையும் பெற்று, இலங்கை யை நீதியான ஒரு புதிய பாதையில் இட்டுச்செல்லலாம்.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகரின் அலுவலகத்திற்கு (OHCHR) 2014ஆம் ஆண்டு மனித உரிமை பேரவை, இலங்கையில் இருதரப்பினராலும் 2002ஆம் ஆண்டிலிருந்து 2011ஆம் ஆண்டுவரை இழைக்கப்பட்ட பாரிய மீறல்கள், மனித உரிமை துஷ்பிரயோகங்கள் மற்றும் அதைச் சார்ந்த குற்றங்களை விரிவாக விசாரணை செய்யும் பொறுப்பைக் கொடுத்தது. இந்த விசாரணையின் அறிக்கை,

நேரடிச்சாட்சியங்கள், பாதிக்கப்பட்டோர் மற்றும் வேறு சாட்சியங்களோடு நடத்தப்பட்ட நேர்காணல்கள், இராணுவ மற்றும் தடயவியல் நிபுணர்களால் பகுப்பாய்வு செய்யப்பட்ட ஒளிப்பதிவுகள், புகைப்படங்கள், செய்மதிப்புகைப்படங்கள் (இவற்றில் பல பொதுமக்களின் பார்வைக்கு /பயன்பாட்டிற்கு எட்டாதவகையிலுள்ளன), ஆவணங்கள் மற்றும் அறிக்கைகள் ஆகியவற்றை பரிசீலனை செய்து (இவற்றில் மூவாயிரம் வாக்குமூலங்கள், சமர்ப்பிப்புகள் மற்றும் வெளியிடப்படாத அறிக்கைகளும் உள்ளடங்கும்) இவ்விசாரணை அறிக்கை தயாரிக்கப்பட்டது. OHCHR விசாரணைக்குழு இலங்கைக்கு விஜயம் செய்வதற்கு அனுமதிக்கபடவில்லை. இதற்கு மேலாக, முன்னாள் அரசாங்கம் அச்சுறுத்தல்கள், மிரட்டல்கள் மற்றும் கண்காணிப்புகளால் இவ்விசாரணையுடன் மக்கள், முக்கியமாக வடக்கிலிருப்போர், ஒத்துழைப்பதை தடை செய்தமை ஒரு சவாலாக அமைந்தது. (எ-4)

## சர்வதேச...

துக்கு எதிரான குற்றங்களும் செய்யப்பட்டிருப்பதாக கூறும் ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கை நேற்று வெளியாகியிருக்கும் நிலையில் அமைச்சர் ராஜித சேனாரத்ன இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

சர்வதேச நிபுணர்களை அழைத்துவருவது தொடர்பாக எந்தப் பிரச்சினையும் இல்லை.

இலங்கையில் தற்போது நீதித்துறை சுயேச்சையாக இயங்குவதாகவும் தெரிவித்திருக்கிறார். அரசுக்கு எதிராக பல தீர்ப்புகள் வழங்கப்பட்டிருப்பதைப் பார்த்தாலே இது புரியும் என்றும் கூறியுள்ளார்.

போர்க் குற்றங்களை யார் செய்திருந்தாலும், ஜனாதிபதி, பிற தளபதிகள், பாதுகாப்புச் செயலர் என யார் சம்பந்தப்பட்டிருந்தாலும் நடவடிக்கை எடுக்க தங்கள் அரசு தயாராக இருக்கிறது என்றும் ராஜித சேனாரத்ன கூறினார்.

போரின்போது என்ன நடந்தது என்பது குறித்து முழுமையான தகவல்களைப் பெற, தென்னாபிரிக்காவில் அமைக்கப்பட்டதைப் போல எல்லாத் தரப்பினரையும் உள்ளடக்கிய உண்மை அறியும் ஆணையம் ஒன்றை அமைப்பது குறித்தும் ஆலோசிக்கப்பட்டுவருவதாகவும் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அமைக்கப்பட்டபோது, சர்வதேச சமூகமும் தமிழ் சமூகமும் அதனை ஏற்றுக்கொள்ளவில்லையென்றும் ஆனால், அதன் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டபோது அதனைச் செயல்படுத்த வேண்டுமென இருதரப்புமே கோரினார்கள் என்றும் சுட்டிக்காட்டிய ராஜித சேனாரத்ன, விசாரணை சரியான முறையில் நடைபெற்றால் தமிழ் சிறுபான்மையினரின் நம்பிக்கையை பெற முடியுமென்றும் குறிப்பிட்டார்.

எந்தத் தாமதமுமின்றி விரைவிலேயே தேவையான ஆணையங்கள் அமைக்கப்பட்டு, நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்றும் ராஜித சேனாரத்ன தெரிவித்தார். (எ-12)


## சோனியா-ராகுல்...

கைக்கு வருவதற்கான வாய்ப்பு உள்ளதாக, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பின் பேரிலே இவர்கள் வருவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், பிரதமரின் இவ்வழைப்பானது இந்திய முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்குக்கும் விடுக்கப்பட்டுள்ளதாக நம்பத்தகுந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

# கிரிக்கெட் மைதானங்களில் சங்கக்காரவை இழக்கிறோம்:இந்தியப் பிரதமர் மோடி கவலை





கிரிக்கெட் மைதானங்களில் இலங்கை அணியின் முன்னாள் தலைவர் குமார் சங்கக்காரவை தாம் இழப்பதாக இந்திய பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு இலங்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தார். இந்நிலையில் செய்தியாளர் சந்திப்பின் போது பேசிய இந்திய பிரதமர் நரேந்திர மோடி, சமீபத்தில் முடிந்த இந்திய- இலங்கை கிரிக்கெட் தொடர் இரு நாடுகளுக்கும் இடை யே அரசியல் ரீதியான நட்புறவை ஏற்படுத்தியதாக தெரிவித்துள்ளார்.

மேலும், இவ்வாறான சூழ்நிலையில் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து அண்மையில் ஓய்வுபெற்ற இலங்கை அணியின் முன்னாள் தலைவர் குமார் சங்கக்காரவை கிரிக்கெட் மைதானங்களில் தாம் இழப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். சமீபத்தில் இந்திய- இலங்கை அணிகளுக்கு இடையே நடந்த 2ஆவது டெஸ்ட் போட்டி யோடு 15 வருட சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கையில் இருந்து விடை பெற்றார் சங்கக்கார. (க)

# இங்கிலாந்து அணியின் ஆலோசகராக மஹேல ஜெயவர்த்தன நியமனம்

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் துடுப்பாட்ட ஆலோசகராக இலங்கை அணியின் முன்னாள் நட்சத்திர வீரர் மஹேல ஜெயவர்த்தன செயற்படவுள்ளார்.

இங்கிலாந்து மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் ஐக்கிய அரபு எமிரேட்சில் நடைபெறவுள்ளது.

இந்த தொடருக்காக இங்கிலாந்து அணியின் துடுப்பாட்ட ஆலோசகராக ஜெயவர்த்தன செயல்படவிருப்பதாக இங்கிலாந்து கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

அதேபோல் கொலிங்வூட் ஒருநாள் மற்றும இருபது-20 போட்டிகளுக்கான ஆலோசகராக செயற்படுவார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

இதேவேளை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, மாநில பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சர் தர்மேந்திரா பிரதான் மற்றும் இந்திய புகையிரத சேவை அமைச்சர் சுரேஷ் பிரபு ஆகியோரையும் நேற்று மாலை சந்தித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (எ-11)

## ஐ.நாவின் அறிக்கை...

குறித்த அறிக்கை தொடர்பில் சுமந்திரன் கருத்து தெரிவிக்கையில்,

இலங்கை இராணுவம் இறுதிப் போரில் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொண்ட மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் குறித்து தமிழ் மக்கள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்த விடயங்களுக்கு இன்று தீர்வு கிடைத்துள்ளது.

கூட்டமைப்பினர் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்துள்ள பல விடயங்கள் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. நீதியான விசாரணையை நடத்தக் கோரி கலப்பு நீதிமன்றம் உருவாக்க வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

இது சர்வதேச சட்டங்களுக்கு அமைய மேற்கொள்ளும் நீதி விசாரணையாகும். இது போன்ற நீதிமன்ற அமைப்பு முறை பல நாடுகளில் காணப்பட்டது. ஆகவே இதனை இலங்கை அரசாங்கம் சபைக்கு கொடுத்த வாக்குறுதிக்கு அமைய நடை முறைப்படுத்த வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார். (எ-11,12)

## ஐ.நா...

தேர்ந்தெடுத்தால அதற்கு சர்வதேச அளவில் மிகப் பெரிய நல்லெண்ணம் கிடைக்கும். அதை இலங்கை விரைவில் செய்யும் என்பதுதான் எங்கள் நம்பிக்கை என்றார். (எ-11)

## ஐ.நா.அறிக்கை...

முடியும் என நாம் நம்புகின்றோம்.

நேற்று ஐக்கிய நாடுகள் சபையின் மனித வுரிமை ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையை வரவேற்பதுடன், இதுவரை காலமும் இலங்கை தொடர்பான விவகாரங்களை மையப்படுத்தி செயற்பட்டவர்களுக்கும் ஆணைக்குழுவினருக்கும் நாம் மதிப்பளிக்கின்றோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (எ-12)

## நாடு திரும்பினார்...

கொழும்பை வந்தடைந்தார்.

பிற்பகல் 4.45 மணியளவில் இந்திய விமான சேவைக்கு சொந்தமான AI 275 எனும் விமானத்தின் மூலம் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தார்.

கடந்த 14ஆம் திகதி இலங்கையிலிருந்து புறப்பட்ட அவர், நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இந்தியாவின் பிரதமர் மோடியைச் சந்தித்ததுடன் நேற்று ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியுடனும் உத்தியோகபூர்வ சந்திப்பை மேற்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இது தவிர பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்திய விஜயத்தின் போது பல்வேறு முக்கியஸ்தர்களுடனும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)


## தாவடி ஸ்ரீ அம்பலவாண தேவ விநாயகர் ஆலய ஆவணிச் சதுர்த்தி திருவிழா



இன்று காலை 9.00 சகஸ்ர சங்காபிஷேகம் (1008) இடம்பெறும்.

மாலை 4.30 அபிஷேகம் இடம் பெற்று பூசைகளைத் தொடர்ந்து 6.00 மணிக்கு வசந்த மண்டப பூசை இடம்பெற்று விநாயகப் பெருமான் உள்வீதி வலம் வந்து மின்சார தீபங்களால் அலங்கரிக்கப்பட்ட திருமஞ்சத்தில் விசேட மேளக் கச்சேரியுடன் வெளிவீதி வலம் வருவார்.

ஆகவே விநாயக அடியார்களே!

இந்நிகழ்வில் கலந்து கொண்டு விநாயகப்பெருமானிடம் இஷ்ட சித்திகளைப் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

தாவடி வேத விநாயகர் ஆலயத் தொண்டர்கள்

(சி-2206)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச நீதிபதிகளின்...

இலங்கையில் இந்த வன் செயல்களுக்கு காரணமான பல கட்டமைப்புக்கள் இன்னமும் தொடருகின்ற நிலையில் அங்கு இவற்றை விசாரிப்பதற்கான உள்நாட்டு பொறிமுறைகள் தொடர்ச்சியாக தோல்வியடைந்து வந்துள்ளதாக கூறியுள்ள ஐநா அறிக்கை, இதனால் பாதிக்கப்பட்டவர்கள் மத்தியில், ஐயப்பாடும், கோபமும், நம்பிக்கையீனமும் அதிகரித்திருப்பதாகவும் கூறியுள்ளது.

உள்நாட்டுப் பொறிமுறை மூலம் இவற்றை விசாரிப்பதற்கான புதிய அரசாங்கத்தின் கரிசனை குறிப்பிடத்தக்கதாக இருந்த போதிலும், இலங்கையின் நீதித்துறை இன்னமும் இதற்கு தயாரானதாக இல்லை என்றும் ஐநா கூறியுள்ளது.

பாதிக்கப்பட்டவர்கள், சாட்சிகளுக்கு போதிய பாதுகாப்பின்மை, இந்த அளவு பாரிய சர்வதேச குற்றங்களை விசாரிக்கும் அளவுக்கு உள்நாட்டு நீதிக்கட்டமைப்பு போதாமை, தசாப்தகால அவசர நிலை, மோதல் மற்றும் குற்றத்துக்கு தண்டிக்கப்படாத நிலை ஆகியவற்றால் இலங்கையின் பாதுகாப்புத்துறை மற்றும் நீதித்துறை சீர்கெட்டு, ஊழல் மயப்பட்டு இருப்பதும் இவற்றை உள்நாட்டில் உரிய வகையில் விசாரிக்க முடியாமல் போனமைக்கான காரணம் எனறும் ஐ.நா அறிக்கை கூறுகின்றது.

கடந்த ஜனவரி முதல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் சாதகமான நடவடிக்கைகளை பாராட்டியுள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் செயித் அல் ஹுசைன், இலங்கை அடக்குமுறை சார்ந்த கட்டமைப்புகளையும், நிறுவன கலாசாரத்தையும் கலைக்கும் நட வடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டிருக் கிறார்.

(விரிவான அறிக்கை 4ஆம பக்கத்தில்) (எ-11)

# ஐ.நாவின்...

கொடுப்புகள் தேவைப்படலாம். எனவே பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும் என்றார் .

ஆனால்மனித உரிமைக்ஆணையக்குழுவின் தீர்மானங்கள் நாடுகளைக் கட்டுப்படுத்துபவை அல்ல. அவை சட்டங்கள் அல்ல. ஆனால் அவை, உலகின் மிக உயர்ந்த மனித உரிமை அமைப்பின் கருத்து. எனவே இந்த அமைப்பில் உள்ள இலங்கையின் சக நாடுகள் அடுத்து என்ன நடக்கும் என்பதை முடிவு செய்வார்கள். அதேபோல் மனித உரிமை ஆணைக் குழுவில் இயற்றப்படும் தீர்மானங்கள் எல்லாம் ஐ.நா மன்ற பொதுச் சபைக்கும் கொண்டு செல்லப்படும். எனவே இது சர்வதேச நாடுகளின் கவனத் தில இருக்கும். எனவே இந்த அறிக்கைக்கு எந்த அளவு ஆதரவு இருக்கிறது என்பதைப் பொறுத்துத்தான் எல்லாம் நடக்கும் என்றார் கோல்வில்.

இலங்கை இத்தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள மறுத்தால் என்ன நடக்கும் என்று கேட்டதற்கு பதிலளித்த கோல்வில், அதைப் பற்றி மனித உரிமை ஆணைக்குழுதான் முடிவு செய்யவேண்டும். ஆனால் அந்த விஷயத்தில் மற்ற பலரும் தலையிடுவார்கள். சர்வ தேச ஊடகங்கள், தன்னார்வ நிறுவனங்கள் எல்லாம் இதை கையிலெடுக்கும். இந்த விஷயம் இந்த அளவுக்கு வந்ததற்கே தன்னார்வக்குழுக்கள் ஒரு காரணம். இது முடிவல்ல. இது ஒரு ஆரம்பமாகத்தான் இருக்கும். இலங்கையில் நடந்ததைக் கணக்கிலெடுத்துக்கொண்டு, அது குறித்து அனைத்து சமுதாயங்களையும் திருப்திபடுத்தும் வகையில் நடவடிக்கைகளை எடுத்து, மேலே செல்ல இது ஒரு உண்மையான சந்தர்ப்பத்தை தருகிறது. அந்தப் பாதையை இலங்கை

23ஆம் பக்கம் பார்க்க....

# இலங்கை மீது...

காட்டுகிறது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைதொடர்பில்தமிழக சட்ட சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை குறித்து கேட்கப்பட்ட போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபை இலங்கையின் போர்க்குற்றங்கள் மனித உரிமை மீறல்கள் குறித்து நிறைவேற்றிய பிரேரணையின் உள்ளடங்களையும் அதனை அடிப்படையாகக்கொண்டும் தமிழக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இப்பிரேரணை தமிழக சட்ட சபையில் அனைவரது ஏகோபித்த ஆதரவுடன் நிறைவேற்றப் பட்டுள்ளமை வரவேற்கத்தக்கதாகும்.

இதிலிருந்து இலங்கை மற்றும் தமிழக தமிழர்கள், சர்வதேச விசாரணையொன்று இலங்கை மீது முன்னெடுக்கப் படுவதன் மூலமே போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதி கிடைக்கும் என்பதை சர்வதேசத்துக்கு கூறியுள்ளார்.

எமக்காக எம்மக்களுக்காகதொடர்ந்தும் குரல்கொடுத்து வரும் அம்மா அவர்களுக்கு எமது மன மார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்வ தோடு இனிவருங்காலங்களிலும் ஈழத் தமிழர்களுக்காக அவர் குரல்கொடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார். (எ-4)


## Diploma In Spoken English

புதிய பிரிவு ஆரம்பம்

19.09.2015 @ 3.00மணி

(இப்பாடநெறியானது சனி, ஞாயிறு தினங்களில், மாலை 2.30 - 5.00 வரை இடம்பெறும்)

ஆங்கில மொழியைக் கற்பித்துப்பேச வைப்பதில் வடமாகாணத்தில் முதன்மை ஆங்கிலக் கல்லூரி

உலகத்தரம் வாய்ந்த சான்றிதழ்கள்

University of Cambridge (UK) Certificates
CITY & GUILDS (UK) Certificates
E-CITY Diploma in English Certificates

City & Guilds

அனுமதிகள் வழங்கப்படுகின்றன

E-CITY COLLEGE OF ENGLISH
இல.372, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ். 0773400418/0212217106
(C-2180)



## 31ஆம் நாள் நினைவும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

### அமரர் அமரசிங்கம் தர்மகுலசிங்கம்



18.08.2015 அன்று சிவபதம் அடைந்த எமது குடும்ப தலைவர் அமரசிங்கம் தர்மகுலசிங்கம் அவர்களின் மோட்சதீப நிகழ்வுகளும் வீட்டுக் கிருத்தியமும் இன்று 17.09.2015 வியாழக்கிழமை அன்னாரது வதிவிடமான இல.100, யாழ்.வீதி, வவுனியாவில் நடைபெறுகிறது. இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(சு-2205)

இல.100,
யாழ். வீதி. வவுனியா.

தகவல்:-குடும்பத்தினர்
தொ.பே:-0779485730



## ஜீவக வாத தைலம்
Jeewaka Vata Thailaya

முதுகு வலி, கீழ் முள்ளந்தண்டு வலி, தசை வலி, கெண்டை புரளுதல், முழங்கால் வலியும் வீக்கமும், மூட்டுவாதம், விரல்கள், கை, கால், விறைப்பு, மூட்டுவலி, தகர்வுகள், உலுக்கு, வீக்கம், ஊமை உலுக்கு,அரிப்பு, எரிவு, நரம்பு சார்ந்த வலி, பாரிசவாதம், கால் பாதம் கடித்தலும் வீக்கமும், வாதம், மரத்துப் போதல் ஆகிய நோய்களுக்கு உடனடி நிவாரணத்தை வழங்கும். வெளிப்புறப் பூச்சுக்கு மாத்திரம். காயங்களில் பூசுவதைத் தவிர்க்கவும்.

25ml-150ரூபா | 50ml-280ரூபா | 100ml-450ரூபா

Manufactured & Marketed by
Jeewaka Herbals
No.17/3, wedagedara'Koskandawala yakkala
Ayu Lic No.6/2/1/02/11BR NO.W/Au/L/3621.
Contact: 071 227 1526

ஏக விநியோகஸ்தர்கள்,
சிவா நறுமணப் பூங்கா,
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 2567
(C-2179)



## புவியியல்

புதிய பிரிவு AL 2017
தேர்ச்சி 1
19.09.2015
சனி 10.00 மணி
12.00 மணி

P.S குமரன்
B.A (Hons)
பொருளியற் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(C-2207)



## மீண்டும் வளன்புரம் கொழும்புத்துறையில்

அமலன் மாஸ்ரர்
Amalan Master

பாடசாலை, பல்கலைக்கழகம், தொழில்நுட்ப கல்லூரி, மாணவர்களுக்கு, அலுவலக உத்தியோகத்தர்கள் அனைவருக்குமான

ENGLISH, SINHALA

தெளிவாக எழுத, பேச தொடர்பாடல் முறை தெளிவாகக் கற்பிக்கப்படும்.

தொடர்பு : 021 4925 989
021 4920 191
(C-2204)



## வேலையாள் தேவை

அசைவ ஹோட்டல் ஒன்றுக்கு உதவியாளர் ஒருவர் உடனடியாகத் தேவை.
(1807)

தொடர்பு : 077 125 8072



## உங்கள்வியாபாரத்தின்அடுத்த படி வளர்ச்சிக்கு...!

வியாபார கணனி மயமாக்கல் மற்றும் இதர கணக்கியல் சேவைகளை பெற்றுக்கொள்ள அழையுங்கள்.

076 620 2313
Symart Tec
(1803)





Work with PR
CANADA

Degree/Diplomaவுடன்குறைந்தது ஒரு வருடதொழில் அனுபவம்

கனேடிய அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ பிரதிநிதி ஊடாக 100% பாதுகாப்பான சேவை

SIKARAM
Any Visa to Any Country
0777 32 4004
021 222 0011
(C-2208)

இல.275-2/1. மணிக்கூட்டுக்கோபுர வீதி. யாழ்ப்பாணம்.
வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்தில் இருந்து 100m



## மாணவர்களே! சிந்தனைக்கு 1 நிமிடம்



### சர்வதேச தரச் சான்றிதழ் என்றால் என்ன?

சர்வதேச தரம் வாய்ந்த சான்றிதழ் என்றால்
Pearsan edexcel - UK
PEARSON edexcel advancing learning, changing lives

இச் சான்றிதழினை தகவல் தொழில்நுட்பம், வியாபார முகாமைத்துவம், விருந்தோம்பல் முகாமைத்துவம் மற்றும் ஆங்கில டிப்ளோமாக் கற்கை நெறிகளிற்கு வலுவான சான்றிதழ்களை ESOFT இடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.
குறிப்பாக இவ் வலுவான சான்றிதழ்களை

கிளிநொச்சியில் வழங்குவது ESOFT மட்டுமே...!

எனவே உங்கள் கற்கை நெறிகளை வலுவான சான்றிதழுடன் பெற்றுக்கொள்ள ESOFT கிளிநொச்சி கிளையை நாடுவது உங்களிற்கு பெறுமதிமிக்கதும் கௌரவத்திற்குரியதுமாகும் என்பதில் ஐயமில்லை...!

0766 442214

வங்கித்துறை மற்றும் நிதி நிர்வாக அலுவலகங்களிலும் வேலைவாய்ப்பினை உறுதிப்படுத்தும்

கற்கைநெறி

DiCA PEARSON edexcel

Diploma in Computerized Accounting



வலுவான இரட்டைச் சான்றிதழ்
ESOFT + Pearson (UK)

NEW OFFER

ENGLISH FREE
ஆங்கிலக்கற்கைநெறி முற்றிலும் இலவசம்

பதிவுகளை
இம் மாதம் 20ம் திகதிக்கு
முன்னர் மேற்கொள்ளுங்கள்
(C-2181)

21.09.2015 | 23.09.2015 New Batches

ESOFT METRO COLLEGE
Shaping Lives, Creating Futures.
No.01, Kanagapuram Road, Kilinochchi, Sri Lanka.
Hotline : 076 6442214 Tel : 021 - 228 5444

இலங்கையின் மிகப்பாரிய உயர்கல்வி வலையமைப்பு


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.09.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org